# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-15
Issue-5

மே-2022 ஷவ்வால்-1443

விலை ரூ. 20/-




# உச்ச நீதிமன்றம்

## உண்மையான தீவிரவாதத்தை தடுக்கத் தவறிவிட்டது

பாலஸ்தீனில் தொடரும்

யூதர்களின்

## கொலை பாதகங்கள்

## ஜஹாங்கீர்புரியில் நடந்தது என்ன?



கோவையில் நபிகள் நாயகம் பிறந்த நாள் விழாவில் பெரியார் ஆற்றிய உரை...

**முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.**

(5:08)


04 உக்ரைனில் விழும் பிணங்கள்... யார் காரணம்?

10 பாலஸ்தீனில் தொடரும் யூதர்களின் கொலை பாதகங்கள்

19 பாடப் புத்தகங்களில் இந்துத்துவா

22 இராமநவமி பெயரால் வன்முறை வெறியாட்டம்!

25 தமிழினம் பலியாகிவிடக்கூடாது - மு.க.ஸ்டாலின் உணர்ச்சி உரை

30 ஜஹாங்கீர்புரியில் நடந்தது என்ன?

34 உச்ச நீதிமன்றம் உண்மையான தீவிரவாதத்தை தடுக்கத் தவறிவிட்டது

55 அன்புக் குழந்தைகளும் அநாதைகளும்

59 கோவையில் நபிகள் நாயகம் பிறந்த நாள் விழாவில் பெரியார் ஆற்றிய உரை...



# வைகறை வெளிச்சம்

மே-2022 ஷவ்வால்-1443

ஆசிரியர்

**மு.குலாம் முஹம்மது,M.A.,**
**Journalism & Communication**

துணை ஆசிரியர்

**கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,**



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

**தனி இதழ்: ரூ.20/-**
**ஆண்டுச் சந்தா**
**உள் நாடு: ரூ.240/-**
**வெளி நாடு: ரூ.3000/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room# 07, Mannady,
Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darultrust.in

உக்ரைன் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நாடு. 4.5 கோடி மக்கள் வாழும் நாடு. உக்ரைன் வாழ் மக்கள் தாங்கள் உண்டு. தங்கள் வாழ்க்கை எண்டு என வாழ்ந்து கொண்டிருந்தார்கள். உழைத்தார்கள், கிடைத்ததைக் கொண்டு உண்டு மகிழ்ந்தார்கள்.

*எதிர்பாராத விதமாக (பிப்ரவரி - 24, 2022 அன்று) அவர்களின் அமைதியான வாழ்க்கையின் மேல் குண்டுகள் மழையாய் வந்து தாக்கின. இந்தக் குண்டுகள் ரஷ்யா என்ற பழைய வல்லரசின் கைவண்ணம். அவர்களின் வதியு மிடங்கள் தரைமட்டமாயின. அவர்களின், குடும்பங்கள் அந்த இடிபாடுகளுக்குள் சிக்கின. பிணங்களைக் கூட முழுமையாக மீட்டிட இயலவில்லை.*

*அவர்களின் அமைதியான வாழ்க்கை அநாதைகளின் வாழ்க்கையானது. தொடர்ந்து “அகதிகளின் வாழ்க்கை” என்றானது. உயிர் பிழைத்தால் போதும் என அகப்பட்டவற்றைச் சுருட்டிக்கொண்டு அண்டை நாடுகளுக்கு ஓடுகின்றார்கள். எல்லாம் நொடிப் பொழுதில் தலைகீழாக மாறிப்போய்விட்டது.*

**இதற்கு அந்த மக்கள் செய்த குற்றம்தான் என்ன?**

*எங்கோகிடக்கின்ற அமெரிக்காவுக்கு ஆதிக்க வெறி. அதற்காக உலக நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்திடவும், அது உலகிலுள்ள 30 நாடுகளை ஒன்றாக அணி சேர்ந்திருக்கின்றது. இந்த அணி ஐரோப்பிய நாடுகளின் கூட்டு. இந்த அணிக்கு நேட்டோ* NATO, NORTH ATLANTIC TREARTY ORGANIZATION *என்று பெயர்.*

*இந்த நேட்டோ நாடுகளின் அணியில் உக்ரைன் நாடும் இருக்க வேண்டும். அதனால் இந்த அணியில் இணைய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளது. அமெரிக்காவும் அதற்கு ஆலவட்டம் சுழற்றும் இதர ஐரோப்பிய நாடுகளும்.*

*உக்ரைன் நாடு இதற்கு இசைவு தெரிவிப்பது பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கும் போது உக்ரைன் நாட்டின் பக்கத்து நாடானா ரஷ்யா, உக்ரைன் நாடு, நேட்டோ நாடுகளுடன் அணி சேர்ந்திடக்கூடாது என உக்ரைன் நாட்டை வலியுறுத்தி வந்தது. மிரட்டியும் வந்தது.*

*ரஷ்யாவின் ஒரு பகுதியாகத்தான் 1991 வரை இந்த உக்ரைன் நாடு இருந்து வந்தது.*

# உக்ரைனில் விழும் பிணங்கள்...





*1989-90* இல் ரஷ்யா என்ற உலகின் இரண்டு வல்லரசுகளில் ஒன்று, ஆப்கானிஸ்தானில் தோல்வி அடைந்தது. 1979 முதல் 1989 வரை 10 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்து போர் செய்த ரஷ்யா. முடிவில் பின்னங்கால் பிடறியில்பட தோற்று ஓடியது.

இதில் ஆறு நாடுகள் ரஷ்யாவிடமிருந்து பிரிந்துபோயின. அவற்றுள் ஒன்றுதான் உக்ரைன் நாடும் ஆப்கானிஸ்தானில் தோல்வியடைந்த நாட்கள் தொட்டே ரஷ்யா தன்னை திடப்படுத்திக்கொள்ள பல உக்திகளையும் கையாண்டு வருகினறது. அதில் உக்ரைன் அதனிடமிருந்து பிரிந்ததை பொறுத்துக்கொள்ள இயலவில்லை. உக்ரைன் உடன் நட்புப் பாராட்டுவதுபோல் நட்புப் பாராட்டி உக்ரைனுடன் 2010-இல் ஓர் ஒப்பந்தம் போட்டுக் கொண்டது. ஆனால் 2014இல் உக்ரைன் நாட்டின் ஒரு பகுதியாகிய கிரீமியாவைக் கைப்பற்றிக் கொண்டது.

ரஷ்யாவின் நட்புப் போலியானது. அது தன்னை முழுமையாக உள்வாங்கிக்கொள்ளவே முயற் செய்கின்றது என்பதைப் புரிந்துகொண்ட உக்ரைன் ரஷ்யாவை நம்புவதற்கில்லை என முடிவு செய்தது. ஆகவே நாம் நேட்டோ நாடுகளின் பாதுகாப்பைப் பெறலாமா? என சிந்தித்துக் கொண்டிருந்தபோது, உலகில் அந்தப் பெரும் நிகழ்வு நடந்தது.

அதுதான் ஆப்கானிஸ்தானில் உலகின் ஒரே வல்லரசான அமெரிக்கா ஆகஸ்ட்-15, 2021இல் ஒட்டுமொத்தமாக ஆப்கானிஸ்தான் முஜாஹித்களிடம் சரணடைந்தது.

அமெரிக்காவின் ஆப்கானிஸ்தான் தோல்வியில் இன்னொரு நெருக்கடி அது. அமெரிக்காவின் முக்கிய நிதி ஆதாரமாகிய ஆயுத விற்பனை முடங்கிப்போனது.

**எதிரிகளை உற்பத்திச் செய்யும் அமெரிக்கா :**

அமெரிக்காவின் மிக முக்கியமான தொழிலாக ஆயுத விற்பனை வளர்ந்து வருகின்றது. ஆயுத உற்பத்தியில் அமெரிக்காவின் "சேனட்" உறுப்பினர்கள் என்ற நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்கள் மிகையாக முதலீடு செய்கின்றார்கள்.

உற்பத்தியாகும் ஆயுதங்களை விற்பனை செய்ய உலக நாடுகளிடையே போர்களை ஏற்படுத்துவது ஒருபெரும் உக்தி! உலக நாடுகளை அணி சேர்த்து மோதச் செய்வது, ஆயுதங்களை விற்பனை செய்வது பிரிதொரு உக்கி!

இவற்றையெல்லாம் ஆங்கிலத்தில் "Manufac turing Enimies" எதிரிகளை உற்பத்தி செய்வது என அழைக்கின்றார்கள். அமெரிக்கர்கள் எதை உற்பத்தி செய்கின்றார்களோ இல்லையோ, எதிரிகளை உருவாக்கி தங்கள் ஆயுதங்களை விற்பனை செய்கின்றார்கள்.

எதிரிகளை உற்பத்தி செய்யும் இந்த பெரும் முயற்சியில் அமெரிக்க ஆட்சியாளர்கள் தங்கள் நாட்டு மக்களை தாராளமாக ஏமாற்றுகின்றார்கள். உண்மையைச் சொன்னால் தங்கள் மக்களை நம்ப வைத்து ஏமாற்றுகின்றார்கள்.

பொதுவாக உலக மக்கள் அமெரிக்கர்கள் விழிப்போடு செயல்படுபவர்கள் என்றும், அமெரிக்காவில் ஒரு ஜனநாயகம் செயல்படுகின்றது என்றும், அதுதான் உலகின் முன்னோடி ஜனநாயகம் என்றும் நம்புகின்றார்கள். ஆனால், அனைத்தும் பொய் என்பதுதான் உண்மை! ஒரு பிரம்மை. இதனை நாம் ஆப்கானிஸ்தானில் பார்த்தோம்.

*1952*களில் ஜான் ஃபோஸ்டர் டியுல்ஸ் Mr. John Foster Dulles என்ற அமெரிக்க சிந்தனையாளர் & அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் (American Secretary of States) “Red Threat” சிவப்பு எதிரிகள் என்றும் கம்யூனிஸ்ட்டுகளை கொண்டு பேராபத்து என்றும் அமெரிக்க மக்களை அச்சமூட்டினார். - ஆதாரம் War or Peace by Mr. John Foster Dulles.

அப்போது ரஷ்யா - பொதுவுடைமையின் மார்பிடமாகக் கருதப்பட்டது. இந்த சிவப்பு எதிரி பிரச்சாரத்தின் விளைவாகத்தான் பணிப் போர் மூண்டது. அமெரிக்காவின் எதிரியாக ரஷ்யாவைக் காட்டுவது. இது ஒரு பிரம்மை. ஆனால் உலக மக்கள் அமெரிக்காவும், ரஷ்யாவும் எப்போதும் ஒரு பெரும்போரில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக நம்பினார்கள்.

ஆனால் உண்மையில் நடந்தது என்னவெனில் உலக நாடுகளுக்கிடையே போர்களை மூட்டி அமெரிக்கா தன்னை ஒரு பக்கம் அணி சேர்ந்து கொண்டது. ரஷ்யா இன்னொரு பக்கம் அணி சேர்ந்து கொண்டது. போரில் ஈடுபட்ட நாடுகளுக்கு ஆயுத விற்பனை அமோகமாக நடந்தது. இலாபம் தவறாமமல் அமெரிக்கா ஆட்சியாளர்களுக்கும், ரஷ்யாவுக்கும் சென்றது.

இந்த விற்பனையில் அமெரிக்க அரசியல்வாதிகள் முதலீடு செய்யும் கம்பெனிகளிடமிருந்து அமெரிக்க அரசு விலைக்கு ஆயுதங்களை வாங்கும். ஆயுதம் வாங்கிடும் பணத்தை உடனேயே முழு விசுவாசத்தோடு கொடுத்துவிடுவார்கள்.



உடனேயே இலாபம், முதலீடு செய்த அமெரிக்க அரசியல்வாதிகளுக்குப் போய்விடும்.

ஆயுதங்களைப் பயன்படுத்தி போர் செய்யும் அமெரிக்க அரசின் இராணுவப் பிரிவு அத்தனை நஷ்டங்களையும் ஏற்றுக்கொள்ளும். இதனை அமெரிக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், அமெரிக்க ஆட்சியாளர்களைப் பார்த்து இப்படிச் சொன்னார் :

“Your have privitised all profits and Nationalised all losses” “நீங்கள் எல்லா நஷ்டங்களையும், தேசிய உடைமை ஆக்கிவிட்டீர்கள். எல்லா இலாபங்களையும், தனியுடைமை ஆக்கிவிட்டீர்கள்.” (ஆதாரம் : Future Foreward)

**பச்சை எதிரி**

ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பின்னர் “பச்சை அபாயம்“ (Green Threat) எனக்கூறி இஸ்லாமிய உலகின் மீதும் ஆப்கானிஸ்தான் மீதும் போர்த் தொடுத்தது அமெரிக்கா. தனது ஆயுத விற்பனையை அமோகமாக்கியது.

இந்த வியாபாரம், அமெரிக்காவின் ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்பின்போது அமோகமாக நடைபெற்றது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா வீழ்ந்தபோது, இந்த வியாபாபரம் ஓர் முடிவுக்கு வந்துவிட்டது. இதனை ஆய்வாளர் பிரபு சவ்லா, மிகவும் நேர்த்தியாக நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டில் சுட்டிக்காட்டியுள்ளார். (TNIE : 20-2-2022)

உடனேயே உக்ரைன் யுத்தத்தைத் தொடங்கினார்கள். மீண்டும் ஆயுத விற்பனைத் தொடங்கியது. இந்த ஆயுத விற்பனை - குறிப்பாக அமெரிக்காவின் ஆயுத விற்பனை அது மூட்டிவிடும் போர்களின் வழியாக மட்டுமல்ல, அமெரிக்கா

உலகெங்கும் உருவாக்கி வைத்திருக்கும் கிளர்ச்சி குழுக்கள் மற்றும் தீவிரவாதக் குழுக்களுக்கு விற்பனை செய்யும், ஆயுதங்கள் வழியாகவும் வருகின்றது.

உதாரணம் சீரியாவில் அது உருவாக்கி வைத் திருக்கும் ISIL போன்ற ஏராளமான போராளி குழுக்கள், ஏமன் நாட்டில் 1990களில் உருவாக்கிய ஹெவ்தீஸ் என்ற அமைப்பு ஐக்கிய அரபு அமீரகத்துடன் சண்டையிடுகின்றார்கள். இதனால் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) அமெரிக்காவிடம் ஆயுதங்களை வாங்குகின்றது. இதனால் ஐக்கிய அரபு அமீரகத்துடன் எண்ணெய் வளம். அதில் கிடைக்கும் பொருள் எல்லாம் அமெரிக்காவுக்குத் தாரை வார்த்துதுத் தரப்படு கின்றது. இதுபோல் உலகெங்கும் தீவிரவாத குழுக்களையும், கிளர்ச்சிக் குழுக்களையும் உருவாக்கி வைத்திருக்கின்றது (அமெரிக்கா).

ஓர் ஆய்வின் அடிப்படையில் உலக நாடுகளிடையே வரும் ஒவ்வொரு 100 டாலர் வருவாயிலும், மூன்று டாலர்கள் ஆயுதங்களை வாங்கிடுவதில் செலவிடப்படுகின்றது. (TNIE : 20-2-2022 கட்டுரை பிரபு சவ்லா)

கோவிட்-19 பெருந்தொற்றின்போது உலக நாடுகளின் வருமானம், 4.4 சதவிகிதம் (விழுக் காடு) குறைந்தது ; ஆனாலும், உலக நாடுகள் இரண்டாயிரம் பில்லியன் டாலர்களுக்கு இராணுவத்தில் செலவு செய்தன. இந்த உலக நாடுகள் பெருந்தொற்றின்போது எல்லா செலவி னங்களையும் குறைத்தன. ஆனால், இராணுவ செலவுகள் 2.6% விழுக்காடுகள் அதிகரித்தன. உண்மையைச் சொன்னால் 2009 ஆம் ஆண்டுக் குப் பின் உலக நாடுகள் அதிகமாக இராணு வத்தில் செலவிட்டது. இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில்தான்.

2020ஆம் ஆண்டில் அதிகமாக இராணுவ செலவுகளைச் செய்த நாடுகளில் மூன்றாவது இடத்தில் நம் நாடு வருகின்றது. முதல் இரண்டு இடத்தை அமெரிக்காவும் சைனாவும் பிடித்துக் கொண்டன.

உக்ரைனுக்கு அமெரிக்கா மட்டுமல்ல இதர நோட்டோ நாடுகளும் ஆயுதங்களை விற்பனை செய்கின்றன. ஆயுதங்களை அள்ளி வழங்கும் நாடுகள் ஆயுதங்களைத் தாங்கிப் போராட ஆட்களை அனுப்பத் தயங்குகின்றன. காரணம் ஆப்கானிஸ்தானில் இழந்த 81,500 போர் வீரர்கள். அதில் வந்த விரக்தி!

ஆக ஆயுத விற்பனை அமோகமாக நடந்து கொண்டிருக்கின்றது. உக்ரைன் நாட்டு மக்கள் ஒரு பக்கம் பிணங்களாக குவிகின்றார்கள். இன்னொரு பக்கம் அநாதைகளாகி, அகதிகளாக அண்டை நாடுகளுக்கு செல்லும் அவலம்.

**ஐக்கிய நாடுகள் சபை**

இது உலகில் 1945 அக்டோபர் 24இல் வந்தது. உலகில் அமைதியை நிலை நாட்டுவோம், மனித இனத்தின் கண்ணியத்தைக் காப்பாற்றுவோம், சமத்துவத்தை நிலைநாட்டுவோம் என்ற முழக்கங்களாடு வந்தது. ஆனால், உக்ரைனில் விழும் பிணங்களில் எதையும் நிறுத்திட இயலவில்லை.



அதேபோல்தான் வியட்நாமில் விழுந்த பிணங்கள். 1980களில் போஸ்னியா ஹர்சகோ வினாவில் வீழ்ந்த பிணங்கள், கொவுண்டனாமே சித்திரவதைக் கூடங்களிலும், ஆப்கானிஸ்தானில் 30 வருடங்களுக்கு மேல் வீழ்ந்த அப்பாவி குடிமக்களின் பிணங்கள். பாலஸ்தீனும். குறிப்பாக “காஸா” பகுதியிலும் ஜெரூசலத்திலும் இஸ்ரேலால் வீழ்ந்த பிணங்கள். இவற்றில் எதையும் தடுத்திட இயலவில்லை, இந்த ஐக்கிய நாடுகள் சபையால். ஆகவே அஃதோர் வெற்று அமைப்பு. அமெரிக்காவின் கைப்பிடிக்குள் இயங்கும் அமைப்பு.

ஐ.நா.வுக்கு மாற்றமாக ஒரு அமைப்பு, அப்பாவி மக்களைப் பிணங்களாகவும் அநாதை களாகவும் அகதிகளாகவும் குவிப்பதை தடுக்கும்

வலுவான அமைப்பு, அவசியத்தேவை. அது வலுவான இராணுவப் பலத்தைக் கொண்டதாக இருந்திட வேண்டும். அப்படி ஒரு முயற்சியை துருக்கி நாடு எடுத்துக்கொண்டு வருகின்றது என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

**உக்ரைனின் வருத்தம்**

உக்ரைன் நாட்டின் அப்பாவி மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் ரஷ்யா அண்மையில் உக்ரைனை அச்சுறுத்த, அணுகுண்டு எச்சரிக்கை என்றொன்றை விடுத்தது. அந்த எச்சரிக்கையில் தனது அணு ஆயுத தளவாடங்கள் தாக்குதலுக்குத் தயாராக இருப்பதாக அறிவித்தார். அப்போது உக்ரைன் அதிபர், மெத்த வருத்தத்தோடு ஓர் உண்மையை அறிவித்தார்.

> **“நாங்கள் அன்றைக்கொரு பெரிய தவறைச் செய்தோம். அது, ஐக்கிய நாடுகள் கொண்டுவந்த ஆயுத தடை ஒப்பந்தத்தை நிராகரிக்காமல் கையெழுத்திட்டோம். அது இப்போது பெரிய தவறாக ஆகிப்போனது.”**

*அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் ஓரவஞ்சனை :*

“Non Proliperation Treaty (NPT) *1970* மார்ச்சு திங்களில் ஐக்கிய நாடுகள் சபை அணு ஆயுத தடை ஒப்பந்தம் என்றொன்றை கொண்டு வந்தது. அந்த ஒப்பந்தப்படி அணு ஆயுதங்களை அன்றைக்கு வந்திருந்த நாடுகளைத் தவிர இதர நாடுகள் அணு ஆயுதங்களை தயாரிக்கக்கூடாது. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடும் நாடுகளை அணு ஆயுத சக்தியை அமைதியான பணிகளுக்குப் பயன்படுத்திட, அணு ஆயுத நாடுகள் உதவிச் செய்யும். இதில் பல நாடுகள் கையெழுத்திட்டன. உக்ரைனும் கையெழுத்திட்டது. இப்போது ரஷ்யாவோடு வந்த யுத்தத்திற்குப் பின் அது கைசேதப்பட்டது.

உண்மையில் உக்ரைன் நாடும் அணு ஆயுத நாடாக இருந்திருந்தால் ரஷ்யாவின் இந்த அச்சுறுத்தல் எடுபட்டிருக்கின்றது.

ஆக ஐக்கிய நாடுகள் சபையால் மிகவும் அதிகமாக வலியுறுத்தப்பட்ட அதிகமாகப் பிரச்சாரம் செய்யப்பட்ட NPT and ஆயுத பரவல் தடை திட்டம், அப்பாவி நாடுகளுக்கு எதிராக முடிந்துவிட்டது.

உண்மையைச் சொன்னால், வலிமை மிக்க நாடுகளை அணு ஆயுத நாடுகளை மேலும் வலிமை மிக்கவையாக மாற்றி இருக்கின்றது. அதே நேரத்தில் இந்த வலிமை மிக்க நாடுகள் மெலிய நாடுகளை மிரட்டவும் செய்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையால் எதுவும் செய்திட இயலவில்லை. இந்த உண்மைக்கு ரஷ்யா-உக்ரைன் போர் ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

இதை உக்ரைனின் பிரதமர் வருத்தத்தோடு, வலியோடு எடுத்துக்காட்டிடவும் இருக்கின்றார்.



## முஸ்லிம் உலகின் சமயோசித முடிவு

அணு ஆயுதப் பரவலைத் தடை செய்திட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்ட குழு பிரச்சாரத்தை 1968 முதலே விவாதிக்கத் தொங்கியது.

இதே காலக்கட்டத்தில் இஸ்லாமிய உலகிலும், ஒரு விவாதம் எழுந்தது. இஸ்லாமிய உலகம் அணு ஆயுதங்களை உருவாக்கிடும் உத்தியைப் பெற்றிடலாமா? கூடாதா? என்பதே அந்த விஷயம்.

பல மார்க்க அறிஞர்கள், முஸ்லிம் உலகம் அணு ஆயுதங்களை தயாரிக்க முற்படவேக் கூடாது. அந்தக் கல்வியைக் கற்றிடவேக் கூடாது. நமக்கு அந்த அறிவு வேண்டாம் எனக் கூறினார்கள்.

### காரணம்

அணு ஆயுதங்கள் ஒட்டுமொத்தமாக, மனித இனத்தை மட்டுமல்ல, மனித இனத்திற்குப் பலன்தரும், மரங்களையும் புற்பூண்டுகளையும் கூட அழித்துவிடுகின்றது. நேர் மாறாக, இஸ்லாம் மனித இனத்தை வாழ வைத்திட வாழ வைத்திட இந்த மனித படைத்த இறைவனால் அருளப்பட்ட மார்க்கம். போர்களின் போதுகூட மரங்களையோ புற்பூண்டுகளையோ அழிக்க இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

மனித இனத்தை அல்லாஹ் படைத்ததன் நோக்கம். இனப் பெருக்கம் செய்யவும் படைத்தவனை வணங்கவும் வழிபடவுமே! அல்லாமல் மனித இனத்தை அழிப்பதற்கல்ல.

இந்த வாதம் அதிகமாக எடுபடவேச் செய்தது. ஆனால், பெருக்கெடுத்து ஓடத் தொடங்கி இருக்கும் இஸ்லாம்! முஸ்லிம் வெறுப்புகளுக்கிடையே இந்த வாதம் பொருத்தமானதாக இருக்குமா? என்பது மார்க்க அறிஞர்களின் ஒரு சாராருக்கு ஐயம்.

குறிப்பாக இஸ்லாத்தை வெறுப்பவர்கள், முஸ்லிம்களை ஒட்டுமொத்தமாக அழித்திட வேண்டும் என ஆயத்தங்களை உலகில் பல நாடுகள் செய்து கொண்டிருக்கும்போது நாம் சும்மா இருக்க இயலுமா?

இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் அழித்திட வேண்டும் என ஆலாய் பறக்கும் நாடுகள் அணு ஆயுதங்களை உற்பத்திச் செய்து கொண்டே இருக்கும்போது நாம் வேதாந்தங்களைப் பேசிக் கொண்டிருப்பது முறையாகுமா? இருஓர் எதிர்வாதமாக வளர்ந்தது.


முடிவில், டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவி போன்றவர்களின் அறுதியான முடிவால் ஒரு முடிவுக்கு வந்தது இஸ்லாமிய உலகம். அது, அணு ஆயுதங்களைப் பொறுத்தவரை நாம் அறிவற்றவர்களாக இருப்பது அறிவற்ற செயல்.

நாம் அந்த உத்தியை உடையவர்களாக ஆகிட வேண்டும். ஆனால், அதை நாம் பயன்படுத்துகின்றோமா இல்லையா என்பதை காலத்தின் முடிவுக்கு விட்டுவிடுவோம் என முடிவு செய்தார்கள்.

இன்று துருக்கி, ஈரான், பாகிஸ்தான், ஈராக் முதலான நாடுகள் இந்த அணு ஆயுத ஆற்றல் பெற்றவையாக இருக்கின்றன. இவை குறிப்பாக ஈரான் உலகில் எல்லா நாடுகளையும் விஞ்சும் அளவில் அணு சக்தியைப் பெற்றுள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

இப்போது உக்ரைன் நிகழ்வுகள் இந்த முடிவு சரியானதே என்பதை ஊர்ஜிதம் செய்துள்ளது.

- MGM



# அல்குத்ஸ் தினம் - உலகெங்கிலும் அனுசரிக்கப்படுகிறது

நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டேன், "பூமியில் எது முதல் மஸ்ஜித்?" "புனிதமிக்க மஜ்ஸித் ஹராம் (காபா)" என பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். அடுத்து எது? என நான் கேட்டேன், தொலைவில் உள்ள மஸ்ஜிதுல் அக்ஸா என பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். (அறிவிப்பு, அபூதர் (ரழி) - முஸ்லிம்)

**பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :** *மூன்று பள்ளிவாசல்களைத் தவிர வேறெங்கும் நன்மையை நாடி பயணம் செய்வது - என்ப தில்லை. அவை மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுல் நபவி என்னுடைய பள்ளிவாசல், பைத்துல் முகத்திஸ்-ல் உள்ள மஸ்ஜிதுல் அக்ஸா'*

*(புகாரி : முஸ்லிம்)*

இந்த மஸ்ஜித் அல்-அக்ஸா தான் முஸ்லிம் களின் முதல் கிப்லா, பெருமானார் (ஸல்) அவர் களின் பெயரால் நிறுவப்பட்ட, மதினா பள்ளி வாசலிலும் இதுவே கிப்லாவாக இருந்தது. 17 மாதங்களுக்குப் பின், இறைவன் கிப்லாவை கஆபாவை நோக்கித் திருப்பினான்.

*நபியே! நாம் உம்முகம் அடிக்கடி வானத்தை நோக்கிட காண்கின்றோம். எனவே நீர் விரும்பும் கிப்லாவின் பக்கம் உம்மைத் திடமாகத் திருப்பி விடுகின்றோம். (அல்குர்ஆன் - 2 : 143)*

*ஆகவே நீர் இப்போது (மக்காவின்) மஸ்ஜிதுல் ஹராம் பக்கம் உம் முகத்தைத் திருப்பிக்கொள் ளும். (முஸ்லிம்களே!) நீங்கள் எங்கிருந்தாலும், உங்கள் முகங்களை அந்தப் பக்கம் திருப்பிக் கொள்ளுங்கள்'*

*1) (அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன்; அவன் தன் அடியாரை பைத்துல் ஹராமிலிருந்து (கஃபத்துல்லாஹ்விலிருந்து தொலைவிலிருக்கும் பைத்துல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸா*



# பாலஸ்தீனில் தொடரும் யூதர்களின் கொலை பாதகங்கள்

விற்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான்; (மஸ்ஜிதுல் அக்ஸாவின்) சுற்றெல்லைகளை நாம் அபிவிருத்தி செய்திருக்கின்றோம்; நம்முடைய அத்தாட்சி களை அவருக்குக் காண்பிப்பதற்காக (அவ்வாறு அழைத்துச் சென்றோம்); நிச்சயமாக அவன் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும்; பார்ப் போனாகவும் இருக்கின்றான். (17:1)

2) கி.பி.637 - ஜெருசலத்தை கலீபா உமர் (ரழி) கைப்பற்றி மஸ்ஜிதுல் அக்ஸாவை கட்டினார்கள்.

3) 705 - அப்துல் அல்மாலிக் அவர்களாலும் தொடர்ந்து அவரது மகனாலும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

4) 746 - நில நடுக்கம் ஒன்று அதை இடித்து விட்டது.

5) அப்பாசி கலீபா அல்மன்சூர் அவர்கள் அதனை எழுப்பினார்கள்.

6) 780 - அல்மஹ்தி அவர்கள் அதனை அழகு படுத்தினார்கள்.

7) 1033- நிலநடுக்கம் ஒன்று அதனை மீண்டும் குலைத்தது.

8) 1035 - பாத்திமுத்து கலீபா அல் அஸ்ஸா ஹிர் - மீண்டும் அக்ஸாவை கட்டினார்கள். அதுவே இப்போதும் நின்று கொண்டிருக்கிறது.

9) 1095 - சிலுவைப்போர்களை தொடங்கி னார்கள் கிறிஸ்தவர்கள்

10) 1099 - பைத்துல் முகத்திஸ் (ஜெருசலம்) அல்அக்ஸா பள்ளிவாசலை கிருஸ்தவ கைகளுக்கு சென்றது. 90 வருடங்கள் கிறிஸ்த வர்கள் அல்அக்ஸா பள்ளிவாசலை கிருஸ்தவ ஆலயமாகவும் உல்லாச மாளிகையாகவும் பயன்படுத்தினார்கள்.

11) 1187 - சுல்தான் சலாஹுதீன் அய்யூபி அவர்கள் ஜெருசலம் - அல்அக்ஸா ஆகியவற்றை மீட்டார்கள்.

12) 1917 - கிலாஃபத் என்ற முஸ்லிம்களின் உலக தலைமை இராணுவ பலத்தை இழந்தது. அதே ஆண்டில் ஆங்கிலேயர்கள் யூதர்களுக்கு ஒரு தனி நாடு ஒன்றை முஸ்லிம்களின் பாலஸ் தீனில் உருவாக்கித் தருவதாக உறுதி தந்தார்கள்.

13) 1918 உலக நாடுகளின் சபை (லீக் ஆப் நேஷன்) பைத்துல் முகத்திஸ் அல்அக்ஸா ஆகியவற்றை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தது. ஆங்கிலேயர்கள் ஐரோப்பிய கிருஸ்தவர்களால் வெளியேற்றப்பட்ட ஒன்றரை இலட்சம் யூதர் களை பாலஸ்தீன முஸ்லிம்களின் நிலங்களில் குடியமர்த்தினார்கள்.

14) 1922 - உலக முஸ்லிம்கள் பாலஸ்தீன சுப்ரீம் கவுன்சில் என்றொன்றை உருவாக்கி அல் அக்ஸா பள்ளிவாசலை புனரமைத்தார்கள். இதில் இந்திய முஸ்லிம்கள் பெரும் தொகையை தந்தார்கள். (விரிவான தகவல்களுக்கு “வைகறை வெளிச்சம்“ செப்.2009)

15) 1931-35 - ஹிட்லரால் துரத்தப்பட்ட யூதர்கள் பாலஸ்தீனில் ஆங்கிலேயர்களால் குடியமர்த்தப்பட்டார்கள்.

16) 1948- யூதர்களுக்கு ஒரு நாடு என இஸ்ரேல் உருவாக்கப்பட்டு ஐக்கிய நாடு சபையால்.

17) 1967 - ஆகஸ்ட் ஸலோமாகோரன் என்ற யூத மத குரு 20 யூத இராணுவ வீரர்களோடு பூஜை செய்ய அல் அக்ஸா மஸ்ஜிதுல் நுழைந்தார். முஸ்லிம்கள் அதைத் தடுத்தார்கள்.

18) 1969 - மஸ்ஜிதுல் அக்ஸாவின் ஒரு பகுதியை யூதர்கள் எரித்தார்கள்.

**1979 அல்குத்ஸ் தினம் அறிவிக்கப்பட்டது**

19) 1982 - பால் லெஸ்ரார் என்ற யூதன் மனித வெடிகுண்டாக உள்ளே நுழைந்தான். முஸ்லிம்கள் அவனைத் தடுத்தார்கள். மஸ்ஜிதை காப்பாற்றினார்கள். பலர் ஷஹீதானார்கள்.

20) 1983-46 - யூதர்கள் மனித வெடி குண்டாக மஸ்ஜிதுல் நுழைய முயற்சி செய்தார்கள். முஸ்லிம்கள் தடுத்து அல் அக்ஸாவைக் காப்பாற்றினார்கள்.

21) 1984 - ஆக்ஸ்ட் 7ல் 130 கிலோ எடை கொண்ட வெடிகுண்டு ஒன்று மஸ்ஜிதுல் அக்ஸாவின் கீழ் வைக்கப்பட்டது. முஸ்லிம்கள் அதை வெடிக்கும் முன் அகற்றினார்கள். 1984 டிசம்பரிலும் இதுவே நடந்தது.

22) 1986 - ஈகை பெருநாளின் போது யூதர்கள் உள்ளே நுழைந்தார்கள். தடுத்தார்கள் முஸ்லிம்கள். அதனால் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஷஹீதானார்கள்.

23) 1988-OIC என்ற உலக முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பு அல்குத்ஸ் தினத்தை உலக மயமாக்கியது.

24) 1990 - ஆகஸ்ட் 20ம் நாள் ஒரு யூதன்

இரண்டு ஏவுகணைகளை பள்ளிவாசலை நோக்கி ஏவினான். பள்ளிவாசல் சிறிது சேதம் அடைந்தது.

25) 1990-அக்டோபரில் சாலமோன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டிட என யூதர்கள் அக்ஸா பள்ளிவாசலுக்குள் நுழைந்தார்கள். தடுத்தார்கள் முஸ்லிம்கள் ஷஹீதானார்கள் பலர்.

26) 1991 - அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் பள்ளிவாசலை தோண்டி அஸ்திவாரத்தை பலவீனப்படுத்தினார்கள்.

27) 1992 - அமெரிக்காவில் வாழ்நத யூதர்கள் (1990ல் நாட்டிய) இந்த கல்லை பூஜை செய்ய உள்ளே புகுந்தார்கள் தடுத்தார்கள் முஸ்லிம்கள் ஷஹீதானார்கள் பலர்.

28) 2000 - யூத தீவிரவாதி ஏரியல் ஷரோன் ஆயிரக்கணக்கான யூதர்களோடு பள்ளிவாசலுக்குள் நுழைந்தான். முஸ்லிம்கள் தடுத்தார்கள். பலர் ஷஹீதானார்கள். அதுமுதல் ஒவ்வொரு ஜூலை 31ம் நாளும் யூதர்கள் சாலமோன் ஆலயத்தில் நினைவு நாள் என்று அல் அக்ஸா மஸ்ஜிதுக்குள் புகுந்து கபளீகரங்களை செய்கின்றார்கள். முஸ்லிம்கள் தடுக்கின்றார்கள்.

29) 2009 ஜூலை 31ம் நாளும் இதைப்போல் மஸ்ஜிதுல் அக்ஸாவில் புகுந்தார்கள். முஸ்லிம்கள் பலர் தங்கள் உயிரைத் தந்து தடுத்தார்கள்.

30) 2010 - மே 31 நான்கு ஆண்டுகளாக பாலஸ்தீனின் காஸா பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் 15 இலட்சம் மக்கள் எந்த வாழ்வாதாரமும் இல்லாமல் அல்லல்பட்டுக் கொண்டு இருந்தார்கள். இவர்களுக்காக உதவி செய்ய உலக நாடுகள் ஒன்றிணைந்து அனுப்பிய வாழ்வாதார பொருட்களை கொண்டுவந்த கப்பலை (Freedom Flotilla) சர்வதேச கடலில் வைத்து மே 31 அன்று இஸ்ரேல் தாக்கியது. பொருட்கள் கொண்டு சென்ற கப்பலில் இருந்த 19 பேர் உயிரிழந்தார்கள். இந்த செயல்கள் அனைத்திற்கும் அமெரிக்கா துணை நின்றது.

இப்பொழுது ஹமாஸ் என்ற இஸ்லாமிய இயக்கத்தின் தலைமையின் கீழ் முஸ்லிம்கள் தங்கள் எதிர்ப்பை ஒருங்கிணைத்து வருகின்றார்கள். பல வெற்றிகளையும் அல்லாஹ் அவர்களுக்கு அருளுகின்றான்.

**பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள் :**

இறுதிநாள் முஸ்லிம்கள் யூதர்களோடு போரிடாத வரை வராது. முஸ்லிம்கள் யூதர்களைக் கொலை செய்வார்கள். யூதர்கள் பாறைகளுக்குப் பின்னாலும் மரங்களுக்குப் பின்னாலும் ஒளிந்துகொள்வார்கள். பாறைகளும் மரங்களும் அல்லாஹ்வின் அடியானே இதோ யூதன் எனக்குப் பின்னால் ஒளிந்திருக்கின்றான் என்று கூறும். ஆனால் கர்காட் என்ற மரம் மட்டும் காட்டிக் கொடுக்காது. ஏனெனில் அது ஒரு யூத மரம். (அறிவிப்பாளர் - அபூஹுரைரா ரழி)

**இஸ்ரேலியப் பொருட்களைப் புறக்கணியுங்கள்** (BDS MOVEMENT)

இப்படி ஓர் அமைப்பு 2005 ஆண்டு முதல் உருவாக்கப்பட்டு வளர்ந்து வருகின்றது. இதை உருவாக்கியவர் ஓமர் ஜான் கிரீலாத் என்பவர். இவர் பாலஸ்தீனைச் சார்ந்தவர். இது இஸ்ரேல் நாட்டின் பொருள்களை மட்டும் புறக்கணிக்க



சொல்ல வில்லை. ஒருபடி மேலேபோய் நுணுக்கமான, இன்னும் பல புறக்கணிப்புகளைப் பரிந்துரைக் கின்றது. அவை

1) இஸ்ரேல் நாட்டுக்கு இலாபம் சென்ற டையும் அளவில் இயங்கும் தொழிற்சாலை களின் பொருள்களைப் புறக்கணிக்க சொல் கின்றது. இதனால் இஸ்ரேல் நாடு முதலீடு செய்யும் பொருள்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

2) இஸ்ரேலை ஆதரிக்கும் கம்பெனிகளின் பொருள்களை வாங்கிட வேண்டாம்.

3) இஸ்ரேலை ஆதரிக்கும், கம்பெனிகள் மார்க்கெட் செய்யும், அதாவது சந்தைப் படுத்தும் பொருள்களை வாங்கிட வேண்டாம்.

4) இஸ்ரேலில் முதலீடு செய்யும் தொழில் நிறுவனங்களின் பொருள்களை வாங்கிட வேண்டாம்.

இப்படி ஒரு பொருளாதார தடையை இஸ்ரேல் மீது போட்டு வருகின்றது இந்த அமைப்பு.

இந்தப் பொருளாதார தடை இஸ்ரேலுக்கு மிகையான நெருக்கடியைக் கொடுத்திருக் கின்றது. அதனால்தான் இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் நட்யான்ஹூ எல்லோருடைய உரிமை களையும் பாதுகாக்கின்றோம் எனக் கூறினார்.

“எங்கள் நாடு யூதர்களின் நாடு என்றாலும், எங்கள் நாட்டில் முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள், பகாய்கள், இப்படி எல்லோரும் வாழுகின்றார்கள். அவர்கள், வழக்கறிஞர்களாகவும், சட்டம் செய்யும் அவைகளில் அங்கம் வகிப்பவர்களா கவும், நீதிபதிகளாகவும் இருக்கின்றார்கள். எங்கள் நாடாளுமன்றத்தில் முஸ்லிம்கள் தொழுவதற்காக, ஓர் இடம் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.” என்றார் இப்பொழுது அவர் பிரதமர் இல்லை.

இவையெல்லாம் யூதர்களின் பம்மாத்து களாகவுமிருக்கலாம். ஆனால், அவர்கள் பொருளாதார அழுத்தங்களை உணருகின்றார்கள் என்பதை நாம் அறிந்திட முடிகின்றது.

**இஸ்ரேலின் கொரனோ காலக் கொடுமைகள்**

பாலஸ்தீனில் வாழும் மக்களை குறிப்பாக “காஸா” பகுதியில் வாழும் மக்களை கொடுமைப் படுத்துவதை இஸ்ரேல் நிறுத்தவில்லை. கொரனோ காலத்தில் மருத்துவக் கருவிகளும், மருத்துவ உதவிகளும், காஸா பகுதியை சென்றடைவதைத் தடுத்தார்கள்.

காஸா பகுதி மக்கள் மருத்துவ மனைகளுக் குச் செல்லும் வழியில் தடைகளை வெட்டிப் போட்டார்கள். வழக்கம்போல நீண்ட நேர சோதனைகளுக்குப் பின்னரே அவர்கள் மருத்துவப் பகுதியில் உள்ளே நுழைய அனுமதிக்கப் பட்டார்கள்.

காஸா பகுதி மக்களுக்காக கத்தர் நாடு 150 மில்லியன் டாலர்களை உதவித் தொகையாக இந்தக் கொரனோ காலத்தில் அனுப்பியது. அந்தத் தொகை அந்த மக்களைச் சென்றடையாமல் தடுத்தது இஸ்ரேல். ஆனால் ஹமாஸ் இயக்கம், இஸ்ரேலிடம் நீங்கள், அந்தத் தொகையை விடு விக்காவிட்டால், நாங்கள் ஏவுகனை தாக்குதல் களை நடத்துவோம். நீங்கள் எல்லாம் ஏவுகணை களிலிருந்து தப்பித்திட பங்கர்கள் என்ற பூமிக் கீழுள்ள சுரங்கங்களுக்கு ஓடுவீர்கள். அதனால் அங்கு ஜன நெருக்கம் ஏற்படும் ‘கொரனோ வேகமாகப் பரவும். இதைச் செய்திட அதிக நேரமாகாது.

ஆனால் எங்கள் மார்க்கத்தில் இதற்கு அனுமதியில்லை. நீங்கள், தொடர்ந்து எங்களை கொரனோவுக்கு பலியாகிட நிர்பந்தித்தால், நாங்கள் எங்கள் மார்க்க அறிஞர்களிடம் அனுமதியைக் கோரிட வேண்டியது வரும்‘ என்றது இதைக்கேட்டு அஞ்சிய இஸ்ரேல், அந்தப் பணத்தை அனுமதித்தது.

**தொடரும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகள்**

மேற்கு கடற்கரைப் பகுதி என்றழைக்கப்படும் (West Bank) பாலஸ்தீனின் முக்கியப் பகுதியை கொஞ்சம், கொஞ்சமாக ஆக்கிரமித்து வருகின்றது இஸ்ரேல். அந்த இடங்களில் யூதர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருகின்றது. அவர்களை குடியமர்த்தவும் முயற்சிகளை செய்கின்றது. இதனை உலக மக்கள் அனைவரும் கண்டித்தனர். அதனை அமெரிக்கா ஆதரித்தது.

**பாலஸ்தீனுக்காக யூதர்கள்**

உலகில், இஸ்ரேலுக்கு வெளியே வாழும் யூதர்களும், இஸ்ரேலின் அட்டூழியங்களைக் கண்டிக்கத் தொடங்கிவிட்டனர்.

பிரிட்டன் (ஆங்கில நாட்டில்) யூதர்கள் ஓர் அமைப்பைத் தொடங்கியுள்ளனர், அதன் பெயர் (IJAN) Jewish Network for Palestinians (UK) பாலஸ் தீனியர்களுக்கான யூத ஒற்றிணைப்பு (தளம்) 2008 ஆம் ஆண்டு. உருவான இந்த அமைப்பு

உலகெங்கும் படருகின்றது.

யூதர்களால் இப்படி ஒரு அமைப்பா? என்ற வினா நமக்குள் எழுந்தது. உடனேயே அதன் உண்மைத்தன்மைகளை கண்டறிய முயற்சிகளை மேற்கொண்டோம். ஆங்கில இதழியல் தளங்களில் எழுதிக்கொண்டிருக்கின்ற பத்திரிகை யாளர்களிடம் கேட்டோம். அதன் நன்பகத் தன்மையை சந்தேகப்பட வேண்டாம் எனச் சொன்னார்கள். ஆனாலும் நாம் ஜாக்கிரதை யாகவே இதனை கையாள வேண்டும்.

இந்த அமைப்பை உருவாக்கியவர்களில் ஒரு விஞ்ஞானி ஹோஜா மேயர் என்பவராவார். 1924-2014 இவர் ஜெர்மனியில் யூதர்கள் இனப் படுகொலைகளுக்கு ஆளாகியபோது அதிலிருந்து தப்பித்தவர் என அறியப்படுகின்றார். இவர் இந்த அமைப்பைத் தொடங்கியதற்கான காரணத் தைச் சொல்லுகின்றார். அது அனைவரையும் நம்பிடச் செய்கின்றது அந்தக் காரணம்,

**யூதர்களைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கியவர்கள் ஜெர்மனியைச் சார்ந்தவர்கள். அந்தக் கொடுமை களைச் சொல்லித் தான் நாம் உலகெங்கும் அனுதாபத்தை சம்பாதிக் கின்றோம். ஆனால் அந்தக் கொடுமை களை விஞ்சும் கொடுமைகளை நாம் பாலஸ்தீனில் செய்து கொண்டிருக் கின்றோம். ஆகவே அந்தக் கொடு மைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.**

(IJan) இஜான் என்றழைக்கப்படும், இந்த அமைப்பு எல்லா யூதர்களும் இஸ்ரேல் நாட்டை ஆதரிக்கவில்லை. இஸ்ரேல் ஒரு இனவாத நாடு Racist Country. அங்கு முஸ்லிம்களைக் கொலை செய்வது என்பது இனவெறிக் கொலைகள்தான். எனவே இஸ்ரேலை ஓர் இனவெறி நாடு என அறிவிக்க வேண்டும். (Appartheid State) என்று பிரகடனப்படுத்துகின்றது. இந்த அமைப்பிற்கு இன்னொரு பெயர் - சர்வதேச சீயோனிச எதிர்ப்பு அமைப்பு.

உலகிலுள்ள பல அமைப்புகள் : இந்த அல்குத்ஸ் நாளை ; "Justice for Palestinian People Day" பாலஸ்தீன மக்களுக்கு நீதி தேடிடும் நாள் என அறிவித்துள்ளன. இது கவனிக்கத்தக்கது.

சர்வதேச இஸ்லாமிய மனித உரிமை ஆணையம் (IIHRC - International Islamic Human Rights Commission) பாலஸ்தீன கொடியை பறக்க விடுங்கள் Fly the Flag என ஓர் இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.

இந்த நாளில் யூத இஸ்ரேலின் அநியாயங்கள் அனைத்தும் உலக மக்கள் அனைவருக்கும் வெட்ட வெளிச்சமாகி வருகின்றது. இஸ்ரேலுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது.

### உலக முஸ்லிம்களுக்கு பாலஸ்தீன முஸ்லிம்களின் வேண்டுகோள்

உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் அல்-குத்ஸ் வரவேண்டும். அங்கு வீற்றிருக்கும் அல்-அக்ஸா வில் தொழ வேண்டும். இதன்மூலம் இவை யெல்லாம் உலக முஸ்லிம்களுக்குச் சொந்தம் என்பதை நிலை நாட்டிட வேண்டும். இதுவே பாலஸ்தீன மக்களின் வேண்டுகோள்.

### இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்

"பைத்துல் முகத்திஸ்-அல் அக்ஸாவில் சென்று தொழுங்கள். இயலவில்லை என்றால் அங்கே எரியும் விளக்குகளுக்குப் பயன்பட கொஞ்சம், எண்ணெய்யை அனுப்புங்கள்"

(நபிமொழி-அஹ்மத்)

### இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் இன்னும் சொன்னார்கள்

"ஹஜ் அல்லது உம்ராவுக்குச் செல்லும் ஒருவர் மஸ்ஜிதுல் அக்ஸாவில் இஹ்ராம் அணிந்து பின்னர் புனித மஸ்ஜிதுக்கு (மக்காவிலுள்ள கஆபாவிற்கு) செல்லுவாரேயானால், அவருடைய முன் பாவங்களும் பின் பாவங்களும் மன்னிக்கப்பட்டுவிடும்"

(நபிமொழி - திர்மிதி - அஹ்மத்)

### இந்த வருடம் 2022-இல்

யூதர்கள் ஒவ்வொரு வருடமும் மே-15ஆம் நாளை ஜெருசலம் நாள் எனக் கொண்டாடி, அல்அக்ஸா மஸ்ஜித் வளாகத்தில் கெடுபிடி களைக் கட்டவிழ்த்து வருகின்றார்கள். பல முஸ்லிம்களை ஷஹீதாக்குகின்றார்கள்.

இந்த ரமழானில் ஏப்ரல் மாதம் 14ஆம் தேதியிலிருந்து 21ஆம் தேதிவரை Passover Festival என அறிவித்தார்கள். இது அவர்கள் எகிப்திலிருந்து வெளியேறிய நாள் (The Exodus).



அல்அக்ஸா மஸ்ஜித்குள் பிரவேசித்தார்கள். முஸ்லிம்கள் தடுத்தார்கள், பலர் ஷஹீதானார்கள்.

ரமழான் மாதம் முழுவதும் மஸ்ஜித் அக்ஸாவில் முஸ்லிம்கள் பெருவாரியாக சென்று தொழுவார்கள். இந்த வருடம் யூதர்களின் கெடுபிடிகள் அதிகமானதால் 1,50,000 பேர் சென்ற வெள்ளிக்கிழமை (15-4-2022) ஜும்ஆ தொழுதார்கள். இதனால் அக்ஸா வளாகமே நிரம்பி வழிந்தது.

இன்றைய நாட்களில் பாலஸ்தீனுக்குப் பயணம் செய்வது, அங்குத் தியாகங்களைச் செய்து கொண்டிருக்கும் மக்களைப் பலப்படுத்துகிறது.

இன்ஷா அல்லாஹ் இதைச் செய்வோம். ஒன்றிணைவோம் பாலஸ்தீன மக்களுடன் பைத்துல் முகத்திஸ்-ஐ மீட்போம். பைத்துல் முகத்திஸ் - அல்அக்ஸா ஆகியவை முழுமையாக மீட்கப்படும் வரை நமது முயற்சிகள் தொடரும்.

**நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் / தாருல் இஸ்லாம்**

தொடக்க நாள் தொட்டே நீதி அமைதிக்கான மக்கள் இயக்கமும், தாருல் இஸ்லாமும், அல்குத்ஸ் - தினத்தை தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அறிமுகப்படுத்தி வருகின்றது.

அதேபோல், உலக முஸ்லிம்களின் முதல் கிப்லாவான அல் அக்ஸா மஸ்ஜித் - அதன் முக்கியத்துவம் அதன் வரலாறு ஆகியவற்றையும் விரித்துரைத்து வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் யூதர்கள் அல்அக்ஸாவிலும், பாலஸ்தீன மக்கள் மீதும் தொடுக்கும் தாக்குதல்களையும், கட்டவிழ்த்துவிடும் குரூரங்களையும், கொலைகளையும் தவறாமல் பட்டியலிட்டு வருகின்றோம்.

அல்அக்ஸ-ாவை சுற்றி நடக்கும் அத்தனை நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தி நமது வைகறை வெளிச்சம் இதழிலும் வெளியிட்டு வருகின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

**ஐரோப்பிய நாடுகளில் அல்குத்ஸ் தினம்**

அல்குத்ஸ் தினம், 1990 முதல் ஐரோப்பிய நாடுகளிலும் உலகில் இதரப்பகுதிகளிலும் அனுசரிக்கப்படுகின்றது.

ஆக அல்குத்ஸ் என்பது ஜெரூசலத்தையும், அதில் வீற்றிருக்கும் அல்அக்ஸா மஸ்ஜித்-யும் மீட்டது. உலக மக்கள் இயக்கமாக பீடுநடை போடுகின்றது.

அல்குத்ஸ் தினம் இடம்பெறும் நாடுகள் பிரிட்டன், ஜெர்மனி, வட ஆப்பிரிக்கா, பாகிஸ்தான், சிரி, நைஜீரியா (2014 முதல்) (கெனடா 2014 முதல்)

ஆஸ்திரேலியா, அமெரிக்கா 2015 ஆண்டு முதல் தென்னாப்பிரிக்கா 2016 ஆம் ஆண்டு முதல். சில நாடுகளில் - குறிப்பாக ஜெர்மனி போன்ற நாடுகளில் யூதர்களை ஜீயோனிஸ்ட்டுகள் என அழைக்கின்றார்கள். இஸ்ரேல் காஸா



பகுதியில் கொலை செய்யும் குழந்தைகளை மையப்படுத்தி அல்குத்ஸ் நாளில் ஜீயோனிஸ்ட்டு குழந்தை கொலைகளுக்கு எதிரான நாள் எனவும் அழைக்கின்றார்கள்.

இன்னும் சில ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரிட்டனில், பாலஸ்தீன மக்களுக்கு நீதி "Justice for Palestinian people" என அனுசரிக் கப்படுகின்றது.

ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டிலும் பல நகரங்களிலும் இந்த அல்குத்ஸ் தினம் அனுசரிக் கப்படுகின்றது. அதேபோல் நைஜீரியாவில் 14 பெருநகரங்களில் இந்த அல்குத்ஸ் தினம் கடைப் பிடிக்கப்படுகின்றது. வட அமெரிக்காவில் பல நகரங்களில் இந்த அல்குத்ஸ் தினம் அனுசரிக்கப் படுகின்றது. பொதுக்கூட்டங்கள் நடத்தப்படு கின்றது.

கொரோனா-19 காலம் வரை இந்த மக்கள் எழுச்சிகள் கொரோனா காலத்தில் தடைப்பட்டன.

**யூதர்களின் சதி**

1979 ஈரான் அல்குத்ஸ் தினத்தை அறிவித்த போது, சியா முஸ்லிம்களைக் கட்டுப்படுத்திட சதிகளை மேற்கொண்டது இஸ்ரேல்.

உலக அரங்கில் வாழும் சியா மக்களின் எண்ணிக்கைக் குறைவு என்பதால் இந்த அல்குத்ஸ் உலக மக்களால் அதிகமாக கண்டுகொள்ளப் படாது என எண்ணினார் இஸ்ரேலிய ஜீயோ னிஸ்ட்டுகள் (யூதர்கள்). ஆனால், 1988இல் அதனை OIC என்ற Organization of Islamic Coun tries. உலக முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பு இந்த நாளை உலக மயமாக்கியது.

அதன்பின்னர், அது "இஸ்லாமோஃபோபியா" இஸ்லாம் மீது வெறுப்பு, முஸ்லிம்களின் மீது வெறுப்பு இவையெல்லாம் மிகையாக இருந்த ஐரோப்பாவிலும் பரவியது. இதனால் யூதர்களின் சதி முறியடிக்கப்பட்டது.

இலங்கையிலும் - இந்தியாவிலும் சில சதிகாரர்கள் இன்னும் இதனை சியா தினம் எனக்கூறி வருகின்றார்கள்.

**யூதர்களுக்கு இன்னொரு அதிர்ச்சி!**

அன்றைய நாட்களில் யூதர்கள், நாங்கள் ஜெர்மனியில் அதிகமாக படுகொலை செய்யப் பட்டோம் என்று கூறி உலக மக்களிடையே அனுதாபத்தைப் பெற்று வந்தார்கள். இப்போது அல்குத்ஸ் தினம் உலகெங்கும் பரவி கடந்த 72 ஆண்டுகளாக பாலஸ்தீனில் செய்துவரும் அநியாயங்கள் குழந்தை கொலைகள் இவை உலக மக்களிடையே யூதர்கள் குரூரமான கொலை காரர்கள் என்ற எண்ணம் வேகமாக பரவி வருகின்றது.

ஜீயோனிஸ்ட் இஸ்ரேலை சாராதா யூதர்கள், இப்போது பாலஸ்தீன முஸ்லிம்களுக்கு மக்களுக்கு நியாயம் தேடிடத் தொடங்கிவிட்டார்கள்.


**யூதர்களுக்கு இன்னொரு அதிர்ச்சி**

"நெட்டூரை கத்தா" என்றொரு அமைப்பு. இதனை ஆங்கிலத்தில் "Guardian of the City" என அழைக்கின்றார்கள். (ஜெருசலத்தின்) பாதுகாப்பு காவலர்கள் என அழைக்கின்றார்கள். இந்த அமைப்பு யூத மதக்குருக்களால் நடத்தப்படுவது. இவர்கள் 1938 முதலே செயல்படுகின்றது என்றாலும் - இடையில் காணாமல் போய்விட் டார்கள். இவர்களின் கொள்கை "யூத மீட்பர்" "Jewish Messsiah" வரும்வரை யூதர்கள், தங்களுக் கென ஒரு நாட்டை வைத்துக்கொள்ளக் கூடாது.

ஆகவேசியோனிசஇஸ்ரேல்நாட்டைமெல்ல மெல்ல கலைத்துவிட வேண்டும் என்பதாகும். இவர்கள் இஸ்லாத்திற்கும் எதிரானவர்கள்தாம். இப்போது அதிர்ச்சி என்னவென்றால், இவர்களும் அல்குத்ஸ் தின நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கின் றார்கள். குறிப்பாக ஜெர்மனியில் நடக்கும் அல்குத்ஸ் தின நிகழ்வுகளில் யூதர்களின் ஆதர வாளர்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றார்கள்.

- MGM

# இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் கவிஞர் கோதே?



அறிவொளி காலத்தில் (Age of Enlighten ment) உருவான கருத்துக்களை தொடர்ந்து ஏற்பட்ட ஃப்ரெஞ்ச் புரட்சி ஐரோப்பாவை தேவாலயங்களின் கட்டுபாட்டில் இருந்து விடுவித்தது. அதற்கு முந்தைய காலத்தில் இஸ்லாம், இறைத்தூதர் முஹம்மது நபி இவற்றை குறித்த தகவல்களை கூட தேவாலயங்கள் தங்களுடைய கட்டுபாட்டில் வைத்திருந்தன. அவையெல்லாம் அறிவொளி காலத்தில் கேள்விகளுக்கு உள்ளாக்கப்பட்டன.

இஸ்லாமிற்கு எதிரான தேவாலயங்களின் ஆதிக்கங்கள் வலுவிழந்தாலும் வெறுப்புகள் மறுவடிவம் எடுத்தன. உதாரணமாக அறிவொளி இயக்க சிந்தனையாளரான வோல்ட்டயர் (Voltaire) மனித பண்புகளை முன்னிறுத்தும் கருத்துகளை பின்னுக்கு தள்ளிவிட்டு இறைதூதர் முஹம்மது நபியை தாக்கி மேடை நாடகத்தை எடுத்தார். அதுவே மற்றவர்களும் பின்தொடர காரணமாக அமைந்தது.

இப்படி வெறுப்புகள் ஐரோப்பாவில் பரவிய அந்த நேரத்திலும் இறைத்தூதரை ஆதரித்தவர்களும் உண்டு, புகழ்ந்தவர்களும் உண்டு. அதில் முக்கியமானவர் உலக இலக்கியங்களை படைத்த ஜெர்மன் கவிஞர் கோதே (Johann Wolfgang von Goethe).

பள்ளி பருவத்தில் தத்துவவியலாளரான ஹெர்டருடன் (Johann Gottfried Herder) அறிமுகம் கிடைத்த பின் அவருடைய வாழ்க்கை மாறியது. இஸ்லாமை பற்றி நல்ல அபிப்பிராயத்தை கொண்டிருந்தார் ஹெர்டர். திருக்குர்ஆனை படிக்க கோதேவிற்கு அறிவுறுத்தியவரும் அவரே.

திருக்குர்ஆனை பலமுறை படித்தார், சில சூராக்களை அரபியிலும் எழுதினார் கோதே.

தன்னுடைய 23வது வயதில் முஹம்மது நபி பாடல் என்ற கவிதையை எழுதினார். 1774 ஆம் ஆண்டு இக்கவிதை ஒரு பத்திரிக்கையில் வெளிவந்தது. தன்னுடைய 70வது வயதில் திருக்குர்ஆன் இறங்கிய இரவான லைலத்துல் கத்ரை கொண்டாடப் போவதாக வெளிப்படையாக அறிவித்தார். இந்த இரண்டு இடைப்பட்ட காலத்திற்கும் மத்தியில் இஸ்லாமின் மீது கொண்ட மதிப்பை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

17 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இஸ்லாமை பற்றியும் முஹம்மது நபியை பற்றியும் ஐரோப்பாவில் எழுதப்பட்டவை முழுக்க முழுக்க ஒரு சார்பு மனநிலையுடன் எழுதப்பட்டவையே. வெறுப்பையே எழுதவேண்டுமென்று நினைத்த ஆசிரியர்களின் கருத்துக்களையே அவை பிரதிபலித்தன. இப்படி இருந்த நேரத்தில் பாரபட்சமற்ற உண்மையான தகவல்களை எடுத்துக் கூறிடும் முயற்சிகளும் நடந்தன.

1) புரோட்டஸ்டண்ட் அறிஞர் ரெலந்த் (Hadrian Reland) எழுதி 1705 இல் வெளிவந்த 'De Relgione Mohamedica' என்ற புத்தகம் இஸ்லாமை பற்றிய நேர்மையான மதிப்பீடுகளை செய்த முதல் புத்தகம்.

*2) 1734* இல் திருக்குரானின் ஆங்கில மொழியாக்கத்தை கொண்டுவந்தார் ஜார்ஜ் சேல் (George Sale).

*3)* ஹெர்பெலாட் (Batholomee d'Herbelot) எழுதி *1697* இல் பாரிஸ் நகரில் வெளியிடப் பட்ட 'Bibliotheque Oreintale' என்ற புத்தகம். அறிவொளி காலத்தில் வெளிவந்த இந்த மூன்று படைப்புகளும் கோதேவின் இளமை காலத்தில் தாக்கத்தை செலுத்தின.

கோதேவின் காலத்தில் ஜெர்மனியில் வாழ்ந்த வர்களான Leibniz, Lessing, Herder ஆகிய மூன்று பேரும் இஸ்லாத்தையும், முஹம்மது நபியையும் புகழ்ந்து எழுதினர்.

Leibniz எழுதி *1710* வெளிவந்த Theodizee என்ற புத்தகத்தில் முஹம்மது நபியை புகழ்ந்தார் அவர். Lessing இன் எழுத்துக்களே புராட்டஸ் டண்ட் அறிஞர்கள் இஸ்லாமை பற்றி நேர் மறையாக எழுதிட உதவின. ஏகத்துவத்தை பரப்பியதற்காக முஹம்மது நபியை புகழ்ந்தார் ஹெர்டர்.

இதனாலே கோதே இஸ்லாமின் மீது தன்னு டைய பார்வையை செலுத்தினார், இஸ்லாமைப் பற்றி நல்ல அபிப்ராயம் கொண்டார் என்று கூறிட முடியாது. அவரை பொருத்தவரை அவருடைய சொந்த சிந்தனைகளும் நம்பிக்கைகளும் இஸ்லாமிய கோட்பாடுகளோடு ஒத்துபோயின. அது அவரை இஸ்லாமின் பக்கம் இழுத்தது.

ஹெர்டருக்கு எழுதிய கடிதத்தின் இறுதியில் திருக்குர்ஆனில் மூசா நபி இறைவனிடம் பிரார்த்தித்ததை போன்று பிரார்த்திக்க நான் விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்.

(சூரா தாஹா *,25 - 26*).

திருக்குர்ஆனை அதே கவிதை நயத்துடனும் தூதுத்துவ செய்திகளின் தன்மை மாறாமலும் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்க்க விரும்பி னார். அப்பொழுதிருந்த எந்த மொழியாக்கமும் கோதேவின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய வில்லை. திருக்குர்ஆனின் மொழியியல் அழகை உணர்ந்திருந்தார் அவர்.

திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை அவர் மிகவும் விரும்பி உள்ளதை அவருடைய எழுத்துக்களில் பார்க்க முடிகிறது.

*1819* இல் ஒரு அறிஞருக்கு எழுதிய கடிதத்தில் "தூதர்கள் அனைவரையும் அவரவரின் சமுதாய மொழியிலேயே தூது செய்தி அறிவிப்பவர்களாய் நாம் அனுப்பி வைத்தோம்" (குரான் *14:4*) என்ற வசனத்தை குறிப்பிட்டுள்ளார். அதே வசனத்தை *1827* இல் தன்னுடைய ஸ்காட்லாந்து நண்பரான Carlyleக்கு எழுதிய கடிதத்திலும் குறிப்பிட் டுள்ளார். *1828* இல் எழுதிய கட்டுரையிலும் இவ்வசனத்தை குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாம் என்பதற்கு இறைவனிடம் சரணடைவது தான் பொருள் என்றால் இஸ்லாத்திலே நாம் அனைவரும் வாழ்கிறோம் அதிலேயே மரணிக்கிறோம் என்றார்.

(Divan WA I6, 128)

இக்கவிஞர் ஒரு முஸ்லிமாக இருப்பாரோ என்று மக்கள் சந்தேகிக்கின்றனர். அவர்களின் சந்தேகத்தை அவர் மறுக்க போவதில்லை என்று எழுதினார் (WA I 41,86)

**வோல்ட்டயரின் கருத்துகளில் மாற்றம் ஏற்பட்டதா ?**

*1736* இல் முஹம்மது நபியை தவறாக சித்தரித்து மேடை நாடகத்தை எடுத்தார் வோல்ட் டயர். கதையில் கூறபட்டவைக்கும் நிஜதிற்க்கும் சம்பந்தமில்லை என்று அவருக்கு நன்றாக தெரியும். எனினும் எல்லா மதத்தையும் எதிர்க்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே அந்நாடகம் அமைந்தது. ஆனால் ஜார்ஜ் சேலின் குர்ஆன் மொழியாக்கத்தை படித்த பின், வோல்டயரின் கருத்துகளில் மாற்றம் ஏற்பட்டதை பார்க்க முடிகிறது. உலக வரலாற்றை குறித்து எழுதிய "An Essay on universal History, the manners and spirit of Nation" என்ற கட்டுரையில் முஹம்மது நபியை " மூட பழக்க வழக்கங்களை ஒழித்தவர், களங்கப்பட்டு கிடந்த திருச்சபை மத குருமார்களின் அதிகாரத்தை அழித்த உத்வேகத்தை தரும் சீர்திருத்தவாதி'' என்று குறிப்பிட்டுள்ளார் வோல்டயர்.

தகவல்கள் - Dailysabah.com || Western perception of Prophet Muhammad via publi cations || How German literary great Goethe admired the Orient, embraced Islam Geothe and Islam by professor Emeritus Katharina Mommsen

- அபூஹாசின்



## பரப்புரைப் பெரும் பயணம் ஏன்?-8

# பாடப் புத்தகங்களில் இந்துத்துவா

இந்திய வரலாறு திருத்தி, மாற்றி எழுதப்பட வேண்டும் என்ற நோக்கில் கலாச்சாரத்துறை அமைச்சர் மகேஷ் ஷர்மா ஒரு குழுவை நியமித்துள்ளார் என்ற விஷயம் 2018 மார்ச்சில் தெரிய வந்தது. 12ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இந்திய கலாச்சாரத்தின் தோற்றம், அதன் பரிணாமம், மற்ற கலாச்சாரங்களோடு தொடர்பு கொண்டவிதம் இவற்றை ஆராய 14 பேர் இக்குழுவில் இணைக்கப்பட்டனர்.

வரலாற்று ஆய்வாளர்கள் கூறும் காலத்தைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு முந்தையது. ஹிந்து நாகரீகம் என்ற கருத்தின் மூலம் இரண்டு பலன்களை அறுவடை செய்ய பார்க்கிறார்கள்.

ஒன்று, புராணங்களை வரலாறாக காட்டிவிடலாம். ஹிந்து தேசியவாதிகளின் நீண்ட கால முயற்சி இது. இரண்டு, ஹிந்துக்கள் தான் இந்தியாவில் வாழ்ந்த மூதாதையர்களிடம் இருந்து தோன்றிய நேரடி வழித்தோன்றல்கள் என்று நிருபிப்பதற்காக.

இதற்கான சான்றுகளை பண்டைய வரலாற்றில் தேடுகின்றனர். அதன்மூலம் மற்றவர்களை விட நாம் தான் உயர்ந்தவர்கள் என்று ஹிந்து தேசியவாதிகள் கோரிடுவர். கலாச்சாரம், வரலாறு இவற்றில் மகேஷ் ஷர்மா கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் அதே வேளையில் இதே போன்ற திட்டத்துடன் பொதுக் கல்வியில் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளனர். மாநிலங்களுக்கான மனித வள மேம்பாட்டு துறையின் மேனாள் அமைச்சர் ராம் ஷங்கர் கதேரியா

### விடுதலை

**பயன்படுத்திய அறிவு விளக்கம் தரும் "வைகறை வெளிச்சம்" கட்டுரை**

திராவிடர் கழகத் தலைவர் பேராசிரியர் வீரமணி அவர்கள் தமிழகமெங்கும் சுற்றுப் பயணம் மேற் கொண்டு வருகின்றார்.

இந்தச்சுற்றுப்பயணங்கள் நீட் தேர்வு, தேசிய கல்விக் கொள்கை போன்ற தேசிய ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிரான சுற்றுப் பயணம்.

இந்தச் சுற்றுப் பயணங் களைப் பற்றிய முழு விபரங் களையும், விடுதலை நாளிதழ் விபரமாக வெளியிட்டு வருகின்றது. இந்தச் சுற்றுப் பயணங்கள் ஏன் என்ற அடிப்படையில், கருத்தாழ மிக்க கட்டுரைகளையும் வெளியிட்டு வருகின்றது.

இந்த அடிப்படையில் அது தன்னைத் தொடர்பவர் களுக்கு விளக்கம் தந்திட 15-4-2022ல் வைகறை வெளிச்சம் "டிசம்பர்-2021) இடம்பெற்ற அபூஹாசிம் அவர்கள் எழுதிய கட்டு ரையை வெளியிட்டிருந்தது. அதனை இங்கே தருகின்றோம்.

ஒருமுறை இப்படி கூறினார், "கல்வியை காவி மயமாக்குவதும், தேசத்தை காவி மயமாக்கு வதும் இனிமேல் நடைபெறும். அரசு அதன் நோக்கத்தை தெளிவுபடுத்தி விட்டதை இதன் மூலம் உணரலாம்.

தங்களுடைய கொள்கைகளை புகுத்திட புதிய பாடப் புத்தகங்களை எழுதுவதற்கும், அதற்கான நெறிமுறைகளை வெளியிடவும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் (NCERT - National, council for Education Research and Training) வழி முயற்சித்த மேனாள் வாஜ்பாய் அரசின் செயல்பாட்டை விட மோடி அரசின் செயல்பாடு வித்தியாசமானது. இரகசியமான நடவடிக்கைகளை கொண்டும், மாநில அரசு களை கொண்டும் பாடப் புத்தகங்களில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. புதிய கல்விக் கொள்கையை தாமதப்படுத்துவதின் நோக்கம் அதனை மோடி அரசு கைவிட்டுவிட்டது என்ப தல்ல மாறாக பொது விவாதங்களை தவிர்த்து விட்டு மறைமுக நடவடிக்கைகளின் மூலம் அதனை மக்கள் மத்தியில் புகுத்தி விடலாம் என்பதே.

சிபிஎஸ்இ (Central Board of Secondary Education) பாடத்திட்டத்தில் இயங்கும் பள்ளிக் கூடங்கள் பயன்படுத்துவதற்காக NCERT வெளியிட்ட பாட புத்தகங்களில் பெருமளவு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. தி இந்தியன் எக்ஸ்பிரசில் வந்த செய்தியின் படி, மனிதவள மேம்பாட்டுத்துறையின் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகரின் (ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்) தொடர்ச்சியான தலையீட்டினால் 182 பாடப் புத்தகங்களில் 1334 இடங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. NCERT மற்றும் அனுபவம் வாய்ந்த கல்வியாளர்களை கலந்தா லோசிக்க வேண்டும் என்ற வழிமுறையை செயல்படுத்தாமல் 68 இடங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

முஸ்லிம்களின் வரலாற்றை நீக்கிவிட்டு அந்த இடங்களில் ஹிந்து தேசியவாதிகள் தலைவர் களாக முன்னிறுத்தும் நபர்களின் (மகாராணா பிரதாப், சிவாஜி, அரோபிந்தோ, விவேகானந்தா போன்றோர்) வரலாறுகளையும், பழங்கால இந்தியா பற்றிய கூடுதல் தகவல்களையும் (மருத்துவம், வானியல், யோகா) இணைத்துள் ளனர். வரலாற்று புத்தகங்களில் மட்டும் இந்த மாற்றங்கள் கொண்டு வரப்படவில்லை. பத்தாம். வகுப்பு அறிவியல் புத்தகத்தில் அதர்வன வேதாவில் இருந்து இரண்டு மந்திரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. விண்மீன் கூட்டங்கள் குறித்து ஹிந்து புராணங்கள் என்ன சொல் கின்றன என்பதை எட்டாம் வகுப்பு புத்தகத்தில் இணைத்துள்ளனர். பல பாட புத்தகங்களில் மோடி அரசின் முக்கியமான திட்டங்களைச் சேர்த்துள்ளனர்.

பிஜேபி ஆளும் மாநிலங்களில் இப்படி வரலாற்றை மாற்றி எழுதும் பணி மும்முரமாக நடைபெறுகிறது. ஆரம்ப மற்றும் இடைநிலை கல்விகள் மாநிலங்களின் கட்டுப்பாட்டில் வருவதால், தேசிய அளவில் போடப்பட்ட திட்டத்தை மாநில அளவிலும் உணர முடிகிறது.

குஜராத், அரியானா மாநிலங்களில் பாடப் புத்தகங்களை மாற்றி எழுதும் பணி பத்ரா என்பவரிடம் ஒப் படைக்கப்பட்டது. 2014 இல் பிஜேபி வெற்றி பெற்றபின், அரியானாவில் கல்வி முறையை புதுப்பிக்கும் குழுவிற்கு தலைவராக இவர் நியமிக்கப்பட்டார். குஜராத்தில் அறநெறி கல்விக்காக இவர் எழுதிய புத்தகத்தை அரியானா விற்கும் கொண்டு வந்தார்.

பெண் கடவுள் சரஸ்வதியின் துதி பாடலுடன் தான் இவை ஆரம்பிக்கின்றன. ஆனால் ஹிந்து மயமாக்கலின் அடையாளமாக இவற்றை எடுக்க முடியாது என வாதிக்கிறார் பத்ரா. சரஸ்வதியை மதத்தோடு தொடர்பு படுத்தக் கூடாது. பெண் கடவுளின் ஒவ்வொரு பாகங்களும் ஒவ்வொரு நற்குணங்களின் அடையாளம் அவை ஒவ்வொரு மாணவர்களும் வளர்த்து கொள்ள வேண்டி யவை. நல்ல சிந்தனை கொண்ட எந்த முஸ்லிமும் இந்த - குணங்களை வேண்டாம் என்று சொல்வாரா? "ஹிந்துத்துவாவையும் தேசப் பற்றையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு பள்ளிக்கூடத்தை - எழுப்பிட வேண்டும் என்பது என் கனா" என்ற பத்ராவின் ஒரு கவிதையையும் பாட புத்தகங் களில் இணைத்துள்ளனர்.

அக்பருக்கும், ராஜ்புத் அரசருக்கும் நடந்த போரில் வெற்றி பெற்றது ராஜ்புத் அரசரே என ராஜஸ்தானில் வரலாற்று பாடப்புத்தகத்தில் கொண்டு வந்த மாற்றம்தான் ஊடகங்களில் பெரிய அளவில் கவனம் பெற்றது (அக்பர் வென்றார் என்பதே 'வரலாறு). புதிய சமூக அறிவியல் பாட புத்தகத்தில் ஜவஹர்லால் நேருவையும், மகாத்மா காந்தி கொலையையும் இடம்பெறச் செய்யவில்லை.

மகாராட்டிராவில் ஏழாம் வகுப்பு வரலாறு

பாடப்புத்தகத்தில் முகலாய பேரரசர் அக்பர் குறித்த அத்தியாயம் மூன்றே வரிகளில் முடிக்கப் பட்டுவிட்டது. உத்தரப்பிரதேசத்தில் சில வரலாறு பாடப் புத்தகத்தில், 'முகலாயப் பேரரசு குறித்த அத்தியாயத்தை முழுவதுமாக எடுத்து விட்டார்கள். முகலாயப் பேரரசை பற்றி வரலாற் றுப் பாடத் திட்டத்தில் படிக்கும் கால அளவை யும் குறைத்துள்ளது டில்லி பல்கலைக்கழகம்.

வகுப்புவாதங்களை வளர்த்தெடுத்ததில் ஆர்.எஸ்.எஸ், இந்து மகா சபா, முஸ்லிம் லீக் ஆகியவைகளின் பங்கு என்ற அத்தியாயத்திற்கு பதிலாக தேசத்தை கட்டமைப்பதில் ஆர்.எஸ். எஸ்.ஸின் பங்கு என்ற தலைப்பு நாக்பூர் பல்கலைக் கழக பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட் டுள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் எல்லாப் பள்ளிக்கூடங் களும்பங்குபெறும்வகையில்ஒருதேர்வைநடத்தி யுள்ளது சங்பரிவார். தேர்வில் கலந்துகொள்ளும் 2 மாணவர்களுக்கு உதவுவதற்காக ஒரு சிற்றேடும் தயாரிக்கப்பட்டது, அதை 2017 ஆகஸ்டில் அமித்ஷா வெளியிட்டார். அதில் இந்தியா ஒரு இந்து ராஷ்டிரா என்றும் சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் இந்துத்துவாவிற்கு ஆதரவாக - பேசினார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கருநாடகாவில் திப்பு சுல்தான் ஜெயந்தி மாநில அரசால் கொண்டாடப்படாது என்று அறிவித்த பின்னர், ஏழாம் வகுப்பு பாட புத்தகத்தில் இருந்து திப்பு சுல்தான் பற்றிய அத்தியாயமும் நீக்கப்பட்டது.

Covid-19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு 30 சதவிகித பாடத்தை குறைக்க வேண்டும் என அரசு கேட்டுக்கொண்டது. இதனைப் பயன் படுத்தி இந்தியா முழுவதும் இயங்கும் அரசு பள்ளிகளில் ஜனநாயக - உரிமைகள், மதச்சார் பின்மை, கூட்டாட்சித் தத்துவம், குடியுரிமை போன்றவை) கற்பிக்கப்பட . வேண்டாமென முடிவெடுத்தது சிபிஎஸ்இ (CBSE).

சமகாலத்து அறிவியலை விட பண்டைய இந்தியாவின் அறிவியல் உயர்ந்தது என்று மிகைப்படுத்தி சொல்வதற்கு இவர்கள் பல கதைகளை கட்டி விடுகின்றனர். உதாரணமாக "மனிதவள மேம்பாட்டுத் துறையின் மாநில அமைச்சர்சத்தியபால்சிங்"இந்தியர்களேவானூர் தியை கண்டுபிடித்தனர்" என்று கூறினார்.

ராமரின் மனைவி சீதா மண்பானையில் தான் பிறந்தார் எனவே சோதனைக்குழாய் மூலம் கருவுறுதல் முறை பண்டைய இந்தியாவில் இருந்துள்ளது என்றார் உத்தரப்பிரதேச துணை. முதலமைச்சர். இதற்கு ஒருபடி மேலே போய், செயற்கைக்கோள்கள் - தொழில்நுட்பமும், இன்டர்நெட் வசதியும் பண்டைய இந்தியாவில் இருந்துள்ளது என்றார் திரிபுராவின் முதலமைச்சர் பிப்லாப் குமார்.

ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவில் புவி யீர்ப்பு விதி கண்டுபிடிக்கப்பட்டது என்றார் ராஜஸ்தான் கல்வித் துறை அமைச்சர். கேன்சர் நோயாளிகள் தங்களுடைய பாவத்தின் பலனையே அனுபவிக்கின்றனர் என்றார் அசாம் மாநில சுகாதார, கல்வி மற்றும் நிதி அமைச்சர்.

மாநிலத்தில் பாயும் ஒரு ஆறில் இருந்து நீர் அருந்தினால் அறுவை - சிகிச்சையை (சிசேரியன்) கர்ப்பிணி பெண்கள் தவிர்க்கலாம் என கூறினார். "உத்தரகாண்ட் பிஜேபியின் தலைவர். இனப் பெருக்கத்தில். மரபணுக்களின் பங்கு, பிளாஸ்டிக் சர்ஜரி போன்ற துறைகளை அறிமுகப்படுத்தியது இந்தியாவே என்றார் பிரதம அமைச்சர் மோடி. 2014 அக்டோபரில் ஒரு மருத்துவமனையில் நடந்த கூட்டத்தில் இப்படிக் கூறினார், "மகா பாரதத்தில் வரும் கர்ணன் கதாபாத்திரத்தை நாம் படிக்கின்றோம். தாயின் கருவறையில் இருந்து - கர்ணன் பிறக்கவில்லை என்று மகா பாரதம் கூறுகிறது. அப்படி என்றால் மரபணு அறிவியல் அந்த காலத்திலேயே இருந்துள்ளது. கடவுள் கணேசனை நாம் வணங்குகிறோம். மனித உடலில் யானையின் தலையை பொருத் திடும் பிளாஸ்டிக் அறுவை மருத்துவர்கள் கண்டிப்பாக அப்பொழுது இருந்திருக்க வேண்டும். அதிலிருந்தே பிளாஸ்டிக் சர்ஜரி முறை ஆரம்பித்துள்ளது".

இதே போன்ற கதைகளை அவிழ்த்துவிடும் பொழுதெல்லாம் பகுத்தறிவுவாதிகளிடம் இருந்து எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அப்படி எதிர்த்த நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே, கல்புர்கி ஆகியோர் கொலை செய்யப் பட்டுவிட்டனர். வரலாற்றை மாற்றி எழுதும் பணியில்ஹிந்து. தேசியவாதிகள் முனைப்புடன், - செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் மேலே சொன்ன விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

தகவல்கள் : Scroll.in, 19 November 2021

நன்றி: "வைகறை வெளிச்சம்" டிசம்பர் 2021



# இராமநவமி பெயரால் வன்முறை வெறியாட்டம்!

கோவா இஸ்லாம்புரா பகுதியில் அல் அக்ஸா மசூதி முன்பு ஒன்று கூடிய இந்துத்துவ அமைப்பினர், மசூதியின் வெளியே காவி கொடி ஏற்றினர். மசூதிக்குள் நுழைந்து அங்கும் கொடியை ஏற்றுவோம் என்று பல மணிநேரம் கூச்சலிட்டுக் கொண்டே இருந்தனர்.

அவ்வப்போது மசூதிக்குள் கல் வீசப்பட்டது, இஸ்லாமியப் பெண்கள் குறித்து மிகவும் அருவருப்பான சொற்கள் பேசப்பட்டன.

மசூதி மற்றும் அப்பகுதியில் உள்ள இஸ்லாமியர்கள், அவர்களின் குடும்பத்தினர் காவல்துறைக்கும், வெளி ஊர்களில் இருக்கும் தமது உறவுகளுக்கும் தொலைப்பேசி மூலம் ‘எங்களை வந்து காப்பாற்றுங்கள்’ என்று கேட்டு கதறிக் கொண்டு இருந்தனர். காவல்துறை இந்த நிகழ்வை எல்லாம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்தது.

குஜராத் ஹிம்மத் நகர் தர்காவில் கல்லறையைச் சிதைத்து அதைத் தோண்டி குப்பைகள் மற்றும் டயர்களைப் போட்டு எரித்து இராமநவமி கொண்டாடியுள்ளனர்.

கருநாடகாவில் தார்வாட், மத்தியப் பிரதேசத்தில் கட்னி, உத்தரப் பிரதேசம், பீகார் என கிட்டத்தட்ட பாஜக ஆளும் அனைத்து மாநிலங் களிலும் இராமநவமி கொண்டாட்டம் என்ற பெயரில் இஸ்லாமியர் குடும்பங்கள் அச்சுறுத்தப்பட்டன.

வழிபாட்டுத்தலங்கள் தாக்கப்பட்டன, இஸ்லாமியர்கள் சிலர் தாக்குதலுக்கு ஆளாகினர். மூன்று மாதங்களாக பாஜக ஆளும் மாநிலங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்துவந்த இந்த அத்துமீறல்கள் இராமநவமி என்ற பெயரில் ஒரே நாளில் 5 மாநிலங்களில் கோரமாக உருவெடுத்துள்ளன.

இவை அனைத்தும் சமூகவலைதளங்களில் படங்களோடு வந்தவை; வெகுஜன நாளிதழ்களோ, செய்தி தொலைக்காட்சிகளோ இந்த செய்திகளை வெளியிடவில்லை. (தெரிந்து கொள்வீர்!)

இந்த வன்முறைகள் அனைத்தும் காவல் துறையின் பாதுகாப்போடு நடந்தவை என்பது தான் அதிர்ச்சிக்குரிய ஒன்றாக உள்ளது. கருநாடக மாநிலம் தார்வாட்டில் இஸ்லாமிய வழிபாட்டுத்தலத்தின்மீது தாக்குதல் நடக்கும் போது பாதுகாப்பிற்கு நின்ற காவல்துறையினர் அதைத் தடுக்கவோ அல்லது வன்முறையாளர்களான இந்துத்துவ அமைப்பினர் மீது நடவடிக்கை எடுக்கவோ முன்வரவில்லை.

டில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில், இராமநவமி நாளில் இறைச்சி சாப்பிட்ட மாணவர்களை ஆர்.எஸ்.எஸ். மாணவர் அமைப்பான ஏபிவிபியினர் தாக்கியுள்ளனர்.

ஜவகர்லால் நேரு பல்கலைக் கழக மாணவர் அமைப்பின் மேனாள் தலைவர் மற்றும் பிஎச்டி மாணவியான சரிகா என்பவர் இதுபற்றிக் கூறிய தகவல் கவனிக்கத்தக்கது.

"ஒவ்வொரு ஞாயிறன்றும் மாணவர் விடுதியில் மாமிச உணவு சமைக் கப்படும். நாங்கள் மதிய உணவு சாப்பிட்டு விட்டு வந்து கொண்டிருந் தோம். அப்பொழுது ஆர்.எஸ்.எஸின் மாணவர் அமைப்பினர் 'இராமநவமியன்று மாமிச உணவை ஏன் சாப்பிட்டீர்கள்?' என்று கேள்வி கேட்டு எங்களைத் தாக்க ஆரம்பித்தனர். பலருக்கும் காயம் ஏற்பட்டது விடுதிக்குள் புகுந்து கண்காணிப்பாளரையும் தாக்கினர்" என்று கூறியுள்ளார்.

ஏற்கெனவே இந்திய ஒன்றியத்தில் பிஜேபி ஆட்சி; நடந்து முடிந்த 5 மாநிலங்களுக்கான சட்டப் பேரவைத் தேர்தலிலும் பெரும்பாலும் பிஜேபி அரசு ஏற்பட்ட பிறகு - சங்பரிவார்கள் தலைகால் புரியாமல் வன்முறைத் தாண்டவம் ஆடுகின்றனர்.

சிறுபான்மையின மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகக் குலை நடுங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இராமநவமி நாளில் மாமிச உணவு சாப்பிடக் கூடாதா? இன்னும் சொல்லப் போனால் வால்மீகி இராமாயணத்தின்படி இராமனும், சீதையும் மாமிச உணவு சாப்பிட்டவர்கள்தானே!

வால்மீகி இராமாயணம் தண்டகாருண்யம் 96ஆம் சுலோகம் என்ன கூறுகிறது?

"நிஷாந்த பாரஸ்த்தே கீதம்
மாம ஸோனாச் கண்டயம்"

"சீதைக்கு மாமிசத்தைக் கொடுத்து மகிழ்ச்சி யூட்டினான் இராமன்" என்பதுதான் இதன் பொருள்.

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் (இராஜாஜி), "சக்கரவர்த்தி திருமகன்" எனும் தலைப்பில் இராமாயணத்தைப் பற்றியும், இராமன், சீதை உள்ளிட்ட கதாபாத்திரங்களையும் விரிவாக எழுதியுள்ளார்.

அதில் ஒரு பகுதி இதோ:

"இவ்விடத்திலும், இன்னும் பல இடங்களி லும் இராம லட்சுமணர்கள் வேட்டையாடி, பூஜைக்குத் தகுந்த - அதாவது வழக்கப்படி சாப்பிடத் தகுந்த வேட்டையாகாரம் சம்பாதித்து உண்டார்கள் என்று வால்மீகி முனிவர் எழுதி யிருக்கிறார். சந்தேகத்திற்கு இடமில்லாமல் விளக்கமாக எழுதியிருக்கிறார். இதைப்பற்றி நாம் குழப்பம் அடைய வேண்டியதில்லை. க்ஷத்திரியர்களின் ஆசாரப்படி, மாமிச ஆகாரத்தில் குற்றமில்லை. காலத்துக்கும், குல வழக்கத்துக்கும் ஏற்றபடி உடலைப் பாதுகாப்பதற்காக எந்த உணவும் தக்க வழியில் சம்பாதித்து, பூஜையில் வைத்து, அளவுக்கு மிஞ்சாமல் உண்பதில் யாதொரு தவறுமில்லை என்பது பாரத தேசத்துக்கு பொது தருமம்."

- சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்

"சக்கரவர்த்தி திருமகன்" (முதற்பதிப்பு)- பக்கம் 88.

இராமநவமியன்று மாமிச உணவு சாப்பிடலாமா என்று கூறி மாமிசம் சாப்பிட்ட மாணவர்களைத் தாக்கிய இராமபக்தர்கள் - ஆர். எஸ்.எஸின் மாணவர் பிரிவான ஏபிவிபியினர் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

இராமன், இலட்சுமணன் மாமிசம் சாப்பிட் டது. பற்றி மட்டுமல்ல; அதற்கு மேலும் ஒருபடி சென்று என்ன எழுதுகிறார் ஆச்சாரியார்?

"மாமிச ஆகாரத்தில் குற்றமில்லை. காலத்துக் கும், வழக்கத்துக்கும் ஏற்றபடி உடல் பாதுகாப் பிற்காக மாமிசம் சாப்பிடுவதில் தவறுமில்லை என்பது பாரத தேசத்துக்குப் பொது தருமம்" என்று எழுதியுள்ளாரே!

உடலைப் பாதுகாப்பதற்காக மாமிச உணவு உண்பது பாரத தேசத்தின் பொதுத் தருமம் என்று சொல்லுவது கருப்புச் சட்டைக்காரர் அல்லர்; சாட்சாத் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் என்பது நினைவிருக் கட்டும்.

எதையும் முழுமையாகத் தெரிந்து கொள்ளா மல் ஆர்.எஸ்.எஸ். மூட்டிவிடும். மதவாத வெறித் தனத்தால் ஆட்டம் போடுவது, வன்முறை ஆயுதத்தைக் கையில் எடுத்துக் கொள்வது என்ற நிலை ஏற்பட்டால், இதற்கு ஆளும் அரசு அதிகாரம் பக்கபலமாக இருப்பது என்றால் நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பு எங்கே, எங்கே?

மிகவும் கவலையோடு, கவனமோடு சிந்திக்க வேண்டிய தருணம் இது. கட்சி மாச்சரியங்களை மறந்து மதச்சார்பற்ற சக்திகள், மனித உரிமை விரும்பிகள் ஒன்றுபடட்டும் - சிந்திக்கட்டும் - செயல்படட்டும் - செயல்படட்டும்!



# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள்

## பிறந்தநாளை இருட்டிப்பு செய்யவா விருந்து!

டாக்டர். அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் ஏப்ரல்-14,1891 அன்று பிறந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம். இன்று ஆட்சியில் இருப்பதால் அவருடைய பிறந்தநாள் ஓர் வரலாற்று முக்கியத்துவத்தைப் பெற்றது.

அதனால் ஏப்ரல்-14ஆம் நாள் "Day of Equality" "சமத்துவ நாள்" என அறிவித்தது. கொண்டாடியது. இப்படி அறிவித்து அரசாணையைப் பிறப்பித்த முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு நன்றிகள் பல.

இந்த நாளையும், நாட்டு மக்கள் அண்ணல் அம்பேத் அவர்களுக்கு எடுத்த விழாக்களையும் இருட்டடிப்புச் செய்ய தமிழக ப.ஜ.க.வினர் அதை தமிழ்ப்புத்தாண்டு என அறிவித்தார்கள்.

அதைத் தொடர்ந்து ஆளுநர் மாளிகையில் விருந்து உபச்சாரங்கள். ஆனால், ஆளும் திராவிட முன்னேற்றக் கழகமும் - இதர எல்லா கட்சிகளும் அந்த விருந்து நிகழ்ச்சியைப் புறக்கணித்தன. இதனால் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் இன்னும் அதிகமாகப் பேசப்பட்டது. வெளிச்சம் பெற்றது. உற்சாகம் பெற்றது.

அதேநேரத்தில் பாசிச பரிவாரங்களான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாரதிய ஜனதா கட்சி ஆகிய கட்சிகள் மட்டும் கலந்துகொண்டன. இதன்மூலம் ஆகியவற்றின் அம்பேத்கர் வெறுப்பும் வெளிப்பட்டது.

இனி அதிமுக.வும் பா.ஜ.க.வும் பாரதரத்னா அண்ணல் அம்பேத்கர் மீது அன்பு கொண்டவர்களை ஏமாற்றிட இயலாது. தாங்களும் தொடர்ந்து அம்பேத்கர் அவர்களுக்கா நீலிக் கண்ணீர் வடிக்கவும் இயலாது.

தமிழ்ப் புத்தாண்டு எது என்பதை அன்றைக்கு தமிழாய்ந்த தமிழ் அறிஞர்கள் பிரகடனப் படுத்தியுள்ளார்கள். இப்படியே நித்திரையிலிருக்கும் தமிழா!

(ஏப்ரல்) சித்திரை அல்ல உனக்குத் தமிழ்ப் புத்தாண்டு. அண்டிப் பிழைக்க வந்த ஆரியர் கூட்டம் காட்டியதே அறிவுக்கு ஒவ்வாத அறுபது ஆண்டுகள் தரணி ஆண்ட தமிழருக்கு தை முதல்நாளே தமிழ்ப் புத்தாண்டு.

- புரட்சிக் கவிஞர் -

ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டவர்கள் என்னதான் எகிறி குதித்தாலும் விழிப்புணர்வு தமிழர்கள் எப்போதும் ஏமாற மாட்டார்கள்.

**அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள்**

டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள், மரணித்து (நமது கணிப்பில் ஆதிக்க சக்திகளால் கொலை செய்யப்பட்டது) டிசம்பர்-6 (1956). அந்நாளில்தான் பாபரி மஸ்ஜித்-ஐ இடித்தார்கள் இந்த பாசிஸ்ட்டுகள். அதன்மூலம் அந்தநாளில் முஸ்லிம்கள் தலீத் மக்களுடன் இணைவதை - இணைந்து அம்பேத்கரின் கீர்த்தியை மக்கள் மன்றத்தில் எடுத்து வைப்பதை தடுக்கலாம் எனக் கணக்குப்போட்டார்கள். அந்தக் கணக்கு தப்பியது. முஸ்லிம்களும் தலீத்களும் ஓர் அணியில் நின்று அந்த நாளை சோக நாளாகப் பார்க்கின்றார்கள்.

அவர்களை அறியாமலே முஸ்லிம்களையும் தலீத் மக்களையும், ஒரே நேர்க்கோட்டில் கொண்டு வந்துவிட்டார்கள் இந்தியப் பாசிஸ்ட்டுகள். இவர்கள் நம் நாட்டின் மீது உண்மையிலேயே அக்கறை கொண்ட மக்களோடும் இணைந்து பாசிசத்தை வீழ்த்துவார்கள். பாரதத்தைக் காப்பார்கள். இந்த முயற்சியில் அனைவரையும் இணைப்போம். - MGM

## சாதி, மத ரீதியாக பிளவுபடுத்தும் முயற்சிக்கு

# தமிழினம் பலியாகிவிடக்கூடாது

### தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சி உரை



**சிறுபான்மையின மக்களுக்கும் திராவிட இயக்கத்துக்கும் முத்தமிழறிஞர் கலைஞருக்குமான உறவு என்றும் தொடரும்! எனவும், சாதியால், மதத்தால் தமிழினத்தைப் பிளவுபடுத்தி வளர்ச்சியைத் தடுக்கப் பார்க் கிறார்கள். அதற்குத் தமிழினம் பலியாகிவிடக் கூடாது எனவும், - திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.**

24-04-2022 அன்று கழகச் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் சென்னை திருவான்மியூரில் நடத்தப்பட்ட ரமலான் இப்தார் - நோன்பு திறப்பு நிகழ்வில், திராவிட முன்னேற் றக் கழகத்தின் தலைவரும் - தமிழ்நாடு முதல மைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

அஸ்ஸலாமு அலைக்கும்.

மஸ்தான் அவர்கள் நான் உரையாற்றக்கூடிய அந்த செய்தியை இந்த ஒலிபெருக்கியின் மூலம் சொல்லும்போது "எழுச்சியுரை... எழுச்சியுரை..." என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் நான் ஆற்றுவது எழுச்சியுரை அல்ல - உணர்ச்சி உரை.

இந்த விழாவை வெகு சிறப்பாக - மிகவும் பிரம்மாண்டமானதாக ஏற்பாடு செய்துள்ள கழகச் சிறுபான்மை அணிச் செயலாளரும், சிறுபான்மையினர் ஆணையத்துணைத் தலைவரு மான மஸ்தான் அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்தார் நோன்பு திறக்கும் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டுள்ள சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த பெருமக்களுக்கும், மற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இசுலாமியச் சமுதாயப் பெருமக்கள் இந்த ரமலான் மாதத்தை மிகமிகப் புனிதமான மாதமாகக் கடைபிடித்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். பசி, தாகம் ஆகியவற்றை மறந்து நோன்பு இருக்கிறார்கள். இதனைத் தங்கள் கடமையாக நினைத்துச் செய்கிறார்கள்.

சிறுபான்மை இயக்கத்திற்கும் - திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குமான நட்பு என்பது காலம் காலமாகத் தொடர்ந்து வந்து கொண் டிருக்கிறது - தொடரத்தான் போகிறது. அதில் யாரும் களங் கத்தையோ - பிரிவையோ ஏற்படுத்த முடியாது.

'நான் சிறு வயது இளைஞனாக இருந்தபோது ஒரு கையில் குடிஅரசு இதழையும் - இன்னொரு கையில் தாருல் இஸ்லாம் இதழையும் பிடித்து திருவாரூரில் வலம் வந்தேன்' என்று தலைவர்




கலைஞர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள்.

**அண்ணா - கலைஞருக்கு ஏற்பட்ட தொடர்பு!**

தந்தை பெரியாரைப் போலவே, என்னுள் சிந்தனை மாற்றம் ஏற்படுத்தியவர்களில் பா தாவூத் ஷாவிற்கும் பங்கு உண்டு என்று கலைஞரே சொல்லி இருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களையும், தலைவர் கலைஞர் அவர்களையும் இணைக்கும் பாலமாக இருந்ததே இசுலாமிய சமுதாய நிகழ்ச்சிதான்.

திருவாரூரில் நடந்த மிலாதுநபி விழாவிற்குப் பேச வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், 'இந்த ஊரில் கருணாநிதி என்றால் யார்? அவரை அழைத்து வாருங்கள்' என்று குறிப்பிட்டுச் சொல்லி அழைத்துள்ளார். எனவே இருவரும் முதன் முதலாக சந்திக்கக் காரணம் ஆனது மிலாதுநபி விழாதான் என்பது வரலாற்றில் பதிவாகியிருக்கிறது!

அதுமட்டுமல்ல, பள்ளிக் காலத்தில் கலைஞருக்கு உற்ற தோழனாய் இருந்து உதவி செய்தவர் திருவாரூரைச் சேர்ந்த அசன் அப்துல்காதர் அவர்கள்!

கையெழுத்து இதழாக இருந்த முரசொலியை அச்சில் வெளியிட கலைஞர் திட்டமிட்டபோது அதனை அச்சிட்டுக் கொடுத்தவர் கருணை ஜமால் அவர்கள். அவரும் திருவாரூரைச் சார்ந்தவர் தான்!

உள்ளூரில் எழுதிக் கொண்டு இருந்த கலைஞரை சேலம் மார்டன் தியேட்டருக்கு அழைத்துச் சென்று மாபெரும் கதை, வசன கர்த்தாவாக அடித்தளம் இட்டவர் கவிஞர் கா.மு. ஷெரீப் அவர்கள்!

தலைவர் கலைஞரைத் தனது காந்தக் குரலால் தமிழ்நாடு முழுவதும் கொண்டு சேர்த்தவர் இசை முரசு நாகூர் அனீபா அவர்கள்!

இவ்வாறு கலைஞர் அவர்களின் வாழ்க்கையோடு இணைந்தும் பிணைந்தும் இருந்தவர்கள் இசுலாமியத் தோழர்கள்!

தமிழ்நாட்டின் மிகப்பெரிய அரசியல் மாற்றம் *1967*-ஆம் ஆண்டு ஏற்பட்டது. ஒரு பெரிய கூட்டணி அமைந்தது. ஆட்சிக்கு வந்தோம். அந்தக் கூட்டணியில் மிகமிக முக்கியப் பங்களித்து - தோள் கொடுத்து நின்றவர் "கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்" அவர்கள்தான்.


*1947* முதல் *1962* வரை தமிழகத்தில் இசுலாமிய அமைச்சர் யாரும் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள்தான், இசுலாமிய சமூகத்திற்கு அமைச்சர் பதவி தர வேண்டும் என்று கோரிக்கையை வைத்தார்கள். அது காங்கிரஸ் ஆட்சிக்காலம். கடையநல்லூர் அப்துல் மஜீத் அவர்கள் அதன்பிறகு தான் அமைச்சர் ஆக்கப் பட்டார்கள்.

எதிர்க்கட்சியாக இருந்தபோதே சிறுபா ன்மையினர் உரிமைக்குக் குரல் கொடுத்த கழகம், ஆட்சி அமைத்த பின்னர் ஏராளமான சாதனைகளைச் செய்து கொடுத்தது.

*1989*-ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல ஆணையத்தை அமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

*1990*-ஆம் ஆண்டு அப்துல் ஜாபர் தலைமையில் சிறுபான்மையினர் நலக்குழுவை அமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

*1999*-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மை-






யினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

2000-ஆம் ஆண்டில் உருது அகாடமி தொடங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

தமிழ்நாடு வக்பு வாரிய நிர்வாகச் செலவிற்காக தமிழக அரசின் சார்பில் நிதி வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்! ஹஜ் மானியத்தை அதிகப்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசு மகளிர் கல்லூரிக்கு 'கண் ணியமிக்க காயிதே மில்லத்' அவர்களின் பெயரை 1974-ஆம் ஆண்டு சூட்டியவர் தலைவர் கலைஞர்.

நபிகள் நாயகம் பிறந்தநாளை அரசு விடுமுறையாக அறிவித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

சிறுபான்மையின மாணவியர் விமானப் பணிப்பெண் பயிற்சி பெற இலவச வசதிகளைச் செய்து கொடுத் தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இசுலாமியருக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை 2007-ஆம் ஆண்டு வழங்கி யவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

2007-ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல இயக்ககம் அமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் கொண்டுவந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

- இவை சிறுபான்மையின மக்களுக்காகச் செய்யப்பட்டவை மட்டும்தான். இவ்வாறு ஒவ்வொரு பிரிவு மக்களுக்கும் திட்டங்களைக் கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

அவருடைய வழியில் இப்போதும் சிறுபான்மை யினருக்கான நன்மைகளை தொடர்ந்து செய்து வருகிறோம். அதில் மிக முக்கியமானது, குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகத்



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 24.4.2022 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பில் திருவான்மியூர், ஸ்ரீராமச்சந்திரா கன்வென்ஷன் ஹாலில் நடைபெற்ற ரமலான் இஃப்தார் நிகடிநவில் கலந்துகொள்ள வருகை புரிந்தபோது, சிறுவர், சிறுமியர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானம் ஆகும்.

நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் கேள்விக்குறியாக்கும் ஒன்றிய அரசின் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில் தனித் தீர்மானத்தை நான்தான் - கலைஞருடைய மகன்தான் - "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான்" கொண்டு வந்து நிறைவேற்றினேன். முக்கிய எதிர்க்கட்சியான அ.தி.மு.க. வெளிநடப்பு செய்தது என்பதுதான் உண்மை. இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப் பட்டபோது என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும்.

**மக்கள் மன்றத்தில் கையெழுத்து இயக்கம்!**

மாநிலங்களவையில் CAA-விற்கு ஆதரவாக வாக்களித்தவர்கள்தான் அ.தி.மு.க. உறுப் பினர்கள். இந்தப் பத்துப் பேரும் ஆதரித்த தால்தான் அந்தச் சட்டமே நிறைவேறியது.

நாடாளுமன்ற மாநிலங்களவையிலும் - மக்களவையிலும் இதனை எதிர்த்து, மக்கள் மன்றத்தில் கையெழுத்து இயக்கம் நடத்திய கட்சி திமுக. சட்டமன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றிய கட்சி தி.மு.க. - என்பதை யாரும் மறுக்கவோ - மறைக்கவோ முடியாது.

**11 மாத கால ஆட்சியில் செய்த பணிகள்!**

இந்த வரிசையில் இசுலாமிய சிறுபான்மை யினர் சமுதாயத்திற்காக ஏராளமான நலத்திட் டங் களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறோம்.

நம்முடைய அரசு அமைந்ததற்கு பிறகு, சிறுபான்மையினர் நல ஆணையம் அமைக்கப் பட்டு நம்முடைய மரியாதைக்குரிய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அதன் தலைவராகவும் - முன்னாள் எம்.பி. மஸ்தான் அவர்கள் அதன் துணைத்தலைவராகவும் நியமிக்கப்பட்டுள் ளார்கள்.

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட 3,852 உறுப் பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் செய்யப் பட்டுள்ளது.

உலமாக்கள், பணியாளர் வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள 10,583 பேருக்கு மிதிவண்டி தரப்பட்டுள்ளது. 2,734 பேருக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

வக்பு வாரியத்திற்கான ஆண்டு நிர்வாக மானியம் 2.50 கோடி ரூபாயாக உயர்த்தப்




பட்டுள்ளது. சிறுபான்மையினர் நல விடுதி களில் மாணவ - மாணவியர் சேர்க் கைக்கு பெற்றோர் வருமான வரம்பு என்பது 1 லட்சத்தில் இருந்து 2 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் விழாக்கள் அன்று சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் ஐந்து மாவட்டங்களில் புதிய பணியிடங்களுடன் அலுவலகங்கள் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேனி, கிருஷ்ணகிரி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் முஸ்லீம் உதவி சங்கங்களும், கரூர், மதுரை, தேனி ஆகிய மாவட்டங்களில் கிறிஸ் தவ உதவி சங்கங்களும் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பள்ளிவாசல்கள், தர்காக்கள், வக்பு நிறுவனங் களைப் பழுது பார்க்க வழங்கப்படும் மானியம் 6 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. - இவை அனைத்தும் கடந்த 11 மாத காலத்தில் செய்த பணிகள் ஆகும். அதாவது உங்களது கோரிக்கைகளை எங்களிடம் சொல்லாமலேயே நிறைவேற்றித் தரும் ஆட்சிதான் கழக அரசு. இதைக் கழக அரசு என்றுகூட சொல்ல மாட்டேன் - நமது அரசு - நம் அனைவரின் அரசு.

சமய நம்பிக்கைகள் தனிப்பட்ட விருப்பம்!

மதம் என்பதும், சமய நம்பிக்கைகள் என்பதும் அவரவர் தனிப்பட்ட விருப்பங்கள் ஆகும். ஆனால் நாம் அனைவரும் தமிழர்கள் என்ற ஒற்றுமை உணர்வோடு செயல்பட வேண்டும். அப்படி செயல்பட்டால் கிடைக்கும் நன்மையும் அதிகம், பலமும் அதிகம்.

தமிழினத்தை சாதியால் - மதத்தால் பிரிக்க சிலர் முயற்சி செய்கிறார்கள். அவ்வாறு செய்தால்தான் தமிழினத்தை அழிக்க முடியும் என்று நினைக்கிறார்கள்.

நம்மைப் பிளவுபடுத்துவதன் மூலமாக - நமது வளர்ச்சியைத் தடுக்கப் பார்க்கிறார்கள். அதற்குத் தமிழினம் பலியாகிவிடக் கூடாது. அதற்குப் பின்னால் இருக்கும் சதியை உணர்ந்து - தெளிந்து - புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டில் அமைதி நிலவ வேண்டும், அமைதி யான - நிம்மதியான நாடுதான் அனைத்து விதமான வளர்ச்சியையும் பெறும். அத்தகைய வளர்ச்சிக்கான சூழ்நிலையை கடந்த ஓராண்டு காலத்தில் நம்முடைய அரசு உருவாக்கி உள்ளது.

அதனால்தான் நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். அனைவரையும் உள்ள டக்கிய திராவிட மாடல் வளர்ச்சியானது தமிழ் நாட்டை இந்தியாவின் சிறப்பான மாநிலங்களில் முதலிடத்தைப் பெறும் அளவிற்கு முன்னோக்கி நகர்த்தி வருகிறது.

**டாக்டர் மஸ்தானுக்கு இதயபூர்வமான நன்றி!**

இத்தகைய வளர்ச்சிக்கு அனைத்துத் தரப்பினரும் அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று சொல்லி - இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் இப்தார் வாழ்த்து களை நான் சொல்ல விரும்புகிறேன்.

அத்தோடு இந்த நிகழ்ச்சியை எல்லோரும் பாராட்டும் வகையில் மிகுந்த எழுச்சியோடு - உணர்ச்சியோடு இதை நடத்தி வெற்றி கண் டிருக்கும் நம்முடைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அன்புக்குரிய டாக்டர். மஸ்தான் அவர்களுக்கு என்னுடைய இதயப்பூர்வமான நன்றிகளையும் வாழ்த்துகளையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி! வணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# ஜஹாங்கீர்புரியில் நடந்தது என்ன?

புதுதில்லி, ஏப்.20- மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்), பார்வர்டு பிளாக் ஆகிய இடதுசாரிக் கட்சிகள் இணைந்து அனுப்பிய உண்மை அறியும் குழுவினர், தில்லி யின் வட மேற்குப் பகுதியில் ஜஹாங்கீர்புரி-சி பிளாக் பகுதிகளில் வன்முறை வெறியாட்டங்களால் பாதிப்புக்கு உள்ளான பகுதிகளுக்கு, 2022 ஏப்ரல் 17 அன்று சென்று பார்வையிட்டனர். அவர்கள் அந்தப் பகுதியில் இரு சமூகத்தினரையும் சேர்ந்த பாதிப்புக்கு உள்ளானவர்களிடமும், அங்கே குடியிருந்து வருபவர்ளிடமும் நடந்த சம்பவங்கள் குறித்து கேட்டறிந்தார்கள். இக்குழுவினர் சுமார் 50 குடும்பத் தினரிடம் விஷயங்களைக் கேட்டறிந் தார்கள். மேலும் இக்குழுவினர் அப்பகுதியைச் சேர்ந்த காவல்துறை கூடுதல் துணை ஆணையர், கிஷன் குமார் மற்றும் ஜஹாங்கீர்புரி காவல் நிலையத்தில் இருந்த இதர காவல்துறை அதிகாரிகளையும் சந்தித்தார்கள்.

**16ஆம் தேதி நடந்தது என்ன?**

அனுமான் ஜெயந்தி நடைபெற்ற தினத் தன்று சுமார் 150க்கும் 200க்கும் மேற்பட்ட வர்கள், தங்கள் கைகளில் ஆயுதங்களுடன் வந்ததாகவும், அன்றைய தினம் மதியத்திற் குப்பின்னர் ஜஹாங்கீர்புரியின் வீதிகளில் ஒலிபெருக்கியில் கோஷங்களை எழுப்பிக் கொண்டே, ஊர்வ லத்தினர் செல்லும் பாதை யில் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்ததாக, உண்மை அறியும் குழுவினரிடம் அன்றையதினம் நடந்த விஷயங்கள் குறித்துக் கூறிய அனைவருமே தெரிவித்திருக்கிறார்கள். ஊர்வலத்தை வேடிக்கை பார்த்தவர்கள், ஊர்வ லத்தில் சென்றவர்கள் தங்கள் கைகளில் வாள் களையும், பிஸ்டல் (துப்பாக்கி)களையும் வைத்திருந்ததாகவும் கூறியிருக்கிறார்கள். ஊர்வலம் தொடர்பாக பல்வேறு தொலைக் காட்சி அலைவரிசைகள் ஒளிபரப்பியுள்ள வீடியோ காட்சிகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

ஊர்வலத்தினர் மிகவும் மூர்க்கத்தனமான முறையில் உரத்து கூச்சல் எழுப்பிக்கொண்டு சென்றிருக்கின்றனர். இந்த ஊர்வலம் அங்கே யிருந்த மக்களால் நடத்தப்படவில்லை என்றும், பஜ்ரங் தளத்தின் இளைஞர் அணியால் அந்தப் பகுதிக்கு வெளியேயிருந்து வந்த வெளியாட் களால் நடத்தப்பட்ட ஒன்று என்றும் உண்மை அறியும் குழுவினரிடம் அனைவருமே தெரிவித் துள்ளனர். ஊர்வலத்தினருக்குப் பாதுகாப்பிற்காக முன்னும் பின்னும் இரு போலீஸ் ஜீப்புகள் வந்ததாகவும், ஒவ்வொரு ஜீப்பிலும் இரண்டு போலீஸ்காரர்கள் மட்டுமே இருந்தார்கள் என்றும் தெரியவந்துள்ளது.

**முதல் கேள்வி**

ஊர்வலத்திற்கு போதிய ஏற்பாடுகளை காவல்துறையினர் ஏன் மேற்கொள்ளவில்லை? ஊர்வலத்தினர்



ஆயுதங்களை ஏந்தி வர காவல் துறையினர் அனுமதித்தது ஏன்? ஊர்வலத்தினர் ஏற்கனவே இரு முறை ஜஹாங்கீர்புரி-‘சி’ பிளாக் வீதிகளில் ஊர்வல மாகச் சென்றிருக்கின்றனர். அந்தப் பகுதியில் வங்கமொழி பேசும் முஸ்லீம்கள் ஏராளமாகக் குடியிருந்து வருகின்றனர்.

ஊர்வலத்தினர் மூன்றாவது தடவை ஊர்வல மாக வரும்போதுதான் சம்பவங்கள் நடந்துள்ளன. பாஜக தலைவர்கள் கூறுவதுபோன்று ஊர்வலத் தினர்மீதுதாக்குதல்தொடுத்திட அங்கேவசிக்கும் காவல்துறைக்கும் பொறுப்பு இருக்கிறது.

இரு தரப்பினருமே கற்கள் எறிந்ததாக, உண்மை அறியும் குழுவினரிடம் கூறப்பட்டது. ஊர்வலமாக வந்தவர்கள் மசூதிக்குள் நுழை வார்களோ என்ற அச்ச உணர்வு அங்கே வசித்து வந்த குடியிருப்புவாசிகள் மத்தியில் இருந்ததாக, குழுவினரிடம் கூறப்பட்டது. போலீசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை; பெரிய அளவிற் குக் கூட்டமாகிவிட்டது. இந்த நிலையில், சிறுபான்மை இனத்தவரில் சிலரும் பின்னர் ஆயுதங்கள் கொண்டு வந்தனர்.



முஸ்லீம் களால் “சதி” (“conspiracy”) செய்யப் பட்டது என்பது உண்மையானால், அத்தகைய தாக்கு தல் அவர்கள் அதற்கு முன்பு ஊர்வலமாக வந்தபோதே நடந்திருக்க வேண்டும். உண்மை என்னவென்றால், அங்கேயிருந்த மசூதியில் தொழுகை ஆரம்பிக்கும் நேரத்தில், ஊர்வல மாக வந்தவர்கள் ஊர்வலமாகச் செல்லாமல் மசூதிக்கு வெளியே நின்றுகொண்டிருந்த போதுதான் சம்பவம் நடந்திருக்கிறது.

**இரண்டாவது கேள்வி**

ஊர்வலத்தினர் மசூதிக்கு முன் நிற்பதற்கு அனுமதிக்கப்பட்டது, ஏன்? மசூதிக்கு வெளியே நின்று கொண்டு முஸ்லீம்களுக்கு எதிராகக் கூச்சல் போட அனுமதித்தது ஏன்? இன்னும் குறிப்பாக ஆயுதந்தாங்கிய ஊர்வலத்தினர் மசூதிக்கு வெளியே நின்றுகொண்டு, தொழுகை தொடங்கி முடியும் சமயத்தில், முஸ்லீம்கள் கூட்டமாகத் திரண்டபோது, முஸ்லீம்களுக்கு எதிராக கோஷம் எழுப்ப அனுமதித்தது, ஏன்? உண்மையில் இந்தச்சம்பவம் நடைபெறுவதற்குக் காரணமான சதி இதுவேயாகும். இதற்குக்

மக்கள் கூட்டம் அதிகமான பின்னர் ஊர்வலத்தினர் ஓடிவிட்டனர் எனத் தெரிய வந்துள்ளது. சில கார்களும் ஒரு மோட்டார் பைக்கும் எரிந்து சேதப்படுத்தப்பட்டிருந்ததை உண்மை அறியும் குழுவினர் பார்த்தார்கள். இந்து ஒருவருக்கு சொந்தமான கடை சூறையாடப் பட்டிருந்தது. அந்த இடத்திற்கு வந்த காவல் துறையினர் மீதும் கல்லெறி நடந்து, அவர்களில் சிலர் காயங்கள் அடைந்தனர். 16ஆம் தேதி இரவு அந்தப் பகுதியில் காவல் துறையினர் சோத னைகள் மேற்கொண்டு, வகைதொகையின்றி சகட்டுமேனிக்குப் பலரைக் கைது செய்திருக் கின்றனர்.

பெண்கள் ஏன் எங்கள் வீட்டைச் சோதனை செய்கிறீர்கள் என்று கேட்க முயற்சித்தபோது, ஆண் போலீசார் அவர்களின் வயிற்றில் குத்தியும், தாக்கியும் இருக்கிறார்கள் என்ற விவரங்களும் தெரியவந்துள்ளன. இடதுசாரிக் கட்சிகளின் ஆய்வுக் குழுவினர் காவல் நிலையத்திற்குச் சென்றனர். அங்கே பாஜக தலைவர் அதேஷ் குப்தா, நாடாளுமன்ற உறுப்பினர் ஹன்ஸ் ராஜ்

ஹன்ஸ் ஆகியோர் இருந்ததைக் கண்டு அதிர்ச்சி யடைந்தார்கள். அவர்கள் காவல் நிலைய வளாகத் திற்குள்ளேயே காவல்துறை அதிகாரிகளின் முன்னிலையிலேயே பத்திரிகையாளர் சந்திப்பை நடத்திக்கொண்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றி யிருந்தவர்கள், ஜெய் ஸ்ரீராம் கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

### மூன்றாவது கேள்வி

போலீசார் ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இது தெளிவாகக் காட்டவில்லையா? அங்கே ஒட்டு மொத்தப் பகுதியிலும் பாஜக தலைவர்களின் செல்வாக்கின்கீழ் போலீசார் ஒருதரப்பினருக்குச் சாதகமாக, பாரபட்சமாகவே விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்ததி லிருந்து, போலீசார் மீது எவ்வித நம்பிக்கையும் ஏற்படவில்லை என்று குழுவினர் கண்டுள்ளனர். போலீசாரின் பங்கினை பாஜக வெளிப்படை யாகவே பாராட்டிக் கொண்டிருப்பதை இங்கே குறித்துக் கொள்ள வேண்டும். ஊர்வலத்தி னர் மிகவும் மூர்க்கத்தனமாக நடந்துகொண்டிருப் பதையும், ஆத்திரமூட்டும் விதத்தில் நடந்து கொண்டிருப்பதையும் வெளியாகியுள்ள வீடியோ சாட்சியங்கள் உலகம் முழுதும் வெளிச் சத்திற்குக் கொண்டுவந்துள்ள போதிலும், காவல் துறையினர் நடந்த சம்பவங்கள் தொடர்பாக, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களை மட்டுமே பிரதானமாகக் கைது செய்து கொண்டிருப்பதிலிருந்து, காவல்துறையினரின் நடவடிக்கைகள் முற்றி லும் அநியாயமானதும், ஒருதரப்பினருக்காகச் செயல்படும் நோக்கத்தைக் கொண்டவை என்பதும் தெளிவாகும். உண்மை அறியும் குழுவினர் காவல்துறை கூடுதல் ஆணை யரிடம் இவை தொடர்பாக புகார் தெரிவித் தனர். தாங்கள் சந்தித்த குடி யிருப்புவாசிகள் காவல்துறையினரின் பாரபட்சமான அணுகு முறை குறித்துக் கூறியதையும், முஸ்லீம் இளைஞர் களை மட்டும் காவல்துறையினர் பிடித்துச் செல்வது குறித்தும், ஊர்வலத்தில் வந்தவர்களுக்கு எதிராக எவ்வித நட வடிக்கையும் எடுக்காதது குறித்தும் தெரிவித்தனர். சோதனைக்கு வந்த ஆண் போலீசார் பெண்களிடம் மோசமாக நடந்துகொண்ட விதம் தொடர்பாக தங்களிடம் பெண்கள் கூறிய விவரங்களையும் அவரிடம் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் வசித்துவரும் மக்கள் மத்தியில் இதுநாள்வரையிலும் இதுபோன்று வகுப்புவாத மோதல்கள் எதுவுமே நடந்தது கிடையாது என்பதையும் உண்மை அறியும் குழுவினர் கண்டார்கள். பல பத்தாண்டு களாக இந்துக்களும், முஸ்லீம்களும் இங்கே நல்லிணக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். ஜஹாங்கீர்புரியில் வங்க முஸ்லீம்கள் அங்கே மறுவாழ்வு காலனி (resettlement colony) உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே, அதாவது குறைந்தபட்சம் நாற்பதாண்டு காலமாக, வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள், வீதிகளில் வியாபாரம் செய்பவர்கள், சிறிய அளவில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள், மீன் விற்பவர்கள், குப்பை களை சேகரிப்பவர்கள் போன்ற மிக மிக வறிய, எளிய மக்களே ஆவர். இவர்களை, பாஜக-வினர் "சட்டவிரோதமானவர்கள்" அல்லது ரோஹிங்கியா அகதிகள் என்று குறிப்பிடுவது அதிர்ச்சியளிக்கிறது. அவர்கள் தில்லியின் நேர்மை யான குடிமக்கள் (bonafide citizens) ஆவார்கள்.

### ஆர்எஸ்எஸ் பரிவாரத்தின் தொடர் திட்டம்

மதம் சார்ந்த விழாக்கள் மற்றும் பண்டிகை களை, மதவெறித் தீயை விசிறிவிடுவதற்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சங்பரி வாரத்தின் சில அமைப்புகள் வகுத்துக் கொண்டுள்ள நிகழ்ச்சிநிரலின் ஒரு பகுதியாகவே ஜஹாங்கீர்புரியில் இந்நிகழ்வுகள் நடந்திருக் கின்றன என்றே உண்மை அறியும் குழுவினர் காண்கிறார்கள். இதற்குமுன் தில்லியில் நடை பெற்ற நிகழ்வு களுடனும் இதனைப் பொருத்திப் பார்த்திட வேண்டும். பாஜக-வைச் சேர்ந்த தெற்கு தில்லி முனிசிபல் கார்ப்பரேஷன் மேயர், அசைவ உணவுகள் விற்பதற்குத் தடை விதித்து அறிவித் திருப்பதையும், ஏபிவிபி மாணவர் அமைப்பு, ஜேஎன்யு கேன்டீனில் சைவ உணவு மட்டுமே உண்ண வேண்டும் என்று திணிக்க முயற்சித்து, இதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் மீது தாக்கு தல் தொடுத்ததையும், சாவ்லா கிராமத்தில் பசுவைக் கொன்றதாகக் கூறி பசுக் குண்டர்கள் ஒரு பண்ணை இல்லத்தில் காப்பாளராக இருந்த ராஜாராம் என்பவரைக் கொன்றிருப்பதையும், இவற்றின் தொடர்ச்சியாகவே இப்போது சமீபத்திய அத்தியாயமாக ஜஹாங்கீர்புரி வகுப்புவாத வன்முறை வெறியாட்டங்களை யும் பார்த்திட வேண்டும். ஜஹாங்கீர்புரி சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் பொறுப்பு

தில்லிக் காவல்துறையினரின் குற்றப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இது ஒரு கண்துடைப்பேயாகும். இதனை ஏற்க முடியாது. உண்மையை வெளிக்கொணர்வதற்கு ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் நீதித்துறை விசார ணைக்கு உத்தரவிடப்பட வேண்டும். அதனால் மட்டுமே தலைநகரில் மக்கள் மத்தியில் நிலவும் மத நல்லிணக்கத்திற்கு ஊறுவிளைவித்திட சங்பரிவாரங்களால் மேற்கொள்ளப்படும் நாசகர முயற்சிகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவர முடியும்.

### இடதுசாரிக் கட்சிகள் வேண்டுகோள்

மதவெறிப் பிளவுவாத சக்திகளின் இழி முயற்சிகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்டுவது ஒன்றே பதிலாக இருந்திட முடியும் என்று மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆர்எஸ்எஸ் / பாஜக-வின் இழி முயற்சிகள் எவ்விதத்திலும் வெற்றி பெற அனுமதித்திடக் கூடாது என்பதே இப்போது காலத்தின் கட்டாயமாகும். நாடு எதிர்கொண்டுள்ள பொருளா தார முட்டுக்கட்டையிலிருந்தும், மக்களின் வாழ்வாதார நெருக்கடியிலிருந்தும் மீளமுடியாமல் தத்தளிக்கும் மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக அவர்கள் மதவெறி நஞ்சைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாற்று என்பது, மக்களின் வாழ்வாதாரங்களைப்



புல்டோசர் முன் துணிச்சலாக நின்ற பிருந்தா காரத்

உச்சநீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்தும் நீதிமன்ற ஆணை எங்களுக்கு கிடைக்கவில்லை எனக் கூறி அதிகாரிகள் தொடர்ந்து ஜஹாங்கீர்புரி பகுதியில் உள்ள இஸ்லாமியர்கள் கட்டிடங்களை இடித்தனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பிருந்தா காரத் கையில் உச்சநீதிமன்ற ஆணையுடன் சம்பவ இடத்திற்கு சென்று "ஆர்டர் இருக்கு.. இடிக்காதீங்க.. என புல்டோசர் முன் துணிச்சலாக நின்றார்.

பாதுகாத்திட, ஒன்றுபட்ட மக்கள் இயக்கங்களை மேற்கொள்வது என்பதும், மதவெறிக்கு எதிராக வெகுஜனப் போராட்டங்களை நடத்துவது என்பதுமேயாகும். தில்லிக் காவல்துறையினரின் பாரபட்சமான அணுகுமுறையை மாற்றியமைத்திடும் விதத்தில் ஒன்றிய உள்துறை அமைச்சகமும், குடியரசுத் தலைவரும் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று இடதுசாரிக் கட்சிகள் கோருகின்றன. குற்றமிழைத்துள்ள காவல்துறையினருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டும். காவல்துறையினர், பிளவுவாத சக்திகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டும். இதில் ஏற்படும் காலதாமதம் இதுபோன்ற பிரச்சனைகளில் அரசாங்கத்தின் நம்பகமற்ற தன்மையையே விளக்கிடும். தில்லியின் துணை ஆளுநர் தன்னுடைய மவுனத்தைக் கலைத்து உடனடியாகத் தலையிட வேண்டும். இவ்வாறு உண்மை அறியும் குழுவினர் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். (ந.நி.)

### உண்மை அறியும் குழுவில் இடம் பெற்றிருந்தவர்கள்

*1) ராஜீவ் குன்வார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி*

*2) ஆஷா ஷர்மா, தில்லி மாநிலச் செயலாளர், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம்;*

*3) மைமூனா முல்லா, தில்லி மாநிலத் தலைவர், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம்;*

*4) விபின், இடைக்கமிட்டி செயலாளர், வட தில்லி மாவட்டம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி;*

*5) சஞ்சீவ், தில்லி மாநிலத் துணைத் தலைவர், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம்;*

*6) சுபாஷ், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம்;*

*7) ரவி ராஜ், செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்);*

*8) ஸ்வேதே ராஜ், ஏஐசிசிடியு;*

*9) பிரசன்ஜித், பொதுச் செயலாளர், அகில இந்திய மாணவர் சங்கம் (ஏஐசிஏ);*

*10) கமல்பிரீத், வழக்குரைஞர்;*

*11) அமீத், பார்வர்டு பிளாக்;*

*12) விவேக்ஸ்ரீவஸ்தவா, இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி;*

*13. சஞ்சீவ் ரானா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.*

நன்றி - தீக்கதிர்


# உச்ச நீதிமன்றம்

# உண்மையான தீவிரவாதத்தை தடுக்கத் தவறிவிட்டது



*2011 – 2012* ஆம் ஆண்டுகளுக்குள் நாட்டில் குண்டு வெடிப்புகளை நடத்துவதும், அப்பாவி உயிர்களைக் கொலை செய்வதும், பிராமிணிஸ்ட்டுகளின் அமைப்புகளாகிய ஆர்.எஸ்.எஸ்., அபிநவ் பாரத், ஜெய் வந்தே மாதரம், சனாதன் சாஸ்தா, பஜ்ரங்தள் போன்ற அமைப்புகள்தாம் என்பது தெளிவாகிவிட்டது.

அதேபோல், இந்த அமைப்புகள் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் மேல் பழியை சுமத்தி தண்டிக்கவும் செய்கின்றன என்பதும் தெளிவானது. இதற்கு 'IB' என்ற மத்திய உளவுத்துறையும், அந்தந்த மாநிலங்களில் இயங்கிய தீவிரவாத தடுப்புப் படையை 'IB' என்ற மத்திய உளவுத்துறை பயன்படுத்திக் கொண்டது என்ற உண்மையும் வெட்ட வெளிச்சமானது.



இத்தனை உண்மைகளையும், அடுக்கடுக்கான ஆதாரங்களுடன், உச்ச நீதிமன்றத்தில் சமர்ப் பித்தோம். ஆனாலும் நாம் மேலே சொன்ன அமைப்புகளைத் தடை செய்ய உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

ஆக! தீவிரவாதத்தையும், குண்டு வெடிப்பு களையும், அப்பாவி மக்கள் மடிவதையும் முஸ்லிம் இளைஞர்கள் பழி சுமத்தப்படுவதை யும், அவர்களின் வாழ்க்கை பாழாக்கப்படு வதையும் உச்ச நீதிமன்றம் தடுக்கத் தவறி விட்டது. உண்மையைச் சொன்னால், நாட்டின் தீவிரவாதமும், தீவிரவாதிகளும், தீவிரவாத அமைப்புகளும் வளரவும், வனப்போடு வாழவும் உச்ச நீதிமன்றம், நிச்சயமாகத் துணை நின்றது. தடுக்கத் தவறியது. இதை பின்வரும் ஆதாரங்களி லிருந்து அறியலாம்.

பழி சுமத்தப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் மீது சமர்ப்பிக்கப் பட்ட, குற்றப் பத்திரிகைகளை ஆய்வு செய்யும் பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும். அவை எல்லா வழக்குகளிலும், புலனாய்வு ஒரே மாதிரிதான் நடந்திருக்கின்றன.

எல்லா வழக்குகளிலும், முஸ்லிம் இளைஞர் களின் வாக்கு மூலங்கள் தாம் பிரதான ஆதாரம். இந்த வாக்கு மூலங்கள் அவர்கள் காவல்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்போது (Under Police Custody) வாங்கப்பட்டவையே!

காவல்துறையின் அல்லது தீவிரவாத தடுப்புக் காவல் படையின் கட்டுப்பாட்டின் கீழ் என்பது இந்தியாவின் இரகசிய, சித்திரவதைக் கூடங் களையே குறிக்கும். இந்தச் சித்திரவதைக் கூடங் களில் வைத்துத்தான் பெரும்பாலான வாக்கு மூலங்கள் வாங்கப்பட்டன.

இந்த ஆதாரங்கள் ஆர்.எடி.எக்ஸ் வகை வெடி பொருட்கள் கைப்பற்றுதல் (இவை நமது இராணுவ ஆயுதக் கிடங்கில் மட்டுமே கிடைக்கும். அவற்றைக் கலோனல் பிரசாந்த் புரோகித் போன்ற இராணுவ தளபதிகள் தாராள மாகக் கடத்தித் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார்கள்) ஜிஹாதி இலக்கியங்கள் போன்றவைதான் எல்லா குண்டு வெடிப்பு களிலும் ஆதாரம்.

இவற்றோடு, இரகசியமாக பாகிஸ்தான் சென்று வந்ததாகவும், அங்கே தீவிரவாத பயிற்சி களை எடுத்ததாகவும் ஒரு கதைக் கட்டப்படும். இதற்கு எந்த ஆதாரமும் காட்டப்படாது. சில நேரங்களில் சில போலி கடவுச் சீட்டுகள் காட்டப்படும். இவையெல்லாம் நமது உளவுத் துறையால் உருவாக்கப்படுபவை.

முஸ்லிம் இளைஞர்கள் மீது சுமத்தப்பட்ட எந்த குற்றச்சாட்டுகளிலும், நீதிமன்றங்களால், ஏற்றுக் கொள்ளக்கூடிய எந்த ஒரு ஆதாரமும் இருக்கவில்லை. அறுதியான, மறுக்கவியலாத சாட்சியங்கள், ஆதாரங்கள் என்று எதுவுமில்லை.

பொய்யான, புனையப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் பலநூறு முஸ்லிம் இளை ஞர்கள், பல வருடங்களாக சிறையிலடைக்கப் பட்டு வருகின்றார்கள். வாழ்க்கையும் அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கையையும் சேர்த்து அலைக்கழித்து அழிந்து வருகின்றது.

முஸ்லிம்கள், தாங்கள் எந்தக் காரணமு மில்லாமல், தீவிரவாத தாக்குதல்களில் இணைக் கப்படுகின்றோம் என்ற எண்ணத்திற்கும், பீதிக்கும் ஆளானார்கள். இது காரணமில்லாமல் அவர்கள் கொண்ட எண்ணமோ, பீதியோ அல்ல. இதை முன்னாள் பிரதமர் – அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் செப்டம்பர் 10 – ஆம் நாள் 2011 ஆம் ஆண்டு தேசிய ஒருமைப் பாட்டுக் குழுவில், இப்படிக் கூறினார் ;

சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், தாங்கள் அநியாயமாக, சட்டத்தைச் செயல் படுத்துபவர்களால் குறி வைக்கப்படுகின்றோம் என உணருகின்றார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சட்டம் அதன் கடமையைச் செய்திட வேண்டும். ஆனால், நமது புலனாய்வுத் துறையினர், மாச்சர்யமுடையவர்களாக இருக்கக்கூாது. குறிப்பாக ஒரு சமுதாயத்திற்கு எதிரானவர்களாக இருக்கக்கூடாது. (மன்மோகன் சிங் இப்படிக் கூறி இருந்தாலும், முஸ்லிம்களின் இன்றைய நிலைக்கு காங்கிரஸ் கட்சியும் 'IB' என்ற மத்திய உளவுத்துறையும் மிக முக்கியமான காரணம்)

அதே, தேசிய ஒருமைப்பாட்டு கூட்டத்தில் 'IB' என்ற மத்திய உளவுத்துறையின், தலைவர் இப்படிக் குறிப்பிட்டார், "நாட்டில் நடந்த 16 குண்டு வெடிப்புகளில், இந்துத்துவ தீவிரவாதிகள் விசாரணையின் கீழ் இருக்கின்றார்கள்." (ஆனால்

அத்தனையிலும், அவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். 'IB' என்ற மத்திய உளவுத் துறையின் உதவியால்).

இந்த அடிப்படையில் நாட்டில் நடந்து கொண்டிருந்த குண்டு வெடிப்பு விசாரணைகள், வழக்குகள், இவை மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவேண்டும். அவை அஜ்மீர்ஷெரீஃப் குண்டு வெடிப்புகள், ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு, மாலேகான குண்டு வெடிப்பு – 2006 ஆகியவற்றின் பாணியில் விசாரிக்கப்பட வேண்டும். அல்லது எல்லாவழக்குகளிலும், புலன் விசாரணை எப்படி மேற்கொள்ளப்பட்டது. நீதிமன்றம் சென்ற வழக்குகள், எப்படி நடந்து கொண்டி ருக்கின்றன என்பனவற்றை, நீதிபதிகள் கொண்ட ஒரு குழு மறு பரிசீலனைச் செய்தி வேண்டும். (ஆனால், இரவு நேர இந்துத்துவ வாதிகளாகச் செயல்பட்ட காங்கிரஸ் கட்சி, இதனை செய்திட விரும்பவில்லை. ஆட்சியிலிருந்து அகற்றப்படும் வரை செய்யவு மில்லை)

இந்த நிகழ்வுகளையெல்லாம் மனதிற்கொண்டு இரண்டு சமூக ஆர்வலர்கள் ஒரு முயற்சியை மேற்கொண்டார்கள். அது பிராமிண அமைப்புகள், குண்டுகளை வைப்பதும், அப்பாவி மக்களைக் கொலை செய்வதும், பழியை முஸ்லிம்கள்மேல் போடுவதும், எங்கே நடந்தது என்ற தகவல்களை முழுமையாகத் திரட்டினார்கள். நமது உள்துறையிடம் ஒரு மனுவை தயாரித்தார்கள். அந்த இரண்டு புனித உள்ளங்கள் :

1) குல்சார் அஹமத், ஜம்மியத்தே உலமா சட்டக் குழுமத்தின் செயலாளர் மராட்டிய மாநிலம்.

2) சுதிர் சுவாந்த். இவர், வட்டார சிறப்புப் படையில் (தளபதியாக) இருந்து ஓய்வு பெற்றவர். அப்போது ஹிவ்ராஜ் கட்சி என்றொரு கட்சியை நடத்திக் கொண்டிருந்தார். இவர்கள் இருவரும் தங்கள் மனுவை 29, செப்டம்பர் 2011 அன்று மத்திய உள்துறை அமைச்சகத்திடம் தங்கள் மனுவை தந்தார்கள்.

அதில், அவர்கள் கடந்த பத்து வருடங்களாக நாட்டில் நடந்த குண்டு வெடிப்புகள், அவற்றின் பின் அதில் விசாரணைகள் எப்படி நடந்தன, அதில் பிராமிணிஸ்ட்டுகள் எப்படி சிக்கினார் என்பதை யெல்லாம் துல்லியமாக சேகரித்துத் தொடுத்திருந்தார்கள் அவர்கள் அத்தனை தகவல்களையும் தந்து குண்டு வெடிப்புகளை விசாரித்த அதிகாரிகள், ஒரு முஸ்லிம் மாச்சர்யத்தோடு நடந்து கொண்டிருப்பதைத் தெளிவாகவும் துல்லியமாகவும் குறிப்பிட்டார்கள்.

ஆகவே அனைத்து குண்டு வெடிப்புகளையும், ஒரு உச்சநீதிமன்ற நீதிபதியின் தலைமையின் கீழ் திறமையான அதிகாரிகளைக் கொண்டு, மறு புலனாய்வு செய்திட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

இதற்கு அரசு செவி சாய்க்கவில்லை. (அப்போது காங்கிரஸ் கட்சிதான் ஆட்சி செய்து கொண்டிருந்தது. இதிலிருந்து முஸ்லிம்களின் இன்றைய நிலைக்குக் காரணம் காங்கிரஸ் கட்சிதான் என்பதை எளிதில் புரிந்திடலாம்)

ஆட்சியிலிருப்பவர்கள் அந்தக் கோரிக்கையை கண்டுகொள்ள வில்லை என்பதால் அவர்கள், இருவரும் மனம் சோர்ந்திடவில்லை. தங்கள் தகவல்களை ஓர் வழக்காகக் கோர்த்து, உச்ச நீதிமன்றத்தில் ஓர் கிரிமினல் ரிட்–ஐ தாக்கச் செய்தார்கள். கிரிமினல் ரிட் எண். 19/2012. இந்த மனு அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 32 மற்றும் 21 இன் கீழ் தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த ரிட் மனுவில் முதல் எதிர் மனுதாரராக மத்திய அரசு ('Union of India' First Respondent) இன்னும் எட்டு மாநில அரசுகள் இரண்டாவது எதிர் மனுதாரராக இணைக்கப்பட்டனர். அதாவது இவர்கள் இரண்டு பேரும் எட்டு மாநிலங்களுக்குச் சென்று தகவல்களைத் திரட்டி இருக்கின்றார். அப்போது பெரும்பாலான மாநிலங்களில், காங்கிரஸ் ஆட்சியே இருந்தன. காங்கிரஸ் முடிந்த மட்டும் முஸ்லிம்கள் அழியட்டும், என்று தான் விட்டுவிட்டார்கள்.

### I) அந்த ரிட் மனுவில் பின்வரும் கோரிக்கைகளை உச்ச நீதிமன்றத்தில் வைத்தார்கள்

மிகவும், கண்ணியத்துடன், இந்த மனுவை மேன்மைமிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்கின்றோம். நீதிமன்றம், இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 32–இன் கீழ் அரசுகளுக்கு ஆணைப் பிறப்பிக்க வேண்டும்.

அதில்,

1) ‘‘எதிர் மனுதாரர். அதாவது, நமது மத்திய அரசு ஓர் குழுவை அமைக்க வேண்டும் என ஆணைப் பிறப்பிக்க வேண்டும். அந்தக் குழுவுக்கு ஓர் உச்சநீதிமன்ற நீதிபதி தலைமை தாங்கிட வேண்டும். தலைமை தாங்கும் உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு திறமையான விசாரணை அதிகாரிகள் உதவிக்கு அமர்த்தப்பட வேண்டும். அவர்கள், இன்றைய (IT) என்ற தகவல் தொடர்பு நுணுக்கங்களில் தேர்ச்சிப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இவர்கள் 2002 ஆண்டு முதல் நாட்டில் நடந்த அனைத்துக் குண்டு வெடிப்புகளையும் மறு ஆய்வு செய்திட வேண்டும். குறிப்பாக இந்த மனுவோடு பின் இணைப்பு 45−இல் குறிப்பிட்டுள்ள குண்டு வெடிப்புகள் அனைத்தும் மறு ஆய்வுக்கு மறு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். அவ்வாறு ஆணையிடப்படும் விசாரணையை ஓர் உயர்நீதிமன்றம் மேற்பார்வையிட வேண்டும்.’’

2) ‘‘குண்டு வெடிப்பு வழக்குகளில், உண்மையான குற்றவாளிகளைக் காப்பாற்றிட வேண்டும் என்பதற்காக வழக்கு விசாரணைகளில் அகப்பட்ட ஆதாரங்களையும், தடயங்களையும் மறைத்தார்கள். விசாரணை அதிகாரிகள், அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கைகளையும், துறை சார்ந்த நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். அதேபோல் போலியான ஆவணங்களைத் தயாரித்து, போலி சாட்சியங்களை உருவாக்கி அப்பாவி முஸ்லிம்களை வெடிகுண்டு வழக்குகளில், திணித்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். (என்றும் எதிர் தரப்பாருக்கு ஆணையிட வேண்டும். அதாவது மத்திய அரசுக்கும், சம்மபந்தப்பட்ட மாநில அரசுகளுக்கும் ஆணை இட வேண்டும்.’’

3) ‘‘மத்திய மாநில உளவுத்துறையினர் தவறான தகவல்களை கொண்டு குண்டு வெடிப்புகளை விசாரித்து விசாரணை அதிகாரிகளை திசைதிருப்பி, முஸ்லிம்களை குண்டுவெடிப்பு வழக்குகளில் திணிக்க அழுத்தங்களைத் தந்தார்கள். இந்த மத்திய மாநில, உளவுத்துறையினர் மீதும், கிரிமினல் வழக்குகளைப் பதிவு செய்ய வேண்டும். துறை சார்ந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் (என இந்த உச்ச நீதிமன்றம் ஆணையிட வேண்டும்)’’

4) ‘‘இராணுவ தளபதி Lt.Co. Purohit இன் மடிக்கணினி, மஹந்த், தயானந்த் பாண்டே−இன் மடிக் கணினி அனைத்தும் திறக்கப்பட வேண்டும். அவற்றில் இருக்கும் உண்மைகளை மக்கள் மன்றத்தில் வைத்திட வேண்டும். அவற்றில் வரும் தீவிரவாத செயல்களை முழுமையான விசாரணைக்கு உட்படுத்திட வேண்டும். அதன் அடிப்படையில் தேசத்திற்கெதிராக, தீவிரவாத செயல்களில் ஈடுபட்டவர்களின் மீது தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் (என்றும் ஆணை இட வேண்டும்.)’’

5) ‘‘ஆர்.எஸ்.எஸ். அதன் துணை அமைப்புகள், அதன் நிழல் அமைப்புகள், நாட்டில் நடந்த பல குண்டு வெடிப்புகளை நடத்தி இருக்கின்றன. அந்த அமைப்புகளைத் தடை செய்திட வேண்டும் என மத்திய அரசுக்கு (எதிர் மனுதாரர் 1−க்கு ஆணையிட வேண்டும்)’’

6) ‘‘இந்த மனு உச்சநீதிமன்றத்தில், கிடப்பிலிருக்கும் காலக்கட்டத்தில், குண்டு வெடிப்பு வழக்குகளில் எந்த ஆதாரமும், சாட்சியமுமில்லாமல் இணைக்கப்பட்டி ருக்கும், அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை பிணையில் விடுவிக்க வேண்டும் என ஆணையிட வேண்டும். பிணையில் விடும்போது தேவையான சரிபார்ப்புகளை மேற்கொள்ளலாம். இந்த அப்பாவி முஸ்லிம்கள் பற்றிய பட்டியல் ஒன்றை பின் இணைப்பு 45−இல் இணைத்துள்ளோம்.’’

7) “மேன்மை தாங்கிய நீதிமன்றம் (உச்ச நிதிமன்றம்) தான் சரி என கருதும், ஆணையை அல்லது ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.”

தேசிய புலனாய்வு முகமை, பல வழக்குகளில் மறு புலனாய்வுகளை மேற்கொண்டது என்பதையும், அவற்றில் ஏற்கெனவே கைது செய்யப்பட்டிருந்த அப்பாவி முஸ்லிம்கள் விடுவிக்கப்பட்ட தையும், இந்துத்துவ அமைப்பு களைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்பட்டதை யும், குறிப்பான புள்ளி விவரங்களுடன் தருவ தாகக் கூறினார். இதை நீதிபதிகள் எதிர் பார்ப்ப தாக கூறினார்.

இந்த அடிப்படையில் மேற்சொன்ன தகவல்கள் அடங்கிய விரிவான அறிக்கை ஒன்றும் தயாரித்து உச்ச நீதிமன்றத்தில் தரப்பட்டது.

இந்த மனு / வழக்கு மீண்டும் ஆகஸ்ட் 27 ஆம் நாள் 2012 ஆம் அண்டு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் – குல்சார் அஹ்மத், சுதிர் சுவர்நத் ஆகியோர் சார்பில் முன்னாள் மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர், அமேந்திர சரண் அவர்கள் வாதிட்டார். வாதத்தில் பல உண்மை நிகழ்வுகளை மேற்கோள் காட்டி னார்கள். அவற்றிற்லெல்லாம் எப்படி உண்மை யாகவே குண்டு வெடிப்புகளை நடத்திய அபிநவ் பாரத்–ஐ சார்ந்தவர்களை விட்டுவிட்டு அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் வழக்குகளில் திணிக்கப் பட்டார்கள் என்பதை விரித்துரைத்தார்கள், நிரூபித்தார்கள். விசாரணை அதிகாரிகளிடம் முஸ்லிம்களுக்கெதிரான அழுத்தமான மனநிலை இருப்பதாக நிறுவினார்.

அவர் மேலும், ஆதாரங்களை அடுக்குகையில் இதுபோன்ற விவகாரங்களில் நாம் அதிகக் கவனம் செலுத்தாவிட்டால், இந்தியாவின் மத சார்பின்மை பெரும்பாதிப்புக்கு உள்ளாகும் என்றார்.

அப்போது நீதிபதிகள் குறுக்கிட்டு ஒரு கேள்வியை கேட்டார்கள் :

மனுதாரர்கள், அந்தந்த மாநில நீதிமன்றங் களில் நீதி தேடுவதற்குப் பதிலாக ஒரு பொதுநல வழக்கு மூலம் உச்ச நீதிமன்றத்திற்கு ஏன் வந்திட வேண்டும்?

இதற்கு மனுதாரர் சார்பில் வாதாடிய முன்னாள் மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் :–

பல வழக்குகளில், மறு விசாரணைகள், அப்பாவி (முஸ்லிம்கள்) திணிக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மை வெளியாகியுள்ளது. முஸ்லிம் இளைஞர்கள் மீது புனையப்பட்டுள்ள வழக்குகள் பொய் சாட்சியங்கள், தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் இவற்றால் பிணைக்கப்பட் டுள்ளார்கள்.



இந்த அப்பாவி முஸ்லிம்களால் சிறையிலி ருந்து கொண்டே இந்த வழக்குகளை எதிர் கொண்டிட இயலாது. அவர்கள் ஒட்டாண்டிகள்.

இனி பல வழக்குகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை, அவை பல்வேறு மாநிலங்களிலும் நிகழ்ந்த குண்டு வெடிப்போடு இணைக்கப்பட்டவை. அத்தனையும் பொய். இந்நிலையில் இந்த அப்பாவி முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் வழக்குகள் தேசிய அளவில் விரிந்து பரந்தவை. ஆகவேதான் உச்ச நீதிமன் றத்தை நாடுகின்றார்கள். உச்ச நீதிமன்றம் இதில் தலையிட்டால், அது அநியாயமாக வழக்குகளில் இணைக்கப்பட்டுள்ள அப்பாவி முஸ்லிம்களுக்கு மிகப்பெரிய நிவாரணங்களைப் பெற்றுத் தந்திடும். உச்ச நீதிமன்றத்தின் தலையீடு, அந்நியப் படுத்தப்பட்டு விட்ட முஸ்லிம் சிறுபான்மை யினருக்கு ஆறுதலைத் தரும்.

மனுதாரர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர் அமரேந்திர சரன் எடுத்து வைத்த வாதங்களை செவிமடுத்த நீதிபதி T.S. தாக்கூர், நாங்கள்

உங்களுடைய கோரிக்கையையும் வாதங்களை யும், ஆழ்ந்து பரிசீலனை செய்வோம். உங்களுடைய உணர்வுகளை நாங்கள் ஊதாசீனப்படுத்தவில்லை. நீங்கள் இங்கே மேற்கோள் காட்டிய வழக்குகளின் அடிப்படையில் நாங்கள் அனைத்தையும் பரிசோதிப்போம் என அந்த அமர்வின் சார்பில் – அதாவது, உச்ச நீதிமன்றத்தின் சார்பில் வாக்களித்தார்கள். (இந்த நீதிபதி T.S. தாக்கூர் பின்னர், இந்தியாவின் தலைமை நீதிபதியாகவும் ஆனார்.)

இது உச்ச நீதிமன்ற நீதிபதிகள் வாக்குக் கொடுத்தது, 27, ஆகஸ்ட் – 2012 ஆம் ஆண்டு (அதாவதுவழக்குமறுவிசாரணைக்குவந்தஅன்று)

அன்று, அதாவது 27–8–2012 அன்று வழக்கறிஞர் அமரேந்திர சரணின் வாதம், நீதிமன்றம் தந்த வாக்குறுதி இவையெல்லாம் ஊடகங்களில் மிகப்பெரிய அளவில் மக்கள் மன்றத்திற்குள் எடுத்துச் செல்லப்பட்டன. இது மக்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியது. மக்கள் பரபரப்பாக இதனை விவாதிக்கத் தொடங்கினார்கள். PTI : Press Trust of India. பிரஸ் டிரஸ்ட் ஆஃப் இந்தியா என்ற செய்தி நிறுவனம். Legal Correspondence சட்ட செய்தி நிறுவனம். பயோனியர் செய்தி நிறுவனம், டைம்ஸ் நியூஸ் நெட் ஒர்க் ஆகியவை மிகப் பெரிய 'Flash News' அண்மைச் செய்தியை 27–8–2012 இல் மக்களிடையே பரப்பிக் கொண்டே இருந்தன.

28–8–2012 இல், தி இந்தியன் எக்ஸ்பிரஸ், சக்கல் செய்திகள் என்ற ஆங்கில இதழ்கள், இந்தச் செய்திக்கு முக்கியத்துவம் தந்து சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டன. இதனால் மக்கள் மன்றத்தில் இந்தச் செய்தி பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

ஆனால், உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு அதாவது நீதிபதி தாக்கூர் அவர்கள், உச்ச நீதிமன்றத்தில் சொன்னது உச்ச நீதிமன்ற இணைய தளத்தில் (''வெப்சைட்டில்'') உடனடியாகப் பதிவேற்றம் செய்யப்படவில்லை. அப்போது இதுபோன்ற விவகாரங்களை உச்ச நீதிமன்றம் தனது இணைய தளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தது. இது எட்டுநாள்களுக்குப் பின்னரே உச்ச நீதிமன்ற இணைய தளத்தில் பதிவேற்றம்



செய்யப்பட்டது. அப்போது இடம் பெற்ற செய்தி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அந்தச் செய்தி வாதங்களை செவிமடுத்தோம் – தீர்ப்பை, நிலுவையில் வைத்திருக்கின்றோம் – Arguments Heared Judgement Reserved. இதன் மறைமுகப் பொருள், அது மனுவை தள்ளுபடி செய்து விடுவார்கள் என்பதே!

அக்டோபர் 11, 2012 இல் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை இன்னொரு நீதிபதி பிரகடனப் படுத்தினார். அவர்தான் ஃபக்கீர் முஹம்மத் இப்ராஹிம் கலீஃபுல்லாஹ்! அதில் மனுவை தள்ளுபடி செய்துவிட்டதாகக் கூறினார். நிச்சயமாக உச்ச நீதிமன்றம் தந்த வாக்குறுதியை அதுகாப்பாற்றிடவில்லை.

## 2) இமாலய தேசத் துரோகம்

இப்படி ஒரு பெரும் அநீதியை செய்து உச்ச நீதிமன்றம், நாட்டில் நடந்த – நடந்து கொண்டிருக்கும், குண்டு வெடிப்புகளைத் தடுக்கத் தவறியது. குண்டு வெடிப்புகளை நடத்திய பிராமிணிஸ்ட் அமைப்புகளை ஆர்.எஸ்.எஸ்., அபிநவ்பாரத், ஜெய் வந்தே மாதரம், சனாதன் சாஸ்த்தா, பஜ்ரங்தள் போன்ற அமைப்புகளைத் தொடர்ந்து இயங்கச் செய்ததன் மூலம், தடை செய்ய தவறியதன் மூலம் குண்டு வெடிப்புகள் தொடர்ந்து நடக்கவும், அப்பாவி மக்கள் கொலை செய்யப்படவும் வாசல்களை விசாலமாக்கித் தந்தது நமது உச்ச நீதிமன்றம்.

அத்தோடு, அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் தொடர்ந்து சிறை பிடிக்கப்படவும், இரகசியச் சித்திரவதைக் கூடங்களில் குரூரமாகத் தாக்கப் படவும், அவர்களும் அவர்களின் குடும்பத்தவர்களும், சின்னா பின்னமாக்கப்படவும் வழி விட்டது நமது உச்ச நீதிமன்றம்.

மேற்சொன்ன மனுவில் கோரியபடி

தொடர்ந்து நம் நாட்டில், குண்டுகளை நிகழ்த்திய அமைப்புகளை உச்ச நீதிமன்றம் தடை செய்திருந்தால் 2012–க்குப் பிறகு குண்டு வெடிப்புகள் நடப்பதையும், ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுவதை யும் 2012–க்குப் பிறகு கொலை செய்யப்பட்ட தையும் முற்றாக தடுத்திருக்கலாம்.

இந்தியா தீவிர செயல் நடக்கும் நாடாக இல்லாமல் அமைதியாக நிகழ்ந்திருக்கும். குறைந்த பட்சம் 2012–க்குப் பிறகாவது நடந் திருக்கும். அப்பாவி முஸ்லிம்கள் தங்கள் வாழ்க்கை யைத் தொலைப்பது இனிவரும் நாட்களிலாவது தடுக்கப்பட்டிருக்கும்.

உச்ச நீதிமன்றம் உண்மையானதொரு நீதிமன்றமாகவும், அநீதியான மாமன்றமாகவும் ஆகாமலிருந்தால், கீழ் நீதிமன்றங்கள் குண்டு வெடிப்பு வழக்குகளில் கண்ணைப் பொத்திக் கொண்டு அப்பாவிகளை சிறையிலடைப்ப தையும், பிணைகளை மறுப்பதையும், பின்னர் ஆதாரங்களே இல்லாமல் தண்டிப்பதையும், நிறுத்தி இருக்கும், குண்டு வெடிப்பு வழக்கு களில் சமர்ப்பிக்கப்படும் ஆதாரங்களைக் கூர்ந்து கவனித்திருக்கும். நாடெங்கும் உண்மையிலேயே தீவிரவாத செயல்களைச் செய்தவர்கள். தேடப் பட்டிருப்பார்கள். தண்டிக்கப் பட்டிருப்பார்கள்.

இதனால் தீவிரவாத அமைப்புகளில் அங்கம் வகிப்பவர்கள் மாற்று வாழ்க்கை வழிகளைத் தேடி இருப்பார்கள். தீவிரவாதத்திற்கு ஆள் கிடைக்காமல் போயிருக்கும்.

மனுதாரர் குல்சார் அஹ்மத் அஸ்மி அவர்களும், சுதிர் சுவாந்த் அவர்களும் தாக்கல் செய்த மனுக்களிலுள்ள வழக்குகளை மறு விசாரணைக்கு உட்படுத்தி இருந்தால் பல உண்மைகள், கிணறு வெட்ட பூதம் புறப்பட் டதைப் போல் கிளம்பியிருக்கும், தேசம் இந்துத் துவ வாதிகளின் துரோகத்திலிருந்து மீட்கப் பட்டிருக்கும்.

குறைந்தபட்சம் இந்த அமைப்புகளை தடை செய்வதைக் குறித்து ஆலோசியுங்கள் என்றொரு தாக்கீதை மத்திய அரசுக்கு அனுப்பி இருந்தால் கூட இந்த தொடை நடுங்கி அமைப்புகள் தளர்ந்து போயிருக்கும்.

| வ. எண். | குண்டு வெடிப்புகள் | தற்போதைய நிலை | சம்பந்தப்பட்ட அமைப்புகள் |
|---|---|---|---|
| 1. | அஜ்மீர் ஷெரிஃப் குண்டு வெடிப்பு ராஜஸ்தான் – 2007 | விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு: RSS அமைப்பைச் சேர்ந்த 1.சுனில் ஜோஷி 2. தேவேந்திர குப்தா 3. பவேஷ் பட்டேல் ஆகிய மூன்று பேருக்கு ஆயுள் தண்டனை | ஆர்.எஸ்.எஸ்., அபிநவ் பாரத், ஜெய் வந்தே மாதரம் |
| 2. | மக்கா மஸ்ஜித் ஹைதராபாத் – 2007 | குற்றம் சுமத்தப்பட்டோர் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். | |
| 3. | சம்சவ்தா எக்ஸ்பிரஸ் ஹரியானா – 2007 | குற்றம் சுமத்தப்பட்டோர் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். | |
| 4. | மாலேகான் மகாராஷ்டிரா – 2006 | குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது | |
| 5. | மாலேகான் மகாராஷ்டிரா – 2008 | குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது | |
| 6. | மொடஸ்ஸா குஜராத் – 2008 | விசாரணை நடந்து கொண்டிருக்கிறது | |
| 7. | நந்தேத் மகாராஷ்டிரா – 2006 | குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது | ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தள் |
| 8. | பார்பானி மகாராஷ்டிரா – 2003 | தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. குற்றம் சுமத்தப்பட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (பார்க்க அத்தியாயம்–9) | |
| 9. | ஜால்னா மகாராஷ்டிரா – 2003 | குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது | |
| 10. | புர்னா மகாராஷ்டிரா – 2004 | குற்றம் சுமத்தப்பட்டோர் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். | |
| 11. | லம்பா கேயிரா போபால் (ம.பி. – 2003) | குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது | ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தள் |
| 12. | கான்பூர் உத்திரப்பிரதேசம் – 2008 | குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது | |
| 13. | கண்ணூர் கேரளா – 2008 | குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது | ஆர்.எஸ்.எஸ். |
| 4. | தென்காசி தமிழ்நாடு – 2008 | குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது | |
| 15. | பான்வல் மகாராஷ்டிரா – 2008 | குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது | சனாதன் சாஸ்தா |
| 16. | தானே மகாராஷ்டிரா – 2008 | இரண்டு வழக்கிலும் சனாதன் சாஸ்தா அமைப்பைச் சேர்ந்த இரண்டு தீவிரவாதிகளான விக்ரம் பாவோ, ரமேஷ் கட்கரி ஆகியோருக்கு பத்து வருட கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. | |
| 17. | யாஷி மகாராஷ்டிரா – 2008 | | |
| 18. | மட்கேயன் கோவா – 2009 | குற்றம் சுமத்தப்பட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளன ர். உயர்நீதிமன்றத்தில் ஒரு மனுவை சி.பி.ஐ. தாக்கல் செய்துள்ளது. மேலும் முக்கிய குற்றவாளிகள் நான்கு பேர் தலைமறைவு | |

உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில், மனு தாரர்கள் வைத்த கோரிக்கைகள் எண் ஒன்றி லிருந்து ஆறுவரை உள்ளவற்றைக் கணக்கில் கொண்டது. கோரிக்கை எண் (To) ஏழு(7)ஐ கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. தீர்ப்பின் பெரும் பகுதி கோரிக்கை எண் ஒன்றை (1)–ஐப் பற்றி மட்டுமே பேசுகின்றது. இந்தக் கோரிக்கை, ஓர்ஓய்வுபெற்றநீதிபதியைக்கொண்டுஓர்ஆய்வுக் குழுவை அமைத்து, 2002–க்குப் பின் நடந்த குண்டு வெடிப்புகளைப் பற்றிய மறு ஆய்வை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிக் கோருகின்றது. இந்த மறு ஆய்வு குழுவில் குண்டு வெடிப்புகள் பற்றிய நிபுணர்களும் இடம் பெற்றிட வேண்டும் (என்பதும் கோரிக்கை) உச்ச நீதிமன்றம், கோரிக்கை எண் ஏழு(7)ஐ நிராகரித்துவிட்டது. அதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறியது.

(அ) மீண்டும் ஒரு மறு ஆய்வை மேற்கொள் வது, கொடுக்கப்பட்ட புகார்களை மீண்டும், மீண்டும் துளாவிக் கொண்டிருப்பதிலேயே முடியும்.

(ஆ) மனுதாரர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டால் (அதாவது கோரிக்கை எண் (1)ஐ ஏற்றுக் கொண்டால்), எந்த விதமானச் சட்ட ரீதியான அங்கீகாரமில்லாத ஓர் அமைப்பை உருவாக்குதிலேயே முடியும். இந்த அமைப்பு ஒரு வழக்கை எப்படி அணுகுவது என்பதில் கடை பிடிக்க வேண்டிய முறைமைகளில் ஓர் நேரான வழிமுறையைத் தந்திட இயலாது. முடிவு ஒரு குழப்பமாக அமையும். இந்தக் குழப்பம் ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கும் விசாரணையிலும் புகுந்துவிடும்.

உச்ச நீதிமன்றம் மனுதாரர்களின் கோரிக் கைகள் (2)முதல் (5) வரை உள்ள கோரிக்கை களையும் இதைச் சொல்லியே முடித்து வைத்தது, அதாவது நீதிமன்றம் மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்குவது என்பது, ஏற்கெனவே கிடப்பில் கிடக்கும் வழக்குகளில் குறுக்கிடுவதாக அமையும்.

வழக்கில் மனுதாரர்களின் கோரிக்கை எண் (2) இரண்டு, ஏற்கெனவே புலன் விசாரணையில் கிடைத்த தடயங்கள், அவற்றின் அடிப்படையில், எடுக்கப்பட்ட முடிவுகள் இவற்றின் வழியில் மேற்கொண்டு விசாரணைகளை முன்னெடுத்துக் கொண்டு செல்ல கோருவதுமாகும்.

கோரிக்கை எண் (4) நான்கு, ஆர்.எஸ்.எஸ். அமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்பதாகும்.

தீர்ப்பில் கோரிக்கை எண். (7)ஐ பற்றி, எந்த விவாதமுமில்லை. அந்தக் கோரிக்கை எண் (7) ஏழு என்னவெனில், நீதியின் ஆளுமையை மனதில் கொண்டு இந்த வழக்கில் தரப்பட்டுள்ள தரவுகள் (Facto) வழக்கில் சொல்லப்பட்டுள்ள சூழ்நிலைகள் இவற்றின் அடிப்படையில், தேவையான உத்தரவுகளை நீதி மன்றம், பிறப்பிக்க வேண்டும் என்பதாகும்.

(இறுதியில்) வழங்கப்பட்ட தீர்ப்பில் பின்வரும் குறைபாடுகள் காணப்படுகின்றன.

### அ) வழக்கில் தரப்பட்ட தரவுகள் உண்மைகள் சூழ்நிலைகள் இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிட்டது

நீதிமன்றம், வழக்கில் வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கை எண் (7)ஐ சற்றும் கவனத்தில் கொள்ளவில்லை. இதில் நீதிமன்ற தவறிழைத்து விட்டது. தரப்பட்ட தரவுகளில் நீதிமன்றம் தனது கவனத்தை முழுமையாகச் செலுத்தி இருக்க வேண்டும். நீதி மன்றம் இந்தக் கோரிக்கையைக் கவனத்தில் கொள்ளவில்லை, என்பது தீர்ப்பிலி ருந்து தெளிவாகத் தெரிய வருகிறது. 99 பக்கத் தீர்ப்பில் வெறும் 7 ஏழு பக்கமே கோரிக்கையின் இந்தப் பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதை நீதிமன்றம் முழுமையாகப் படித்திருந்தால், தன்னுடைய மனதை அதில் செலுத்தி இருந்தால், நிச்சயமாக நீதியின் நலனில் வேறு உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கும். அது மனுதாரரின் கோரிக்கை எண் (7) ஏழுக்கு உகந்ததாக இருந்திருக்கும். அந்த மனு பின்வரும் முக்கியமான உண்மைகளைத் தாங்கி நின்றது.

1) அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பு, மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, (ஹைதராபாத்) சம்சவ்தா விரைவு ரெயில் குண்டு வெடிப்பு, மாலேகான் 2006 குண்டு வெடிப்புகளில் மேற் கொள்ளப்பட்ட மறு ஆய்வுகள், வேறு வகையான பல உண்மைகளை வெளியே கொண்டு வந்தன. அவற்றுள் முக்கியமானது. இந்தக் குண்டு வெடிப்புகளில் மேற்கொள்ளப்பட்ட முதல் புலன் விசாரணைகள், வேண்டுமென்றே தவறான

திசையில் மேற்கொள்ளப்பட்டன. அதில் உண்மையான குற்றவாளிகள் தப்பிக்க விடப் பட்டனர். அதன்மூலம் பல பிராமிணிஸ்ட்டு அமைப்புகள் தப்பிக்க விடப்பட்டன. அப்பாவி முஸ்லிம்கள் பழிசுமத்தப்பட்டு, கைது செய்யப் பட்டு, சித்திரவதைக்குள்ளாக் கப்பட்டு சிறையி லடைக்கப்பட்டார்கள்.

(2) குண்டு வெடிப்பு வழக்குகளில், மேற்கொள்ளப்பட்ட எல்லா விசாரணைகளும் இப்படியே அமைந்தன. உண்மையான குற்றவாளிகள் தப்பிக்கவிடப்பட்டனர். இவர்கள் பிராமிணிஸ்ட்டு அமைப்புகளைச் சார்ந்தவர்கள். அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டு குற்றம் சுமத்தப்பட்டனர். அப்பாவி முஸ்லிம் களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட சாட்சி யங்கள் எல்லாம், ஒரே மாதிரியிலானவை. அவை சித்திரவதையின் கீழ் வாங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம். செல்போன்கள் போன்ற இன்னும் சில பொருட்கள்.

(3) உண்மையான குற்றவாளிகள், அந்தக் குற்றவாளிகள் அங்கம் வகித்த பிராமிணிஸ்ட்டு அமைப்புகள், இவற்றைப் பற்றிய உண்மையான சாட்சியங்கள்தடயங்கள், ஆதாரங்கள்கிடைத்தப் போதெல்லாம், அவை வேண்டுமென்றே மறைக் கப்பட்டன. புறக்கணிக்கப்பட்டன. மொத்த இந்தியாவுக்கும் எதிரான சதிகள் பற்றிய ஆதாரங்கள் கிடைத்தப் போதெல்லாம் அவை விட்டுவிடப்பட்டன. அல்லது மறைக்கப்பட்டன அல்லது புறக்கணிக்கப்பட்டன. காரணம், இந்தியாவுக்கு எதிரான இந்தச் சதிகளைச் செய்தவர்கள் பிராமிணிஸ்ட்டுகள் அல்லது பார்ப் பணீயர்கள். ஆனால், அவர்கள் வகையாகத் தப்பிக்க வைக்கப் படுகின்றார்கள்.

பிராமிணிஸ்ட்டுகள் என்ற பார்ப்பனீயர்கள் தாம் குண்டுகளை வைத்தார்கள் என்பதை நிரூபிக்க பல உறுதியான, தெளிவான சாட்சி யங்கள் உச்ச நீதிமன்றத்தில் இந்த மனுவோடு சமர்ப்பிக் கப்பட்டன. அவற்றுள் சில நீதிமன்றங் களிலே தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரி கைகள், நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் சுவாமி அசீமானந்தா போன்றவர்கள் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலங்கள், அபிநவ் பாரத் என்ற இந்துத்துவ தீவிரவாதிகள் அமைப்பி னர் நடத்திய கூட்டங்களில் பேசியவற்றின் பதிவுகள், தடயவியல் வல்லுநர்களின் ஆய்வறிக் கைகள், மராட்டிய மாநில தீவிரவாத தடுப்பு நடவடிக்கை படைக்கும், இராணுவ தளபதி பிரசாந்த் புரோகித்திற்குமிடையே நடந்த பேச்சு வார்த்தைகள் போன்றவையாகும். இவை யெல்லாம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள் என மனுவோடு பிற்சேர்க்கைகளாக இணைக்கப்பட்டவை.

இவற்றையெல்லாம் நீதிமன்றம் ஏறெடுத்து பார்த்தாலே மிகவும் நீதிமிக்கதொரு ஆணையைப் பிறப்பித்திருக்கும். இந்த ஆதாரங்கள் தன்னிலை விளக்கங்களைக் கொண்டது. ஐய்யங்களுக்கு அப்பால் நின்று, குற்றவாளிகளைச் சுட்டிக் காட்டுபவை, குற்ற ங்களை நிரூபிப்பவை.

கோரிக்கை எண் ஏழு (7)இல் நீதியான தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால், சிறையில் வாடும் பல அப்பாவி முஸ்லிம்கள் வெளியே வந்திருப்பார்கள்.

## ஆ) உச்ச நீதிமன்றம் சிறப்புப் புலனாய்வுக் குழுக்களை ஏற்பாடு செய்த முந்தைய நிகழ்வுகள்

முதன் முதலில் புதிய சிறப்புப் புலனாய்வுக் குழுக்களை ஏற்பாடு செய்தால், அது எந்த வழக்கின் நடைமுறையையும் பாதிக்காது. இதில் உச்ச நீதிமன்றத்தின் அச்சம் அர்த்தமற்றது. காரணம் உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள் ஏனோ தானோ என அமைந்தவை அல்ல. மாறாக, அவை துல்லிய மானவை குறிப்பானவை.

முன்னர் குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரித்தவர்கள் தங்கள் கைகளில் சிக்கிய ஆதாரங்களை வேண்டுமென்றே மறைத்தார்கள், புறக்கணித்தார்கள். அத்தோடு குண்டு விசார ணைகளை மேற்கொண்டவர்கள் மாச்சர்ய மிக்கவர்களாகவே காணப்பட்டார்கள். அவர்கள் முஸ்லிம்களை பொய்யைக் கூறி எப்படியாவது குண்டு வைப்பவர்களாக காட்டிட வேண்டும் என்பதிலும், எத்தனை ஆதாரங்கள்கிடைத்தாலும் பிராமிணிஸ்ட்டுகளை (உண்மையான குற்றவாளி களாக) கைது செய்திடக் கூடாது என்பதிலும் கவனமாக இருந்தார்கள். நாம் கோரும் விசார ணைக் குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்திருந் தால், அந்தக்குழு முதன் முதலில் நாம் புலன் விசாரணைக் குழுக்கள் மீது நாம் தொடுத்துள்ள



குற்றச்சாட்டுகள் உண்மையா? பொய்யா? என்பதை விசாரித்திருக்கும். பின்னர் எங்கெல் லாம் விசாரணைகள் தடம் பிறழ்ந்திருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, அந்த வழக்கு களையும் விசாரணைகளையுமே கையிலெடுத்திருக்கும்.

அதேபோல், ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்தால், அது ஒரு அதிகாரமற்ற குழுவாகவே அமையும். அது ஒரு இணைபுலனாய்வுக்குழுவாகவும்அமையும்என்ற உச்ச நீதிமன்றத்தின் கூற்றும் உண்மையானதல்ல. எத்தனையோ வழக்குகளில் உச்ச நீதிமன்றம், மறு விசாரணைக்காக சிறப்புப் புலனாய்வுக் குழுக்களை ஏற்பாடு செய்துள்ளது.

அந்தக் குழுவின் விசாரணையைக் கண்காணித்து இருக்கின்றது. எடுத்துக்காட்டாக முத்திரைத் தாள் மோசடி வழக்கு. இதை தெல்ஹி வழக்கு என்பார்கள். இதில் மராட்டிய உயர்நீதி மன்றம் ஓர் சிறப்புப் புலனாய்வு குழுவை அமைத்தது. அதன் செயல்பாட்டைக் கண்காணித்து வந்தது.

அதேபோல் பல்வேறு ஐயங்களை எழுப்பிய பெஸ்ட் பேக்கரி குண்டு வெடிப்பு வழக்கையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்த வழக்கிலும் உண்மையான குற்றவாளிகளைத் தப்பிக்கவிடும் அளவில் முதற்கட்ட விசாரணை நடைபெற்றது. இந்த முறையற்ற விசாரணை யின் குளறுபடிகளையெல்லாம் உச்ச நீதிமன்றம் கொண்டு சென்றார்கள். உச்ச நீதிமன்றம் அந்த விசாரணையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. காரணம், உச்ச நீதிமன்றம், மறு புலன் விசாரணைக்கும் மறு, நீதிமன்ற விசாரணைக்கும் ஆணையிட முடிவு செய்தது.

இந்த வழக்கில் அதாவது பெஸ்ட் பேக்கரி வழக்கில், உச்ச நீதிமன்றம் கூறியவை நீதித்துறை யில் ஒரு சிறிய எடுத்துக்காட்டு!

“புலன்விசாரணையில் அல்லது வழக்கைத் தொடர்வதில் நிகழ்ந்த தவறுகள் தெள்ளதின் தெரிந்திடும்போது அல்லது புலன் விசாரணை யில் திரைபோட்டு மூடி மறைக்கப்பட்டவை, திரை விலகிடும்போது தெரிந்திடும்போது, உண்மைகளும் யதார்த்தங்களும் வேண்டு மென்றே மறைக்கப்பட்டிருக்கின்றது என்பது தெரிந்திடும் போது, நீதிமன்றங்கள் அவற்றை ஓர் இரும்புக் கரம் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்...”

இறுதியாக நீதிமன்றங்கள் நீதி நிலைத்திட வேண்டும் என்பதற்காக உண்மையைக் கண்டு பிடித்துத் தீர்ப்புகளை வழங்கிட வேண்டும். (2004–ஏ, உச்ச நீதிமன்ற வழக்குகள், 158, 2004–ஏ Supreme Court Cases 158)

ஆனால், நாம் மேலே சொன்ன வழக்கில், பல குண்டு வெடிப்புகளில் நடந்த விசாரணை யில் உண்மையான குற்றவாளிகளும், தடங்களும் கையில் கிடைத்தபோது, அவை மறைக்கப் பட்டன. அப்பாவி முஸ்ம்களுக்கெதிராக தடயங்கள் புனையப்பட்டன. இவற்றை உச்ச நீதிமன்றத்தில் தகுந்த ஆதாரத்துடன் எடுத்து ரைத்து விட்டோம்.

உச்ச நீதிமன்றம் சில சாக்குப்போக்குகளைச் சொல்லி மொத்த விவகாரத்தையும் தட்டிக் கழித்தது. உச்ச நீதிமன்றம் மறு விசாரணைக்கு ஆணை இடாவிட்டாலும், வேறொன்றை செய்திருக்கலாம். அது, எந்த ஆதாரமுமில்லாமல் சிறையில் வாடும் முஸ்லிம்களுக்கு (சிலர் பல ஆண்டுகளாக சிறையிலேயே கிடக்கின்றனர்) இந்த அப்பாவிகளுக்குப் பிணையாவது கொடுத் திருக்கலாம். அதுவும் இந்த மனுவில் கோரப் பட்டிருந்தது.

### இ) பயனற்ற சட்ட ரீதியான நிவாரணம்

உச்ச நீதிமன்றம் சட்ட ரீதியான நிவார ணத்தை பரிந்துரைப்பது வழக்கம். ஆனால், அது

இப்போது எடுபடவில்லை என்பதே உண்மை.!

எந்த அப்பாவி முஸ்லிம்களைப் பிடித்து நீதிமன்றங்களில் நிறுத்தினாலும், எந்தக் கேள்விக் கணக்குமின்றி அவர்கள் சிறையிலடைக்கப் பட்டார்கள்.

அதேபோல் நீதிமன்றக்காவலைத் தொடர்ந்து காவல் துறையின் காவல் வேண்டும். (Custody of Police) எனக் கேட்டால், அதுவும் எந்தக் கேள்வியு மில்லாமல் கொடுக்கப்பட்டது.

நீதிமன்றங்களின் இந்தத் தாராளத் தன்மை, காவல்துறையினர் விரும்பும் விதத்தில் அந்த அப்பாவிகளைச் சித்ரவதைச் செய்திடவும், ஒப்புதல் வாக்குமூலங்களை வாங்கிடவும் உதவி செய்தன.

ஆனால், அந்த அப்பாவி முஸ்லிம்கள் பிணைகேட்டு, நீதி மன்றங்களை அணுகிய போது, எந்த விசாரணையுமின்றி அவை நிராகரிக் கப்பட்டன.

பிணை மனுக்களை கண்ணை மூடிக் கொண்டு நீதிமன்றங்கள் நிராகரித்த வழக்குகளில் பிணை கேட்டவர்கள், பல வருடங்கள் கழித்து நிராபராதிகள் என விடுதலை செய்யப்பட் டார்கள். அதற்குள் அவர்களின் உடல்நிலை சிதைந்து சின்னாபின்னமாகிவிட்டன. அந்தக் குடும்பங்கள் உருகுலைந்தே போய் விட்டன. வாழ்நாள் முழுக்க தலையெடுக்க இயலவில்லை.

இந்த நிலையில்தான் நாடெங்கும் (உலகெங்கும்) பெரிதாகப் நடைபெற்ற, மெக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, சம்சவ்தா விரைவு ரெயில் குண்டு வெடிப்பு, அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு, மாலேகான் 2006 குண்டு வெடிப்பு நடந்தது.

மாலேகான் 2006 குண்டு வெடிப்பில் உயர் நீதிமன்றங்களே கூட பிணை வழங்கிடவில்லை.

மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்புகளில் கைது செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் பலரை எங்கே வைத்திருக்கிறார்கள் என்பதே தெரிய வில்லை. தெரிவிக்கவுமில்லை. எனவே அந்தக் குடும்பத்தவர்கள், ஆள்கொனர் மனுவை – (ஹீபியால் கார்ப்ஸ்) நீதிமன்றத்தில் சமர்ப்பித் தனர். அதன்பின்னர் காவல்துறையினர் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தினார்கள். பின்னர் கைது செய்தார்கள். காவல்துறை அத்தனை குளறுபடி களையும், சட்ட மீறல்களையும் நீதித்துறை கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்தது. ஆனால் அப்பாவி முஸ்லிம்கள் எத்தனை முறை பிணை கேட்டு மன்றாடினாலும் அந்த மனுக்களை எடுத்த எடுப்பிலேயே நிராகரித்தன. பிணை வழங்கிடவே இல்லை. இறுதியில் அவர்கள் வழக்கிலிருந்து மொத்தமாக விடுதலை செய்யப் பட்டார்கள்.

டெல்லி ஜாமியாமில்லியா பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள் ஒருமைப்பாட்டுக் குழு 2013 ம் ஆண்டு ஒரு நூலை வெளியிட்டார் கள். அந்த நூலில் 16 குண்டு வெடிப்புகளில் சிக்க வைக்கப்பட்ட 40 முஸ்லிம்களைப் பற்றி பேசினார்கள். இந்த முஸ்லிம்களை 'ஹூகி' என்ற தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள் என்றும், 'லஷ்கர்' உல்பத் என்ற தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள் என்றும் இடை விடாமல் பிரச்சாரம் செய்தார்கள். பின்னர் அத்தனை முஸ்லிம்களும் அப்பாவிகள் என்று விடுதலைசெய்யப்பட்டார்கள். அதேபோல் இந்த நூலில் 21 வழக்குகளில் இதுபோன்று அப்பாவிகள் கைது செய்யப்பட்டதையும், அவர்கள் விடுதலை செய்யப்பட்டதையும் குறிப்பிட்டிருக்கின் றோம். ஒவ்வொரு வழக்கிலும் நீதிமன்றம் – சாட்சியங்கள் புனையப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கின்றது. அதேபோல் புலன்விசாரணை நடத்தியவர்கள் பொய்யான சாட்சியங்களைத் தயாரித்து, அப்பாவி முஸ்லிம் இளைஞர்களைச் சிக்க வைத்திருக்கின்றார்கள் எனக் கூறி இருக்கின்றது. காவல் துறையின் மேல் கண்டனங்களை பாய்ச்சி உள்ளது.

ஆனால், இந்த இளைஞர்கள் 5 முதல் 10 ஆண்டுகள் வரை சிறையிலிருக்க வேண்டிய தாயிற்று. சிலவழக்குகளில் 10 முதல் 20 ஆண்டுகள் வரை சிறையிலிருக்க வேண்டியதாயிற்று.

புலன்விசாரணையைச் செய்தவர்களின் மாச் சார்யங்கள் – தகிடுத்தத்தங்கள், பொய்கள், சதி இவையெல்லாம் எல்லோருடைய கண்களுக்கும் நன்றாகத் தெரிந்தது. இதுபோன்ற சூழலில் அப்பாவி முஸ்லிம்கள் சிக்கி இருக்கும்போது, அவர்களை சட்டத்தின் தீர்வை நாடுவார்கள், என்றுரைப்பது எப்படிப் புத்திசாலித்தனமாக இருக்கும்?

## ஈ) மறு விசாரணையைக் கோருவது Vs 173(8) இந்திய சட்ட முறைமை

உச்ச நீதிமன்றம், ஒருவர் மறு புலன் விசாரணையைக் கோரலாம் (178 Cr.PC) என்றும், அது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு விட்டாலும் சரியே, என்றும் ஆலோசனை வழங்கியுள்ளது.

இப்படி சொன்ன உச்ச நீதிமன்றத்தின் மனநிலை, என்னவெனில், புலன்விசாரணையில் நடந்த தவறுகள், வேண்டுமென்றே தொடர்ந்த தில்லை. அவை ஏதோ கவனக்குறைவால் நடந்தது என்பதாகும். ஆனால், இதில் நீதிமன்றம் மிகப்பெரியதொரு தவறைச் செய்து விட்டது. நாம் சுட்டிய வழக்குகளில் நடந்த தவறுகள் வேண்டுமென்றே நடந்தவை.

(i) அஜ்மீர் ஷரீஃப் தர்கா குண்டு வெடிப்பு, மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு இவற்றைப் பொறுத்தவரை முக்கியமான தடயங்கள் ஒரு வாரத்திற்குள் கிடைத்துவிட்டது. புலன் விசாரணை செய்தவர்கள் அவற்றை வேண்டுமென்றே புறக்கணித்தார்கள். மூன்று வருடங்கள் கழித்து இன்னொரு புலன் விசாரணை குழுமம் விசாரணை செய்தது, உண்மையான குற்றவாளிகளை கைது செய்தது.

(ii) 2008 மாலேகான் குண்டு வெடிப்பில் மூன்று மடிக்கணினிகள் சிக்கின. இந்த மடிக்கணினிகள் 2009 பிப்ரவரி மாதம் முதலே புலன் விசாரணைக் குழுவின் கைகளில் இருக்கின்றன. ஆனால், இன்றளவும் அதை புலன் விசாரணைக் குழுக்கள் முழுமையாக ஆராய்ந்திடவில்லை. அவற்றில் மிகவும் முக்கியமான ஆடியோக்களும் வீடியோக்களுமிருக்கின்றன. அதாவது மடிக்கணினியில் இடம்பெற்ற சதிகாரர்களின் உரையாடல் குறித்த ஒலி, ஒளி காணொளியும் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வில்லை.

(iii) மராட்டிய மாநில தீவிரவாதத் தடுப்புப் படையிடம்தான் கலோனல் பிரசாத் புரோகித் வழக்குகள் புலன் விசாரணைக்கு ஒப்படைக்கப் பட்டன. இந்தத் தீவிரவாத தடுப்புப் படையை பயிற்றுவித்தது கலோனல் பிரசாத் புரோகித்தான். பின்னர் எப்படி புலன் விசாரணை சரியான திசையில் செல்லும்.

(iv) நமது இராணுவ கிடங்குகளிலிருந்து ஆர்.டி.எக்ஸ் வகை சக்தி வாய்ந்த வெடி பொருட்களை இந்த கலோனல் பிரசாத் புரோகித்தான் கடத்தி வந்தான். அதை உண்மையை அறியாத சில காவல்துறையினர் அவ்ரங்கபாத்—இல் வைத்து, பிடித்தனர். இந்த வழக்கின் உண்மையான குற்றவாளி கலோனல் பிரசாத் புரோகித் தான். இந்த வழக்கை மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப் படையிடம் விசாரணைக்கு ஒப்படைத் தார்கள். ஒரு கட்டத்தில் இந்தத் தீவிரவாதத் தடுப்புப் படை இந்த வழக்கு விசாரணையில் உதவி செய்திடும்படி கலோனல் பிரசாத் புரோகித்தையே அழைத்தது. எப்படி குற்றவாளி தண்டிக்கப்படுவான்.

(v) கென் கேவுட் (Ken Haywood) என்பவன் ஓர் அமெரிக்க குடிமகன். இவன்தான் 2008 அஹமதாபாத் குண்டு வெடிப்பின் முக்கியக் குற்றவாளி! அவன் இந்தியாவை விட்டு ஓடி விடாமல் தடுப்பதற்கு, எல்லா விமான நிலையங்களுக்கும் கண்காணிப்பு எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. (Lookout Notice) இதையெல்லாம் பொருட்படுத்தாமல் அவனை இந்தியாவிலிருந்து அமெரிக்கா அனுப்பி வைத்தது நமது மத்திய உளவுத்துறை (IB)

(vi) டெல்லியின் மிகவும் முக்கியமான இடம் பாட்லா ஹவுஸ். இங்கே வைத்து காவல் துறையினர்சில அப்பாவி முஸ்லிம்களை, என்கவுண்டர், போலி எதிர்த்தாக்குதல் என்ற பெயரில் கொலை செய்தார்கள். அதில் ஒரு காவலரையும் கொன்றார்கள். அந்த இடத்தில் ஒரு செல்போன் கிடைத்தது. அந்த செல்போனிலிருந்த 'சிம்' (Sim) கார்டு பல தகவல்களைத் தந்தது. ஆனால், அந்த சிம் கார்டின் தகவல்கள் முற்றாக மறைக்கப்பட்டன. அந்த சிம்கார்டை வாங்கியவர் போலி முகவரியையும் கொடுத்திருந்தார். இவையெல்லாம் மறைக்கப்பட்டு செல்போன் உரிமையாளர் ஆள் மாறாட்டம் செய்தார் என ஓர் வழக்குப் பதிவு செய்து விடுதலைச் செய்யப்பட்டார். இவற்றையெல்லாம் கண்டு கொள்ளாமல் உச்ச நீதிமன்றம் கண்ணை மூடிக்கொண்டால் எங்கே நியாயம் கிடைக்கும். எப்போது குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்.

(vii) சந்தேகத்திற்கிடமான மின்னஞ்சல் (Email) விவகாரங்களில், அவற்றை உண்மையாகவே அனுப்பியவர்களான, கென் ஹேவூட்,



மதுக்கூர் மிஸ்ரா, தீபக் பாண்டே போன்றவர்கள் வேண்டுமென்றே விடப்பட்டார்கள். அப்பாவி முஸ்லிம்களை சித்திரவதைச் செய்து, வாக்கு மூலங்களை வாங்கி சிறையில டைத்தார்கள்.

(viii) மும்பை புறநகர் ரெயில் குண்டு வெடிப்பு, அஹ்மதாபாத் குண்டு வெடிப்பு 2008, ஜெய்ப்பூர் குண்டு வெடிப்பு, 2008, இவற்றில் கிடைத்த தடயங்கள், ஆதாரங்கள் இவையெல்லாம் புறக் கணிக்கப்பட்டன. உண்மையான குற்றவாளி களைத் தப்பிக்க விட்டுவிட வேண்டும் என்பதற் காகவே இந்தப் புறக்கணிப்புகள்.

உண்மையானநடப்புகள்இப்படிஇருக்களந்த புலனாய்வு அமைப்பை நம்பி மறு புலனாய்வு விசாரணையை (173(8) Cr.PC) ஒப்படைக்க இயலும். அந்த முயற்சி எந்தப் பயனையும் பயக்காது. உச்ச நீதிமன்றம் தலையிட்டு ஓர் புலன் விசாரணைக் குழுவை அமைத்து அந்தப் புலன் விசாரணையைக் கண்காணித்தால் மட்டுமே நியாயம் கிடைக்கும். அவற்றுள் ஒன்றுதான் இலவச சட்ட உதவியைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பயன்படுத்துவது. உச்ச நீதிமன்றம் தனது உபதேசத்தில் : ‘‘குற்றம் சுமத்தப்பட்டவர்களால் வழக்கறிஞர்களை நியமித்து வாதாட இயலவில்லை என்றால், இந்த நாட்டில் இலவச சட்ட உதவிகளுக்குப் பஞ்சமில்லை. அவர்கள் அவற்றைத் தாராள மாகப் பயன்படுத்திடலாம்’’ என்றது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை, அதாவது குற்றம் சுமத்தப் பட்ட அப்பாவி முஸ்லிம்களைப் பொறுத்தவரை பிரச்சனை பணம் சம்மந்தப் பட்டது மட்டுமல்ல, மாறாக, அது வகுப்புவாதம், என்ற வகையிலும் அணுகப்பட்டது.

குற்றம் சுமத்தப்பட்ட, முஸ்லிம்களுக்காக வாதாட வந்த வழக்கறிஞர்கள் கண்மூடித்தன மாகத் தாக்கப்பட்டார்கள். இந்தத் தாக்குதல்கள் நீதி மன்ற வளாகத்தில், நீதிபதிகளின் கண் முன்னே நடந்தன. இப்படித் தாக்குதலை நடத்தியவர்கள், பிராமிணிஸ்ட்டு அமைப்புகளைச் சார்ந்தவர்கள். சிலபல நேரங்களில் அந்தந்த பகுதியிலுள்ள வழக்கறிஞர்களின் அவை (Bar Association) குற்றம் சுமத்தப்பட்ட முஸ்லிம்களுக்காக வாதாடக் கூடாது என வழக்கறிஞர்களை தடுத்தன. இவை ஹிந்துஸ்தான் என்றே இந்துப் பத்திரிகையிலும், இன்னும் இதரப் பத்திரிகைகளிலும் செய்தியாக வந்தன. இவற்றையெல்லாம் ஆதாரங்களுடன், உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்கள் மனு தாரர்கள். ஆனால் உச்ச நீதிமன்றம் அவற்றை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அதனால் எந்த நிவாரணத்தையும் நிராதரவற்ற அப்பாவி முஸ்லி ம்களுக்கு வழங்கிடவில்லை.

### 3) 2012ம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட (கிரிமினல் ரிட்) மனுக்குப்பின் நடந்தவை (அ) விளைந்த பலன்கள்

(1) 2006 மாலேகான் குண்டு வெடிப்பில், பிராமிணிஸ்ட்டு அமைப்புகளைச் சார்ந்த எட்டு தீவிரவாதிகள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல்

செய்யப்பட்டது. ஒன்பது அப்பாவிகள், முன்னர் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலைச் செய்யப்பட்டார்கள்.

(2) அஜ்மீர் ஷரீஃப் குண்டுவெடிப்பு வழக்கில் மாவட்ட தலைமை நீதிமன்றம் ஆர்.எஸ்.எஸ். இன்னும் சில பிராமிணிஸ்ட்டு அமைப்புகளைச் சார்ந்தவர்களுக்கு தண்டனைகள் வழங்கியது.

(3) அக்ஷர்தாம் (குஜராத்) 2002 குண்டு வெடிப்பு வழக்கு, முலூர்ந்வைல் – பார்லி மத்திய மும்பை குண்டு வெடிப்பு வழக்கு 2003, போலிஸ் சிறப்பு பணிக்குழு அலுவலகக் குண்டு வெடிப்பு வழக்கு 2005, (Police Task Force Office (Bangalore) Blast Case 2005, காலுூப்பூர் (அஹ்மதாபாத்) குண்டு வெடிப்பு வழக்கு 2006, இவற்றில் கைது செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் 10 முதல் 15 ஆண்டுகளுக்குப் பின் விடுதலை செய்யப் பட்டார்கள்.

(4) மும்பை புறநகர், ரெயில் குண்டு வெடிப்பு, மராட்டிய மாநிலம் அவ்ரங்காபாத்–இல் வண்டி, வண்டியாக, ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருட்கள் வழக்கு 2006, லும்பினி பார்க் (ஹைதராபாத்) குண்டு வெடிப்பு வழக்கு, 2007. ஜெர்மன் பேக்கரி குண்டு வெடிப்பு (பூனா – மகாராஷ்டிரா) 2010, தில்சுக் நகர் (ஹைதராபாத்) குண்டு வெடிப்பு 2013, புத்கயா (பிகார்) குண்டு வெடிப்பு 2013, இவற்றில் விசாரணை நீதிமன்றம் முஸ்லிம்களைத் தண்டித்தது. இதில் ஜெர்மன் பேக்கரி வழக்கில் உயர்நீதிமன்றம் ஒரே ஒரு முஸ்லிம்–ஐ ஹிமாத்பேக்–ஐ விடுவித்தது. அவரை எல்லா குற்றச்சாட்டுகளிலிருந்தும், ஒட்டுமொத்தமாக விடுதலை செய்தது. இவர் மட்டுந்தான் அந்த வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர்.

(5) ஜன்காலி மஹாராஜ் சாலை (Jangali Maharaj Road, Pune) பூனா – தொடர் குண்டு வெடிப்பு வழக்கு 2012, மல்லேஸ்வரம் (பெங்களூரு) வெடிகுண்டு வழக்கு 2013, இது பாரதீய ஜனதா கட்சி அலுவலகத்திற்கு முன்ன ால் வெடித்த குண்டு வழக்கு, புத்கயா (பிகார்) குண்டு வெடிப்பு 2013.

பரஷ்கான (Dagduseth Ganapathi, Pune) குண்டு வெடிப்பு வழக்கு, பூனா 2014 இவற்றை இந்த நூலில் அத்தியாயம் 3 பகுதி முதல் 9 வரை விவாதித்திருக்கின்றோம் ; இந்த வழக்குகளில் ஆர்.எஸ்.எஸ்., இதர பிராமிணிஸ்ட்டு அமைப்பு களையும் சேர்ந்தவர்கள் தான் செய்திருக்கின் றார்கள் என்பது உறுதியானது. ஆனால், அவர் களைக் காப்பாற்றிவிட்டார்கள். அப்பாவி முஸ்லிம்களைச் சிக்க வைத்தார்கள். இதற்காக சாட்சியங்களை வலிந்து உருவாக்கினார்கள்.

(6) இந்த நூலில் நான்காவது அத்தியாயத்தில் விவாதித்துள்ளபடி 21 வழக்குகளில் விசாரணை முடிவடைந்துள்ளன. அவற்றில் குற்றம் சாட்டப் பட்ட முஸ்லிம்கள் ஒன்றிலோ குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்டார்கள் அல்லது வழக்கிலிருந்து (விசாரணைக்கு முன்) விடுவிக்கப் பட்டார்கள். (Acquitted or Discharged)

மேலே நாம் குறிப்பிட்ட எண் 4–இல் உள்ள வழக்குகளில் அப்பாவி முஸ்லிம்கள் எப்படி சிக்க வைக்கப்பட்டார்கள் என்பதை மிகவும், விபரமாக இந்த நூலின் அத்தியாயங்கள் 5 முதல் 8 வரை விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளோம்.

இவற்றையெல்லாம் நாம் உச்ச நீதிமன்றத் தின் பார்வைக்குக் கொண்டு சென்றோம். உச்ச நீதிமன்றம் ஆகஸ்ட்–27, 2012ஆம் ஆண்டு அனைத்தையும் ஊன்று கவனித்துத் தீர்ப்பு வழங்கிடும் என வாக்களித்தது. இந்த வாக்குறு தியை உச்ச நீதிமன்றம் நிறைவேற்றி இருந்தால், பல இழப்புகள் தவிர்க்கப்பட்டிருக்கும். பல அப்பாவி முஸ்லிம் குடும்பங்கள் நிம்மதியடைந் திருக்கும்.

உச்ச நீதிமன்றம் தனது வாக்குறுதியை நிறைவேற்றி இருந்தால், பிற்றை நாள்களில் நடந்த குண்டு வெடிப்புகள் நடத்திருக்காது. அவையாவன, ஜங்காலி மகாராஜ் சாலை (பூனா) குண்டு வெடிப்பு 2012, மல்லேஸ்வரம் (பெங்களூரு) குண்டு வெடிப்பு 2013, ஃபரஸ்கான குண்டு வெடிப்பு 2014 போன்றவை.

அத்தோடு மட்டுமல்ல, உச்ச நீதிமன்றம் தனது ஆகஸ்ட்– 27, 2012 வாக்குறுதியின் அடிப்படையில் குண்டு வெடிப்பு வழக்கு களை மறு ஆய்வுக்கு உட்படுத்தி இருந்தால், பல வழக்குகளில் புலன் விசாரணையும், நீதிமன்ற விசாரணையும் தலைகீழாக மாறிப் போயிருக்கும். அவையான, மாலேகான் 2006 குண்டு வெடிப்பு வழக்கு, அவ்ரங்காபாத்–இல் பிடிபட்ட ஆர்.டி. எக்ஸ் வகை வெடிபொருள்கள் வழக்கு, ஜெர்மன் பேக்கரி வெடிகுண்டு வழக்கு 2010, தில்சுக் நகர்

(ஹைதராபாத்) வெடிகுண்டு வழக்கு முதலானவை.

### 4) உச்ச நீதிமன்றம் ஆர்.எஸ்.எஸ். அபிநவ்பாரத் ஜெய்வந்தே மாதரம் போன்ற அமைப்புகளைத் தடை செய்யவில்லை

அஸ்மி–சுவாந்த் ஆகிய இருவரும் உச்ச நீதி மன்றத்தில், வைத்தக் கோரிக்கைகளுள் முக்கிய மானது ஆர்.எஸ்.எஸ். அபிநவ்பாரத், ஜெய் வந்தே மாதரம் ஆகியவற்றைத் தடை செய்திட வேண்டும். அப்போது மட்டுமே நாட்டில் குண்டு வெடிப்பதும், அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுவதும் நிற்கும் என்பதாகும்.

தங்கள் கோரிக்கைக்கு ஆதாரமாக இந்த அமைப்புகள் நடத்திய குண்டு வெடிப்புகள், அவற்றின் மீது தொடுக்கப்பட்ட குற்றப் பத்திரிகைகள் சிலபல வழக்குகளில் பெற்ற தண்டனைகள் இப்படி அனைத்துமே இணைத் திருந்தனர். இந்த இந்து அமைப்புகளை பற்றி மத்திய (IB) உளவுத்துறையின் சிறப்பு இயக்குநர் 16 குண்டு வெடிப்பு வழக்குகளில் இந்து அமைப்புகள் மீதுதான் விசாரணை நடந்து கொண்டிருக்கின்றது என்று கூறியதன் உண்மை நகல், இவையெல்லாம் இணைக்கப்பட்டிருந்தன.

பல வழக்குகளில், மக்கா மஸ்ஜித், அஜ்மீர் ஷெரீஃப், சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு, இவற்றில் மறு ஆய்வுகள் தந்த தலைகீழ் மாற்றங் களையும் குறிப்பிட்டிருந்தார்கள்.

உச்ச நீதிமன்றம் மனுதாரர்களின் இந்தக் கோரிக்கை எண் (5) ஐந்தையும் சேர்த்தே நிராகரித்தது. பொத்தாம் பொதுவாக உச்ச நீதி மன்றம் மனுதாரரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டால், அது ஏற்கெனவே நடந்து கொண்டி ருக்கும் வழக்குகளில் தலையிடுவதாக அமையும் எனக் கூறிவிட்டது.

இது கோரிக்கை எண் (1) ஒன்றுக்குத்தான் பொருந்தும். மனுதாரர்களின் கோரிக்கை எண் (5) ஐந்திற்கும் கோரிக்கை எண் (1)க்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

கோரிக்கை எண் (1) சில குண்டு வெடிப்பு வழக்குகளை மறு ஆய்வு – புலன் விசாரணைக்கு உத்தரவிட வைக்கப்பட்ட கோரிக்கை. கோரிக்கை எண் (5) சில அமைப்புகளை அவை தொடர்ந்து குண்டு வெடிப்புகளை நடத்துவ தாலும், அந்த குண்டு வெடிப்புகளை அவர்கள் தான் நடத்தினார்கள் என்பது நிரூபிக்கப்பட்ட தாலும், அவற்றை தடை செய்திட வேண்டும் எனக் கோருவதாகும்.




12-4-2022 அன்று திண்டிவனத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் 18-ம் ஆண்டு இப்தார் நோன்பு திறக்கும் நிகழச்சி நடைபெற்றது. இதற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. தலைமை தாங்கினார்.

கத்தர் அரேபியாவிலுள்ள சிறிய கனிம வளங்களை கொண்ட நாடு. தலைநகர் தோஹா. இந்நாடு முடி மன்னர் ஆட்சி செய்யும் மாண்புறும் நாடு. ஆட்சியாளர் எமீர் என அழைக்கப்படுகிறார். இப்பொழுது மேதமீம் பின் ஹமத் பின் கலீபா அல்தான் என்பர் ஆட்சி செய்கிறார்.

நாடாளுமன்ற கட்டிடம் அழகிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமனம் மூலம் தேர்வு செய்யப் படுகிறார்கள். நகர சபை பஞ்சாயத்து உறுப்பி னர்கள் தேர்வு முறையில் மக்களால் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

இந்நாடு முடியாட்சியானாலும் இந்நாட் டில் சுன்னிஸியா பிரிவினர் வாழுகின்றனர். இந்நாட்டில் கேஸ் அதிக அளவும் பெட்ரோல் குறைவாகவும் கிடைக்கிறது. இதிலிருந்து பல்வேறு இரசாயணப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இங்கு இந்தியர், ஸ்ரீலங்கா, மலேசியா, இந்தோனேஸியா, பிலிப்பைன்ஸ், சீனா போன்ற நாட்டினர் எகிப்து லிபியா, ஜோர்டன் மற்றும் ஆப்பிரிக்க நாட்டினர், ஐரோப்பிய நாட்டி னரும் அரசு சார்ந்த தனியார் கம்பெனிகளில் அதிக அளவு வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

நம் குளச்சல் முட்டம் போன்ற மீனவ சமுதாயத்தவர் அரபிகளின் போட்டில் சிறு கப்பலில் சென்று மீன்பிடி தொழிலில் ஈடுபட் டுள்ளனர்.

கத்தாரிகள் அரசு சார்பான, தன் சார்பான வியாபாரங்களில் முதலீடு செய்துள்ளனர். அவர்களின் வியாபார ஸ்தாபனங்களில் கேரள, தமிழக, ஸ்ரீலங்கா, பிலிப்பைன்ஸ், சூடானியர், பாகிஸ்தானி போன்ற பல்வேறு நாட்டினரும் வேலை பார்க்கின்றனர். நம் பகுதி மக்கள் மலையாளிகள் வட நாட்டினரும் பல்வேறு நிறுவனங்களில் வேலை பார்க்கின்றனர்.

தோஹாவில் மக்கள் ஒரு குடியிருப்பில் குடும்பமாக வசிக்கின்றனர். மக்கள் வீட்டருகே ஒரு கத்தார் அரபியின் வீட்டில் சென்னை, ஐயனாவரம் அய்யூப் டிரைவராக, எலக்ட்ரிஷி யனாகவும் வேலை பார்க்கிறார். மேலும் ஸ்ரீலங்கா கார் டிரைவர் நியாஸையும் இவ்விரு வரையும் நான் காலை நடை பயிற்சிக்கு செல்லும் போது நாள்தோறும் சந்திப்பதுண்டு.

ரோடுகள் அகன்றும் விரிந்தும் மோட்டார்,



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீப்
களச்சல்

# கத்தர்

## ஒரு பார்வை...

கார், பேருந்து, சிற்றுந்து போகுமளவு விசால மானது. ரோடுகளின் நடுவே பூந்தோட்டமும், நவீன குப்பை தொட்டிகள் காணப்படும். வீடு களிலுள்ள குப்பை கழிவுகள் வீடுகளிலிருந்து அங்கே கொட்டப்படும். இது நாடோறும் அரசு குப்பை லாரிகள் மூலம் அகற்றப்படுகிறது.

பழைய துணி மணிகள், பழைய பொருட்கள் வெளிநாடுகளிலுள்ள ஏழைகளுக்கு அத்துணிகள் கத்தம் செய்து வறுமையால் வாடுவோருக்கு அனுப்பப்படுகிறது. மேலும் சோபா செட்டு, வீட்டுப் பொருட்கள் கட்டில் போன்றவை வீட்டருகே பாதை ஓரங்களில் வைக்கப்பட்டிருக்கும். இதை வேண்டியவர் களும் அரசு ஆட்கள் வண்டிகளில் வந்து எடுத்துச் செல்வர். நகரம் சுத்தமாக இருப்பது பார்க்கவும் மனதுக்கு சந்தோசமாகவும் இருக்கிறது.

மேம்பாலங்கள் உறுதியோடு விரிவாக அழகிய முறையில் கட்டப்பட்டுள்ளது. மோட் டார் காரில் அதிகமாக மக்கள் பயணிக் கின்றனர். மோட்டார் காரில் பயணிப்பதும் பெரும்பாலும் ஆண், பெண் இருபாலரும் கார் ஓட்டுவதும் உண்டு. ஒவ்வொருவரும் வீடுகளில் கார், ஸ்கூட்டர் நிறுத்த வசதியுண்டு. மால்களில் வியாபார இடங்களிலும் இவ்வசதியுண்டு. அந்நாட்டினர் பெரும்பாலும் விலை கூடிய மேனாட்டு கார் வைத்துள்ளனர்.

வீடுகள் மதில் சுவருக்குள் பெரும்பாலும் காணப்படுகிறது. வீடு பெரும்பாலும் மாட மாளிகையாக காணப்படுகிறது. அங்கே கார்செட், வீட்டி காவலாளி தங்குமிடம், வீட்டாரை பாரக்க வருவோர் வரவேற்பு அறை எல்லா வீடுகளிலும் தனியாக உள்ளது.

வீடுகளில் பூச்செடிகள் பிச்சி, முல்லை, ரோஜா, வெளிநாட்டு பூச்செடிகள் போன்ற வையும் இலந்தை, மாமரம், பேரிந்தை போன்ற வையும் வீடுகளில் நடப்பட்டுள்ளன. மரம் செடிகள், இந்தியர், பாகிஸ்தானியர், இந்தோ னேஸியர், இலங்கை வாசிகள் பராமரிக் கின்றனர்.

அரசு தனியார் கம்பெனிகளில் இந்தோ னேநியா, இலங்கை, இந்தியர், பாகிஸ்தான் போன்ற பல்வேறு நாட்டினர் வேலை பார்க் கின்றனர். ஒவ்வொரு வீட்டினருகே (மன்ஸில் காணப்படும்) இதில் குடும்ப உறுப்பினர் நண்பர் களை உபசரிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

அரசு பேருந்து, சிற்றுந்து காணப்படுகிறது. அரசு பேருந்தில் ஆட்கள் குறைவாக பிரயாணிக் கின்றனர். வண்டியும் இருக்கை வசதி மெச்சும் படியாக உள்ளது. இரயில் பொறுத்தவரை இல்லை. ரோடுகளில் நம் ஊரை போன்று பெரியார் பெயர்கள் போடப்பட்டுள்ளது. நாங்கள் வசிக்கும் பகுது சஹத் அல்அன்வார் என்பதாகும். இதுபோன்று திர்மிதி, அல்சைபு, உமர் பின் கத்தாப் ரோடு போன்ற இஸ்லாமிய பெரியார் பெயர்களைக் காணலாம்.

ஆட்சியர் மக்களை கல்வி கேள்விகளில் ஊக்குவிக்க சிறுவர் பள்ளிகள், உமர் கத்தாப் ஸ்கூல் அம்னாபிந்த் வகாப் வகாப் இங்கிலீஸ் செகண்டரி ஸ்கூல், அல்முஆத் இங்கிலீஸ் செகண்டரி ஸ்கூல், தோஹா சென்டர் ஸ்கூல், லெபனான் இங்கீலீஸ் மீடியம் ஸ்கூல், பல இந்திய வெளிநாட்டினர் நடத்தும் கல்வி நிலையங்கள் செயல்படுகிறது. காலை சுமார் 6 மணி முதல் மாணவர்களை இருப்பிடம் வந்து அந்தந்த சிற்றுந்துகளில் (வசிப்பிடம் வந்து) அழைத்து செல்கின்றனர். திரும்ப சுமார் 12 மணியளவில் வீடுகளில் சிற்றுந்தில் திரும்பவும் கொண்டுவந்து சேர்ப்பார்.

கத்தார் அரசு கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் அந்நாட்டு மக்கள் கல்வி கேள்விகளில் சிறந்தோரென அவர்களின் நடை உடை பழகும் பண்பிலும் பளிச்சிடுகிறது.

கத்தார் அரசு சார்பாக மருத்துவ பொறி யியல், கலை கல்லூரிகள், பல்லைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டு அந்நாட்டு மக்களை கல்வி மூலம் அரசு பண்படுத்துகிறது. மார்க்க கல்வியோடு ஹிபிளு மதரஸாக்களும் நடத்தி நாட்டு மக்களை தீன்தாரிகளாகவும் அரசு ஆக்குகிறது.

பெண்கள் எல்லாத் துறையிலும் உள்ளனர். பெண்கள் கோசாவுடன் மோட்டார் கார் ஓட்டுவதை பார்க்கலாம். இங்கு வேலை பார்ப்போரும் கத்தாரிகளும் சிகரெட் பிரியர்

களாக ஊதுவதைப் பார்க்கலாம். ஏன்? பெண்களும் சிகரெட் பிரியர்களாக உள்ளனர். கத்தாரிகள் விவசாயம், மீன் பிடி, மால்கள் அரசு வேலையெ பார்க்கின்றனர்.

**ஆஸ்பத்திரிகள் :** அன்மன்சூர் பாலி கிளினிக் ஆஸ்பத்திரி அல்அஹ்லி ஆஸ்பத் திரிகள் போன்றவை கத்தாரிகளாலும் அரசு 'ஹமத்' என்ற பெரிய ஆஸ்பத்திரியை அரசு நடத்துகிறது. ஆஸ்டர் ஆஸ்பத்திர மூப்பன் குரூப் என்னும் மலையாளிகளால் நடத்தப்படுகிறது. எல்லா இடங்களிலும் தொழுமிடம், கழிவறை வசதியும் உண்டு. அல்அஹ்லி ஆஸ்பத்திரியை ஒட்டியே பள்ளியில் இமாம் ஜமாஅத் தொழுகை முடிந்தபின் இரு நாட்கள் அஸர் தொழுகையை இமாமாக நான் தொழுகையை நடத்தினேன்.

### இமாம் அப்துல் வகாப் ஜூம்ஆ மஸ்ஜித்

இம் மஸ்ஜித் விசாலமானது. இங்கு பெரும் பாலும் ஜும்ஆ தொழுகையில் கலந்துள்ளேன். பெண்களுக்கு தனி வசதி தொழ அமைக்கப் பட்டுள்ளது. ஜும்ஆவில் ஒரு பாங்கு முதலிலும் இமாம் குத்பாவிற்கு மிம்பர் படியில் அமர்ந்த பின் ஒரு பாங்குமாக இரு பாங்குகள் சொல்லப் படுகிறது. மேலும் குர்ஆன் ஹதீஸ் குறிப்பிடு கிறது. மேலும் இமாம்களின் கருத்துகளும் குத்பா பேருரையில் குறிப்பிடப்படுகிறது.

ஓர் ஜும்ஆவிற்கு வீட்டருகே உள்ள சிறிய ஜும்ஆ மஸ்ஜிதில் தொழுச் சென்றேன். இமாம் குத்பாவில் பர்ளுகள் சப்தமாக ஓத குருஆன் ஹதீஸை மேற்கோள் காண்பித்து உரையாற்றினார்.




இமாம் குத்பாவில் 'வர்அஸிரி' சூராவைப் பற்றி மேற்கோள் காண்பித்து இமாம் ஸாபிஹி இச்சூராவுக்குள் சொன்ன விளக்கங்களை விளக்கமாய் பேசினார்கள். மேலும் முஸ்லீம்கள் ஒற்றுமையின்றி பல பிரிவுகளாய்ப் பிரிந்து வாழ்வதை வேதனையோடு குறிப்பிட்டார்கள்.

இமாமின் இனிமையான குத்பா பேருரை யும் தொழுகையும் தொழுவோரை மெய்மறக் கச் செய்தது. அன்றைய ஜும்ஆவில் குனூத் ஓதி உலக முஸ்லீம்களுக்காக குனூத்தில் பலஸ்தீன் வாசிகளுக்காகவும், உலகில் அல்லலுறும் முஸ்லிம்களுக்காகவும் மனமுறுகி இறைவனி டம் பிரார்த்தனை செய்த. மாமின் உறுக்கமான துஆ அவையை மெச்சிலிர்க்கச் செய்தது.

ஜும்ஆவில் பல்வேறு நாட்டினரும் தோளோடு தோள் நின்று தொழும்போது கருநிறத்துஹ பசியரை, 'காதல்மிகு பார்சியரை' 'பெருஞ் செருக்கின் அரேபியரை' பிணைத்தெடுத்த நாயகமே என் இறையருட் கவிமணி அப்துல் கஃபூர் சாகிப் குறிப்பிடும் அருங்கவி நினைவுக்கு வரும்.

குடியிருப்புகள், பஜாரில் அரசு அலுவலகங் களை சுற்றி ஒற்றை மினாராகவும் தைக்காவும் காணப்படுகிறது. தொழுமிடங்கள் இடத்தைப் பொறுத்து அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொழுகை நேரமும் பாங்கு இனிய குரலில் ஒலிக்கும்.

அரபி ஹிப்ளு மதரஸா மற்றும் மதரஸாக்கள் நடைபெறுவதாக அறிகிறோம். சில மால்களோடு சைவ, அசைவ உணவு விடுதிகளும் உண்டு. MRA ரெஸ்டாரண்ட் & பேக்கரி நகரில் பிரபலம். இது கேரளாவைச் சார்ந்த ரைரோத் முஸ்லீம் குடும்பத்தாரால் நடத்தப்படுகிறது. சுமார் 45 ஆண்டு பழமையானது.

### மொய்தர் பஜார்

இது கத்தரில் ஓர் பழமையான ஊரு. இங்கு இந்தியா இலங்கை மற்றும் பல நாட்டினர் வசிக்கின்றனர். இங்கு நம் நாட்டார் அதிகம் காணலாம்.

மொய்தரில் தமிழகம், ஸ்ரீலங்கா ஹோட் டலும் உணவு வகைகளும் காணலாம். பஜாரில் ஜூவல்லரி, செல் கடைகள், பார்பர் ஷாப்

ககாணலம். நகரை ஒட்டி வீடுகள் மஸ்ஜித்து களும் பார்க்க நம் ஊரின் பழமையை நினைவு படுத்தும்.

**ரமீஸ் மால்**

இதுபெரிய மாளிகை. சாமான், ஜவுளி, பாத்திரங்கள் போன்ற வியாபாரங்கள் நடை பெறும் இடம். இங்கு அரேபியர் அதிகம் வருவர்.

**விலாஜியோ மால்**

பெரியவர்த்தக நிறுவனம். செயற்கை மேகம் கொண்ட அமைப்பு. அதன்கீழ் நீரில் சவாரி செய்யும் செயற்கை ஆறு உள்ளது. பணம் கொடுத்து போர்ட்டில் சவாரி செய்யலாம். போட்டு நம்மூர் அமைப்பு உடையது. மளிகை கடைகள், ஷாப், ஜவுளி, கடிகார கடைகள், உணவு விடுதி, பேக்கரி, பாத்திர கடைகள் போன்ற பல்பொருட்கள் விற்பனை நிலையங்கள் பல்வேறு இறைச்சி கடைகள் போன்றவை செயல்படுகிறது. மக்கள் கூட்டமாக வந்து போகின்றனர்.

**லூலூ**

இவ்வமைப்பு உலகில் பல்வேறு நாடுகளில் இயங்குகிறது. அண்மையில் எர்ணாகுளத்தில் லூலூ புதிதாக திறக்கப்பட்டது. இது கேரளாவைச் சார்ந்த யூசுப் அலி குரூப்பால் நிர்வாகிக்கப்படுகிறது. இந்த லூலூவில் மளிகை வியாபாரம், ஷாப் சாமான், ஆடை விற்பனைக் கடைகள், காலணிகள், வாட்ச் கடை, மரக் கறிகள், பழ வகைகள், தின் பண்டங்கள், மீன், இறைச்சி வகை கடைகள், ஜூவல்லரி கடைகள், பலவித பொருட்கள் விற்கும் கடைகள் காணப் படுகுறது. எல்லா மால்களிலும் தொழும் இடம், கழிப்பிடம் வசதிகள் உண்டு. இது பெரிய வர்த்தக நிறுவனம் துரியான் பழம், ரம்டான் சீமை ஆத்தி நுங்கு, சக்கைப்பழம், மாம்பழம் போன்றவை மட்டி, ஏத்தன், கதலி பரோன்ற நம்மூர் பழவகைகளும் இங்கே வாங்கலாம். இங்கு தமிழர்கள், மலையாளி, பிலிப்பைன்ஸ் போன்ற பல்வேறு நாட்டினர் வேலை பார்க் கின்றனர்.

**தோகா கார்னீஸ்**

இது கடற்கரையை ஒட்டிய ஊர். இது ஓர் அழகிய இடம். ஈத்த மரங்கள் காணப்படுகிறது. கடற்கரையை ஒட்டிய அழகிய இடம். இங்கு மலையாளிகள் பெருமளவு உண்டு. கடலில் மீன்பிடித்து வருகிறார்கள். இம்மீன்கள் மலை யாளிகள் வங்காளிகள் அம்மீன்களை விற்பனை செய்கின்றனர். நம்மூர் இறால், நெய் மீன் போன்றவை பார்க்க முடிகிறது. இந்த கடற்கரை எண்ணெய் ரொம்பவும் கவர்ந்தது.

பெரிய தூசிப் புயல் : 2-4-2015 அன்று அரசு விடுமுறை அறிவித்தது.

**இந்திய சூப்பர் மார்க்கெட்**

இங்கு பலசரக்கு, சாப் வகை பொருட்கள், பழவகை கடைகள், மரக்கறி, கீரை வகைகள், பாத்திரங்கள், மணப் பொருட்கள் நர்க்கீஸ், குமுதம் ரிப்போர்ட்டர், ஜூனியர் விகடன், கல்கி, துக்ளக் போன்ற பத்திரிகைகள் மற்றும் நம் நாட்டு ஆங்கில பத்திரிகைகள் அங்குள்ள புத் ஸ்டாலில் காணலாம்.

**தாஹல் ஹமாம் பார்க்**

அழகிய புல் தரை, செடி, கொடிகள், ஈத்த மரம். நம்மூர் தென்னையை நினைவுப்படுத்து கிறது. வெள்ளிக்கிழமை விடுமுறை நாட்களில் குடும்பத்தோடு வந்து பொழுதுபோக்கு கின்றனர். கார் பார்க்கிங் வசதி உள்ளது. மஃரிபு நேரம் தொழுகைக்கு பாங்கு கேட்டதும் தொழுவோர் புல் வெளியில் தொழுகின்றனர். இளைஞர்கள் புல் வெளிகளில் சைக்கிளில் சவாரி செய்தும், பந்து மூலமும் விளையாடு கின்றனர். தின் பண்டங்கள் நம் நாட்டினர் பாகிஸ்தானியர், சூடானியர் தைானங்களில் வியாபாரம் செய்கின்றனர். பார்க் நல்ல முறையில் சுத்தமாக பராமரிக்கப்படுகிறது.

**மியூசியம் ஆப் இஸ்லாமிக் ஆட்ஸ் பார்க்**

இது கடற்கரையை ஒட்டிய அழகிய மியூசியம். இங்கு இந்திய இராணிய துர்க்கிய அரேபிய பழைய ஏட்டு பிரதிகள். பழைய குர்ஆன் கைப்பிரதிகளை பார்வையிட்டேன். குர்ஆன் கைப்பிரதிகள் முன்பு நம்மூர் பள்ளி களில் இருந்த குர்ஆன் பிரதியை நினைவுப் படுத்தியது. மொகலாய மன்னர் ஷாஜஹான் கால நாணயங்கள் ஆவணங்கள் மொகலாய கால ஆயுதங்கள், ஜாடிகள், விரிப்புகளும் அங்கு

உள்ளது. மியூசியத்தைப் பார்க்க வருவோருக்கு சிற்றுண்டி அருந்தும் வசதியுள்ளது. கார் பார்க்கிங், யூரின் செட், தொழுமிடமும் உள்ளது. மியூசியத்தின் மேல் தளத்தில் நின்று பார்த்தால் மாட மாளிகைகளும் கடற்கரையும் பார்க்கலாம்.

உணவு விடுதிகள், மளிகை கடைகள் கேரள, தமிழக மக்கள் பெருமளவு வியாபாரம் செய்கின்றனர். MRA ரெஸ்டாரண்ட் கேரளாவை சார்ந்த ரைரேத் குடும்பம் பல ஆண்டுகளாக நடத்துகின்றனர். இவர்கள் சுமார் 45 ஆண்டுகளாக நடத்துவதாக அறிகிறோம். மலையாள உணவுகள், அரேபிய உணவும் இங்கு கிடைக்கும்.

**நியூ வேல்ட் சென்டர்**

இது ரய்யானிலுள்ளது. இங்கு சாப் சாமான், மிகஸி, கிரைண்டர், வீட்டு பொருட்கள், மணப் பொருட்கள் வியாபாரம் நடைபெறுகிறது. இங்கு இலங்கை பிலிப்பைன்ஸ் நாட்டினர் வேலை பார்க்கின்றனர். இங்கு இலங்கை குர்னாகல் ஜனாப் நியாஸை சந்தித்தேன். இங்கிருந்து ஊதுபத்திரிகள், மணப்பொருட்கள், அத்தூர் வாங்கினேன். இந்த ஸ்தாபனங்களில் ஈரானயிர் முதலீடுள்ளதாக அறிகிறோம்.

**ஈரானியர் சூக் பஜார்**

இது பழைய ஈனிய கட்டிட அமைப்பு. இக்கட்டிடம் கற்களாலும் மரங்களை அடுக்கியும் கட்டப்பட்ட உறுதியான மாடி கட்டிடம். இது நம்ம ஊரின் பழைய கட்டிட அமைப்பை நினைவுபடுத்துகிறது. இங்கு ஈரானிய வியாபாரிகளை காணமுடிகிறது. இந்த பஜாரில் ஈரானிய முதியவர், இளைஞர் பாகிஸ்தானியர், இந்தியர், ஆப்கானிஸ்தான் வாசிகள் பெரும்பாலும் வியாபாரிகளாகவும் வேலையாட்களாகவும் காணமுடிகிறது.

ஈரானிய சூக் பஜாரில் சாப் சாதானங்கள், புடவை கடைகள், பலசரக்கு பாத்திரக் கடைகள், ஓலையாலான பாய், முறம், ஓலை விசிறி, இரு பிரிசூடி கயிறு, (தென்னை நாரால் ஆனது) காணமுடிகிறது.

பஜாரில் பல்வேறு விதமான அல்வாக் கடைகள். குறிப்பாக ஈரானியர் நடத்தும் அல்வாக்கடைகளில் பாதாம், பிஸ்தா, அண்டி, குங்கும பூ அதிகம் சேர்த்து தயார் செய்யக் கூடிய அல்வாக்கள் பல்வேறு தின் பண்டங்கள் காணலாம்.

அத்தர், சென்ட், நயம் சாம்பிராணி, ஊதுபத்தி போன்றவை வியாபாரம் செய்யும் கடைகளைக் காணலாம். தொப்பி, சால், தஸ்பீஹ் கடைகள் காணலாம். மேலும் ஈரானிய, அரேபிய உணவு வகைகளும் காணலாம். மக்கள் இங்கு பெருமளவு வந்து தேவையான பொருட்கள் வாங்குவதோடு பழமையான கட்டிடத்தைப் பார்ப்பதோடு மேல் தளத்தில் காலியான இடத்தில் போடப்பட்டுள்ள இருப்பிடங்களில் இருந்து ஆண், பெண் குழந்தைகளோடு பொழுதுபோக்குவர். நானும் குடும்பத்தாரும் மேல் தளத்தில் ஓய்வு எடுத்தோம். தொழு மிடம், தாவா சென்டர், மாடி கட்டிடங்கள் பார்க்க பரவசமூட்டும்.

சூக் பஜாரை ஒட்டிய பள்ளியில் மஃரிபு தொழுகையை நாங்கள் தொழுதோம். இங்கே வரும் மக்கள் தொழுமிடம் தனியாக உள்ளது. நம்மூர்களில் வயோதிகர்களைப் பார்ப்பதே அரிதான இக்காலத்தில். ஈரானிய பாகிஸ்தான் காபூல் நாட்டினரில் உழைக்கும் ஏழை வயோதி கர்கள் மோட்டார் டயரிலான டயர் வண்டி களில் பொருட்கள். குழந்தைகளை வைத்து தள்ளி கூலி வாங்கும் கையில் காய்ப்புடன் உள்ள தொழிலாளிகளை பார்த்தபோது நபி பிரான் அவைக்கு வந்த அழுக்கு ஆடையும், உழைப்பால் உரமேறிய கையையும் உடைய தொழிலாளியை அவையோர் முன்னிலையில் அவர் இரு கையையும் முத்திட்ட எங்கள் முத்தான முகம்மது நபி கண்முன்பே நிற்பது போன்று தோன்றியது. கத்தரிலுள்ள வயோதிக உழைப்பாளிகளை இன்று நம்மூரில் பார்ப்பது அரிது.

வீடுகளில் பூந்தோட்டம், ஈந்தமரம், மா, எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற மரங்கள் உள்ளன. வீடு, கார் நிறுத்துமிடம். தொழிலாளிக்கு வீட்டில் தங்குமிடம் போன்றவை உள்ளன. வேலையாட்களிடம் பாச உணர்வோடும், மனிதநேயத்தோடும் கத்தாரிகள் நடந்து கொள்கின்றனர்.

### நடை பயிற்சி

SK பில்டிங்கில் இருக்கும் மக்கள் வீட்டிலிருந்து காலை சுமார் 6 மணிக்கு புறப்பட்டு அல்முஆத் ஸ்கூல் இருக்கும் ரோடு வழியாக சென்று அல்மன்ஸூர் ஆஸ்பத்திரி இருக்கும் ரோடு வழியாக அம்னாபிந்த் பாரூக் ஸ்கூல் வழியாக வீடு வந்தடைவான். ரோடு அழகிய முறையில் தாரால் போடப்பட்டு ஓரமாக நடைபாதை செம்மையாகப் போடப்பட்டுள்ளது.

அம்னாபிந்த் பாரூக் ஸ்கூலுக்கு முன் அரசாங்கத்தின் கீழ் இயங்கும் பெயருடைய அரபி மதரஸாவும், அஹ்காப் மூலம் நடைபெறுகிறது. அந்த வழியாக வீடு வந்தடைவேன். நடைபாதை நடப்பதற்கு மேலும் மேலும் விருப்பம் தரும்.

நாட்டில் ஆட்சி நடத்துபவர் எமீர் என அழைக்கப்படுகிறார். இந்நாட்டில் அரசனுக்கு ஆலோசனை நல்க மக்களால் தேர்வு செய்த உறுப்பினர்கள், நகர சபை உறுப்பினர்களை தேர்வு செய்யப்பட்டு அவர்களால் அரசனுக்கு ஆலோசனை கூறும் உறுப்பினர் தேர்வு செய்யப்படுகிறார்கள். ஆலோசனையை ஆதரிக்கவும், எதிர்க்கவும் அரசனுக்கு உரிமையுண்டு.

கத்தர் அரசு கல்வி பாதுகாப்பு, மஸ்ஜித், மதரஸாக்கள், கல்வி நிர்வாகம் பாதுகாப்பு, ஸ்கூல், பல்கலைக்கழகம் போன்றவை நன்முறையில் நடத்துகிறது. அஹ்காப் என்னும் கல்வி பரிபாலனம் போன்றவை அரசாங்கத்தால் நடத்தப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் எமீருக்கு ஆலோசனை நல்குகின்றனர். இப்போது கத்தரை எமீர் தமீம் ஆட்சி செய்கிறார். இவர் தாயும் குடும்பமும் மேல் நாடுகளில் கல்வி பயின்றவர்கள். எமீர் பாராளுமன்ற உறுப்பினர் ஆலோசனையை கேட்டு ஆட்சி செய்கிறார். அதிக அளவு அரச குடும்பம் அரசின் பல்வேறு பணிகளில் பணியாற்றுகின்றனர். அரபிகளில் அரிதான ஆட்கள் மேனாட்டு உடையும் பெரும்பாலோர் அவர்களின் கலாச்சார வெள்ளுடையும் அணிகின்றனர்.

### அல்கோர்

இது ஓர் கடற்கரை ஊர். இங்கு ஓய்வு நாட்களில் கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் மக்கள் பொழுதுபோக்க இருக்கைக சிமெண்டில் அழகிய முறையில் செய்து வைத்துள்ளனர். கடல் குளம் போல் அமைதியாக காட்சியளிக்கிறது. மீன் வியாபார சந்தை பார்த்தேன். இங்கு மீன் பிடி தொழில் தமிழர், மலையாளி, வங்காளி போன்றோர் அரபிகளின் தொழிலாளியாக வேலை செய்கின்றனர். இங்கு மலையாள ஸ்ரீலங்காரர்களை பார்த்து அளவிளாவினேன். இப்பகுதியில் மஸ்ஜித் உள்ளது. அழகிய கடற்கரை நகரம். அருகாமையில் லூலூ உள்ளது. அவசியப்பட்டால் அனைத்து பொருட்களும் வாங்கலாம்.

இறைவனின் கிருபையால் மகளின் குடும்பத்தார் அழைப்பை ஏற்று கத்தர் இரு தடவை சென்று வந்தேன். அங்க கண்டதை இக்கட்டுரையாக எழுதியுள்ளேன். எல்லாப் புகழும் இறைவனுக்கே.



**குழந்தை வளர்ப்புக் கலையைக் கற்றுக் கொடுக்கும் நிறுவனம் ஒன்றுக்குச் சென்றேன். நிறுவனத்தின் தலைவர் ஒரு பெருந்தொகையை கட்டணமாகக் கேட்டார். அவர் கேட்கும் கட்டணத்தில் பெரிய பொட்டலம் நூற்களும் அடங்கும்.**

அந்த நூற்கள் பல்வேறு தலைப்புகளில் இடம் பெற்றிருந்தன.

அவற்றில் சில,

குழந்தை வளர்ப்பு கலை, நல்ல பெற்றோ ராய் இருப்படி எப்படி? நல்ல மனைவியாக இருப்பது எப்படி?

இப்படி, எப்படி? என்ற நூற்கள் இப்போது புத்தக அங்காடியை நிரப்பிக் கொண்டிருக் கின்றன.

இந்த வியாபார உத்திக்கு இந்த குழந்தை வளர்ப்புக் கலையைக் கற்றுக் கொடுக்கும் நிறுவனமும் ஒரு வெளியீட்டு நிறுவனமாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இத்தனை எப்படி?யையும் எப்படி படித்து முடிப்பது என்று கலங்கிக் கொண்டிருந்த போதுதான் அந்த நண்பர் வந்தார்.

அவரிடம் நல்ல கணவனாக இருப்பது எப்படி? நல்ல தந்தையாக இருப்பது எப்படி? என்ற எப்படிகளையெல்லாம் பற்றிக் கேட்டேன்.

அவர் செட்டென பதில் சொன்னார். நல்ல மனிதனாக இரு எல்லா எப்படிகளுக்கும் விடை கிடைத்துவிடும் என்றார்.

எப்படி என்றேன்.

ஒருவன் நல்ல முஸ்லிமாக, நல்ல மனிதனாக இருக்கின்றான் என்றால் அவன் நிச்சயமாக நல்ல கணவனாக, நல்ல தந்தையாக இருப்பான். அவன் நிச்சயமாக தன் நண்பர்களுக்கு உற்ற நண்பனாக இருப்பான். அவன் நிச்சயமாக நல்ல அண்டை வீட்டார்களாக இருப்பான் என்றார்.

இத்தோடு நிறுத்தவில்லை அவர். அதன் மறுபக்கத்தையும் சொன்னார்.

ஒருவன் நல்ல மனிதானகவும் கெட்ட கணவனாகவும் இருக்க வாய்ப்பில்லை. அதேபோல் ஒருவன் நல்ல கணவனாகவும் கெட்ட தந்தையாகவும் இருக்க வாய்ப்பில்லை என்றார்.

இன்னும் விளக்கினார். சூது, சூழ்ச்சி, கெடுக்கும் குரூரம் இவற்றைக் கொண்ட ஒரு மனிதன் நல்ல கணவனாகவோ நல்ல தந்தை யாகவோ நல்ல நண்பனாகவோ இருக்க வாய்ப் பில்லை. இது பெண்களுக்கும் அப்படியே பொருந்தும். தன்னுடைய இந்த விளக்கத்திற்கு விஞ்ஞானம் என்ற அறிவியலையும்



# அன்புக் குழந்தைகளும் அநாதைகளும்

வம்புக்கிழுத்தார்.

அவர் சொல்வது பல வழிகளில் பொருத்த மாக இருந்ததால் கேட்டுக் கொண்டிருந்தேன்.

அவர் சொன்னவற்றையெல்லாம் அப்படியே சொன்னால் சோர்வுதட்டும். அதனால் 'சாறுமட்டும்' போதும் என சந்தோஷப்படுவோம்.!

குழந்தைகளிடம் தீய பழக்க வழக்கங்கள் படிந்திட ஒரே வாய்ப்புதான் உண்டாம்.

அது, அந்தக் குழந்தைகளின் பெற்றோர்கள் தீய பழக்க வழக்கங்கள் உடையவர்களாக இருப்பதுதான்.

ஏன் தீயகுணம் கொண்டவர்களின் குழந்தைகள் நல்லவர்களாக வளர்ந்திட வாய்ப்பே இல்லையா? எனக் கேட்டேன். உண்டு.! ஆனால், அது மிகக் குறைவு என்றார்.

குழந்தைகள் சிறுவயதில் தங்கள் பெற்றோர் களைப் பார்த்தே பாடம் படிக்கினறன.

பெற்றோர்களின் நடவடிக்கைகளைத்தான் குழந்தைகள் முன்மாதிரியாக எடுத்துக் கொள்கின்றார்கள். பெற்றோர்களின் செயல்கள் பசுமரத்து ஆணிபோல் அவர்களின் மனதில் பதிந்துவிடுகின்றன.

**அவை, 1. ஆண் தன்மைகள், 2. பெண் தன்மைகள்**

"மனதால் கடினமான தன்மைகள், தர்க்கம், திட்டமிடல், திடமான முடிவுகள், பொருளா தாரம் தொடர்பான ஏற்றத்தாழ்வுகள் அவற்றைத் தாக்குப்பிடிப்பது, வாழ்க்கையில் சவால்களை எதிர்ாகொள்வது. இவை ஆண் தன்மைகளாம்.

அன்பு, உணர்ச்சி வயப்படல், எதிலும் எளிதில் மிருதுவாகிவிடுதல், நயம், நளினம், வெட்கம், நாணம், கலையம் என்பன பெண் தன்மைகளாம். (Dr. Rajan Boshle in NW, April-2003)

இவை இரண்டுமே வளர்க்கப்பட வேண்டு மாம். அதனால் பெற்றோர்களின் கவனமும் முறையான அளவில் தேவைப்படுகின்றனவாம்.

இல்லையேல் குழந்தைகளிடம் சீரான வளர்ச்சியைப் பார்க்கவியலாது.



பெற்றோர்களில் தந்தை நீண்ட நாட்கள் வெளிநாடுகளில் தங்கிவிட்டால் குழந்தை களிடம் வளர வேண்டிய ஆண் தன்மைகள் குறைந்துவிடுகின்றன.

அன்னையின் அரவணைப்பில் செல்லப் பிள்ளையாய் வளர்ந்து எதையும் சாதிக்கவோ, அசாதாரணமான சூழ்நிலைகளைச் சந்திக்கவோ நெஞ்சுரமற்றவையாய் ஆகிவிடுகின்றார்கள்.

இன்னும்சிலவேளைகளில்வெளிசூழ்நிலை களின் தாக்குதலுக்கு ஆளாகி கெட்டுப்போகும் வாய்ப்பு உண்டு. 'சம்பாதிப்பதே வாழ்வு' வாழ்கைக்காக சம்பாத்தியும் என்றில்லாத போது பல இழப்புகள், குடும்ப வாழ்வியலும் சமுதாய வாழ்வியலும்.

இதில் குழந்தைகள் பெரிய அளவில் பாதிக் கப்படுகின்றார்கள். இஸ்லாமிய சொல்வழக்கில் குழந்தைகளின்உரிமைகள்பறிக்கப்படுகின்றன.

உண்மையைச் சொன்னால் இந்தக் குழந்தைகள், பெற்றவர்கள் இருந்துமு பாதி அநாதைகளாய் வாழ்கின்றார்கள்.

அவர்களுக்கு ஒரு பகுதி கவனிப்பு, அன்பு, அரவணைப்பு இவை கிடைக்காமலேயே போய்விடுகின்றன. ஆகவே குடும்பத்தோடு குடிபெயர்ந்து வாழ வேண்டும். அல்லது விரை வில் நல்லதொரு வழியைத் தேடிக்கொண்டு இங்கே வந்துவிட வேண்டும். அளவோடு, அதே நேரத்தில் குடும்பத்தோடு வாழக்கற்றுக் கொள்ள வேண்டும்.

உண்மையாகவே கவனிப்பாரற்ற குழந்தை களின் நிலையோ, இவர்களைத்தான் சொல் வழக்கில் அநாதைகள் என்கின்றோம்.

இஸ்லாமிய சமுதாய அமைப்பில் இப்படியொரு நிலை வருவதில்லை. காரணம்,

தாய் தந்தையரை இழந்த குழந்தைகளைப் பாதுகாத்து பாசம் செலுத்தி பராமரிப்பது என்பது அவர்களின் நெருங்கிய உறவினர்களின் கடமை, அவர்கள் நிதி நெருக்கடியினாலோ வறுமையிலானாலோ அந்தக் குழந்தைகளின் செலவுகளை சமாளிக்க இயலவில்லை என்றால் 'பைத்துல்மால்' என்ற பொதுநிதி கருவூலம் அதற்குரிய தொகையை வழங்கும்.

**இறைவன் தன் திருமறையில் கூறுகின்றான் :**

"நபியே! நியாயத் தீர்ப்பைப் பொய்ப் பிக்கின்றானே அவனை நீர் பார்த்தீரா? பின்னர் அவன்தான் அநாதைகளை விரட்டுகின்றான். மேலும் ஏழைக்கு உணவளிப்பதின் பேரிலும் அவன் தூண்டுவதில்லை"

(சூரத்துல் மாவூன் 107:1-3)

இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் சொன்னார்கள் :

"நானும், ஓர் அநாதையைக் கவனித்துப் பராமரிப்பவரும் இப்படி இணைந்து சுவர்க் கத்தில் நுழைவோம். இப்படி எனச் சொன்ன போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஆட் காட்டி விரலையும் நடுவிரலையும் இணைத்து உயர்த்திக் காட்டினார்கள்"

அறிவிப்பாளர் : ஸஹல் இப்னு ஸஅத் (ரழி), நூல், புகாரீ - 6005

இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இன்னும் சொன்னார்கள் :

"நானும் ஓர் அநாதையைப் பராமரிப்ப வரும் அந்த அநாதை அவருக்கு உறவினராக இருக்கலாம் அல்லது அவருக்குப் புதியவராகவு மிருக்கலாம். இருவரும் சுவர்க்கத்தில் இப்படி இருப்போம்" எனச்சொல்லி தன் ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் இணைத்து எடுத்துக்காட்டினார்கள்.

அறிவிப்பாளர் - அபூஹுரைரா (ரழி), நூல் புகாரீ.

ஆக, அநாதைகளையும் நம்மோடு வைத்து அன்புகாட்டி அரவணைத்து வளர்த்து வாழ வைக்க வேண்டும். இதனால் அவர்களும் ஆண், பெண் புரவலர்களின் அன்பு, அரவணைப்பு எல்லாம் பெற்று நல்லவர்களாய் வாழ்வார்கள். நாம் சுவர்க்கத்தை சன்மானமாய் பெறுவோம்.

இப்படி இஸ்லாமிய சமுதாய அமைப்பில் அநாதைகளும் ஆண், பெண் இருபாலரின் அரவணைப்பையும் பெற்று வாழ்வாங்கு வாழ்வார்கள்.

- MGM




தலையங்கம்

# விடுதலை...


உலகமெங்கும் ஆதிக்க வெறி பிடித்தவர்கள் தங்களுக்கு கீழுள்ள மக்களை இனத்தால், நிறத்தால், மொழியால், ஜாதி, மதம், பொருளாதாரம், சிறுபான்மை போன்ற பெயரால் மக்களுக்கு பல இன்னல்களை துயரங்களை, இழப்புகளை ஏற்படுத்தி மகிழ்ச்சி கொள்கிறார்கள். மக்கள் தங்களுக்கு அடிமைகளாக வாழ வேண்டும் என்று நினைக்கிறார்கள். இல்லையேல், உலகில் வாழ இயலாதவர்களாக மாற்றி விடுகிறார்கள். உலகமெங்கும் இப்பிரச்சினை தொடர்ச்சியாக தீர்வுகாண முடியாமல் நடந்தேறி வருகிறது. இஸ்லாம் மட்டுமே இப்பிரச்சனைகளுக்கு தீர்வு அளிக்கிறது.

முதலில் இஸ்லாம் இம்மக்களை ஓர் இறை கோட்பாட்டின் பக்கம் அழைக்கிறது. "லாயிலாஹா இல்லல்லாஹு" வணங்குவதற்கும், அடிபணிவதற்கும் அல்லாஹ் ஒருவனே தகுதியானவன். அவனே நம்மை படைத்தான், உணவளிக்கின்றான், உதவி புரிகின்றான், பாதுகாப்பு அளிக்கின்றான். இந்த பிரபஞ்சம் அனைத்தும் அவன் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது. அவன்தான் எல்லா படைப்பினங்களுக்கும் எஜமான். மனிதர்களாகிய நாம் எல்லாமும் அவனுடைய அடிமைகள். நாம் எந்த மனிதனுக்கும் அடிமைப்பட தேவையில்லை. எல்லா மனிதர்களும் சமம். இப்படிப்பட்ட கொள்கை முதலில் மனிதனை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அளிக்கிறது. மற்ற மனிதர்களை கண்டு அஞ்சுகின்ற நிலையிலிருந்து அல்லாஹ்வை மட்டுமே அஞ்சுகின்ற சுதந்திர மனிதனாக மாற்றுகிறது. கோழைகளாக இருந்தவனை, வீரனாக மாற்றுகிறது இஸ்லாம்.




இனவெறிக்கு எதிராகப் போராடி இஸ்லாத்தை ஏற்று பல லட்சம் மக்களை விடுதலை அடையச் செய்த மால்கம்-X விடுதலை பற்றி இப்படி கூறுகிறார் :

"உன் விடுதலைக்காக நீ எதையும் செய்வாய் என்பதை உன் எதிரிக்கு புரிய வைப்பதன் மூலமே உனக்கு விடுதலை கிடைக்கும்."



# கோவையில் நபிகள் நாயகம் பிறந்த நாள் விழாவில் பெரியார் ஆற்றிய உரை...

தலைவரவர்களே! நண்பர்களே! முஸ்லீம் சமூகத்திற்கே முக்கியமான இந்த நாளில் எனக்கும் ஒரு சந்தர்ப்பமளித்து இங்கு பேசும்படி செய்ததற்கு எனது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இங்கு எனக்கு முன்பாக மௌல்வி சாயபு அவர்களும் ராவ்சாகிப் இராமச்சந்திரன் செட்டியார் அவர்களும் மிக்க அருமையான விஷயங்களை தக்க நூல் ஆதார ஆராய்ச்சியுடன் எடுத்துச் சொன்னார்கள். நானோ அந்தக் காரியத்தில் சூனியமானவன். அதாவது நூலராய்ச்சி என்பது எனக்கு கிடையாது. நான் அதில் அதிகக் கவலை செலுத்தியதுமில்லை. அது மாத்திரமல்லாமல் பெரியவர்கள், மதத் தலைவர்கள் என்பவர்களின் பெருமைகளும், அவர்களது உபதேசப் பெருமைகளுமே ஒரு சமூகத்தின் மேன்மைக்குப் போதுமானது என்று நான் கருதுகின்றவனுமல்ல. ஆதாரங்கள் எப்படிப் பட்டதாக இருந்தாலும், மதத்தலைவர்கள் ‘மத அவதார புருஷர்கள்’ என்பவர்கள் எவ்வளவு பெருமை பொருந்தியவர்களாக இருந்தாலும், இன்றைய நம்முடைய யோக்கியதை பிரத்தியட்சத்தில் எப்படி இருக்கின்றது? உலக மக்கள் வரிசையில் நமது நிலைமை என்ன? நமது பிரத்தியட்ச அனுபவ நடவடிக்கையும், மதிப்பும் எவ்வளவில் இருக்கின்றன? இதற்கு என்ன காரணம்? என்பவை போன்றவைகள் தான் எனது ஆராய்ச்சி யாகும். அவைகளை ஆதாரமாகக் கொண்டு தான் பேச வேண்டுமென்பது எனது அபிப்பிராயம்.

அன்றியும் மௌல்வி சாயபு அவர்கள் தங்களது மதப் பெரியார் அவர்கள் பெருமையையும் மத ஆதாரமாகிய குர்ஆன் பெருமையையும் எடுத்துச் சொன்னது போல் நான் சொல்ல வேண்டுமானால் எனது மதம் என்று சொல்லப்படும் இந்து மதத்திற்கு யார் மதப் பெரியார்? எது மத ஆதாராம்? என்பதைக் கண்டுபிடிப்பதே கஷ்டமான பிரச்சினையாக ஏற்பட்டு விடும். ஒரு சமயம் எனக்கு கஷ்டமாக இருப்பதற்கு காரணம் இருந்தாலும் இருக்கலாம்.

ஏனெனில் நான் நூலாராய்ச்சி அற்றவன். அது மாத்திரமல்லாமல் ‘மதங்களுக்கே விரோதி, அதிலும் இந்து மதத்திற்கே ஒரு பெரிய துவேஷியாகவும், துரோகியாகவும் இருக்கின்றவன்’

என்பதாகவெல்லாம் சொல்லப்படுகின்றவன். ஆதலால் என்னைத் தள்ளி விட்டாலும் மற்றபடி வேறு எந்த இந்து மதப் பக்தர்களோ, பரிபாலகர்களோ, அபிமானிகளோ, பண்டிதர் களோ, ஆராய்ச்சியாளர்களோ, மத குருமார் களோ யாராக இருந்தாலும் அவர்கள் இந்து மதத்திற்கு யார் தலைவர்? எது ஆதாரம்? என்பது போன்ற விஷயங்களை எடுத்துச் சொல்வது என்பது சுலபமான காரியமாயில்லை.

மத ஆதாரம் என்று சொன்னால் முஸ்லீம்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுகின்ற வர்கள் ஒருவராவது "நபி அவர்களையும் குர்ஆனையும் பற்றிக் கேட்டிராதவர்களும், அவைகளை ஒப்புக் கொள்ள மாட்டேன்" என்று மறுப்பவர்களும் இருக்கவே மாட்டார்கள். ஒப்புக் கொண்டே தீருவார்கள். ஆனால் இந்து என்று தங்களை சொல்லிக் கொள்ளுகின்ற வர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு உறுதியான, எல்லோரும் ஒப்புக் கொள்ளும்படியான, யாராலும் மறுக்க முடியாததான ஒரு மதத் தலைவரோ, ஒரு மத ஆதாரமோ இருப்பதாக இந்துக்கள் யாரும் சொல்ல முடியாது. அது மாத்திரமல்ல ஒன்றை மற்றொன்று ஆட்சேபிக் கும்படியானதாகவும், ஒருவரை மற்றொருவர் குற்றம் சொல்லும்படியானதாகவும் தான் மதத் தலைவர்களும், மத ஆதாரங்களும் இருக்கின்றன.

நண்பர்களே!

உலகமெல்லாம் விழிப்படைந்து மதங்களின் மீது வெறுப்படைந்து அவ்வளவோடு மாத்திர மல்லாமல் கடவுளைப் பற்றிய ஆராய்ச்சியி லேயும் இறங்கி சிலர் 'கடவுளே இல்லை' யென்றும், சிலர் 'சந்தேகம்' என்றும் சிலர் 'இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? நமக்கு அதைப் பற்றிய கவலையே வேண்டாம்' என்றும், கடவுள் உணர்ச்சியே உலக முற்போக் குக்கும், அறிவு வளர்ச்சிக்கும், சமத்துவத்திற்கும், சமதர்மத்திற்கும் தடையானது என்றும், 'கடவுள் உணர்ச்சி ஒழிந்தாலொழிய சமதர்மம் நிலவ முடியாது' என்றும் சொல்லிக் கொண்டும், உலகில் தேசம், மதம், ஜாதி, நிறம், வகுப்பு என்பவைகளான வித்தியாசங்களே இல்லாமல் எல்லா மக்களும் சமத்துவமுள்ள சகோதரர் களே என்பதாகவும், 'உன் தேசம், என் தேசம்?' என்று சொல்லுவதே குறுகின நோக்கமும், வகுப்பு துவேஷ உணர்ச்சியும் கொண்ட தென்றும், தேசத்துக்கு தேசம் யுத்தம் என்பதே கூடாதென்பதாகவும், ஜாதி மதத் தேசப்பிரச் சினையே உலகத்தில் இருக்கக்கூடாதென்றும் பேசப்படுகின்ற, அவற்றிற்காக பெரிய பெரிய முயற்சிகளும் செய்யப்படுகின்ற இந்தக் காலத்தில் தனித் தனி மத நூல்கள் ஆராய்ச்சியில் இறங்கி அவற்றிலிருந்து உண்மைகளைக் கண்டுபிடித்து மக்கள் யோக்கிதையையும், போக்கையும் நிர்ணயிப்பது என்பது இனி ஒருநாளும் பயனளிக்கக் கூடிய தாகாதென்பதே எனது அபிப்பிராயம்.

மதப்பிடிவாத காரணமாகவும், பிரத்தியக்ஷ காரியங்களைக் கொண்டு தங்கள் தங்கள் நாட்டையும், சமூகத்தையும் மதிக்காமல் ஆதாரங்களைக் கொண்டு தங்களைப் பெருமை யாய் நினைத்துக்கொண்டு, முற்போக்கில் கவலை இல்லாமல் இருந்ததாலுமே இந்த நாடு இன்று உலக மக்கள் முன்பு மிகக் கேவலமாகவும், இழிவாகவும் கருதப்பட்டு வருகின்றது என்பது எனதபிப்பிராயமாகும். மற்றும் இதனாலேயே பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக இந்த நாடு அடிமை நாடாகவும், அடிமை சமூகமா கவும் இருந்து வருகின்றது என்பதும் எனது அபிப்பிராயமாகும். உலகத்தில் புத்தரை தங்கள் மத போதகராக சொல்லிக் கொண்டு ஒரு பெரும் சமூகம், சுதந்திரத்துடன் வெகு மேன்மையாய் வாழுகின்றது. கிறிஸ்துவை தங்கள் மதபோத கராகச் சொல்லிக்கொண்டு மற்றொரு பெரிய சமூகம் சுதந்திரத்துடன் மேன்மையாய் வாழு கின்றது. அது போலவே முகமது நபியை தங்கள் மதபோதகராகச் சொல்லிக் கொண்டு இனியும் ஒரு பெரிய சமூகம் மிக மேன்மையாகவும், சுதந்திரமாகவும் வாழுகின்றது.

ஆனால் இந்திய சமூகம் யார் பேரைச் சொல்லிக் கொண்டாவது எப்போதாவது மேன்மையாக வாழ்ந்ததாகவோ, சுதந்திரமாய் இருந்ததாகவோ கதையாவது இருக்கின்றதா? காரியத்திலாவது இருக்கின்றதா? என்று பாருங்கள். ஏன் இல்லை? புத்தர் கிறிஸ்து முகமது நபியாகியவர்கள் சீர்திருத்தக்காரர்களாய் தோன்றினார்கள். அந்தந்த நாட்டு மக்கள்

**“மதங்கள் ஒழிந்த பிறகு தான் உலக சமாதானமும், ஒற்றுமையும், சாந்தியும் ஏற்பட முடியும்?” என்பது அநேக அறிஞர்களது அபிப்பிராயமானாலும், அதற்கு விரோதமாக ஏதாவது ஒரு மதம் இருக்கும்போது “உலக சமாதானம் ஏற்பட்டு விட்டது” “சாந்தி ஏற்பட்டு விட்டது” என்று சொல்லப் படுமானால் அது இஸ்லாம் கொள்கைகளாகத் தானிருக்கக் கூடும் என்று கருதுகின்றேன்.**

அப்பெரியார்களது சீர்திருத்தத்தை ஏற்றுக் கொண்டார்கள். நடவடிக்கையில் அவர்கள் வேறு எந்த எந்த விஷங்களில் தவறுதலாய் நடந்தவர்கள் என்று சொல்வதானாலும் தங்கள் தங்கள் சமூகத்தைப் பெருக்கி, எல்லோரையும் இழுத்துப் பிடித்து ஒன்றாக்கி, ஒற்றுமை உணர்ச்சியும், சமத்துவ உணர்ச்சியும், சகோதர உணர்ச்சியும் கொண்டு நடந்து கொள்ளுவதில் ஒருவரும் தவறவேயில்லை. அந்த ஒரு காரியமே அந்தந்த சமூகத்தை மேன்மையாய் மானத்துடன் வாழச் செய்கின்றது.

நம் நாடு, நம் சமூகம் என்னும் இந்து சமூகம் இந்தக் காரியத்தில் சுத்த சூன்யதிசை அடைந்து, தனது சமூகத்தை மற்ற எல்லா சமூகத்தா ருக்கும் வினியோகித்துக் கொண்டு க்ஷீணதிசை அடைந்து வருகின்றது. இன்றைய தினம் இந்தியாவில் 8-கோடி முஸ்லீம் மக்கள் வாழு கின்றார்கள். இனியும் வருஷ வருஷம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகின்றார்கள். இந்த நாட்டில் இவர்கள் எப்படிப் பெருகினார்கள்? இதற்குக் காரணம் அவர்களுடைய சமத்துவ உணர்ச்சியும், சகோதர உணர்ச்சியும் அல்லாமல் வேறு எதைச் சொல்ல முடியும்? என்று கேட்கின்றேன்.

“முஸ்லீம்கள் பலாத்காரத்தை உபயோகித்து தங்கள் சமூகத்தைப் பெருக்கினார்கள்” என்று சுலபமாய் சொல்லி விடலாம். அவர்கள் அதை மறுத்தும்கூட நாம் வாஸ்தவம் என்றே வைத்துக் கொண்டாலும் அதுபோலவே இந்துக்களையும் பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டாம் என்று யார் தடுத்தார்கள்? எந்த மதக் கொள்கை தடுத்தது? இந்துக்களும் பலாத்காரத்தை உபயோகிக்கவில்லை என்று யாராவது சொல்லிவிட முடியுமா? புராணங்களில் சொல்லப்படும் தேவர்கள் - அசுரர்கள் சண்டையெல்லாம் சாத்வீகமா? இராமாயண, பாரத சம்பவங்கள் என்பதெல்லாம் அஹிம்சாத் தத்துவமா? சமணர், சைவர் கொலைபாதக சரித்திரமெல்லாம் அன்புமயமா? சமணரைக் கழுவேற்றிய உற்சவங்கள் பலாத்காரமற்ற தன்மையைக் காட்டுகின்றனவா? பௌத்தர் கோயில்களை இடித்து, விக்கிரகங்களை உடைத்து, உறுக்கி சீரங்கம் கோவில் கட்டிய வைணவ சமய உண்மைகள் என்பவை எல்லாம் சமரச நோக்கமா? என்பனவற்றை யோசித்துப் பாருங்கள். இப்படியெல்லாம் இருந்தும் ஏன் இந்து சமூகம் பெருகவில்லை - மேன்மையாக வாழவில்லை - மானத்தோடு பிழைக்க முடிய வில்லை? இந்திய நாடு மாத்திரம் அடிமை நாடாக வெகு காலமாகவே இருந்து வரக் காரணம் என்ன? என்பவைகளை யோசித்தால் உண்மை விளங்காமல் போகாது.

ஒரு மதம் அந்த மத மக்களை மோட்ச லோகத்திற்கு அழைத்துச் சென்று அங்கு அவர் களைக் கடவுளிடத்தில் உட்கார வைக்கின்றதா? என்பதல்ல எனது மத சம்பந்தமானக் கவலை. மற்றென்னவென்றால் ஒரு மதம், அந்த மத மக்களை மானத்தோடு, சுதந்திரத்தோடு, சாந்தி யோடு வாழச் செய்கின்றதா? என்பதுதான் எனது கவலை.

இந்த நாடு விடுதலை பெறாததற்கு இந்நாட்டு மதமும், சமூகமுமே முக்கிய காரணங்கள் என்று தான் சொல்லியாக வேண்டும். மக்கள் யாவரும் ஒரு சமூகமாய், ஒரு மதமாய், ஒரே சகோதரத்துவம் உள்ளவர்களா யில்லாத நாடு ஒரு நாளும் உண்மையான விடுதலையைப் பெற முடியாது என்பதை

மறந்து விடாதீர்கள்.

இந்திய நாடு ஏன் ஒரு சமூகமான, சகோ தரத்தன்மையான நாடாக யிருக்கவில்லை? என்பதை யோசித்துப் பாருங்கள். முக்கியமாய் மதங்களின் முட்டுக்கட்டைகளே அல்லாமல் வேறு என்ன காரணம் சொல்லக்கூடும்?

சகோதரத்தன்மையும், சமத்துவமுமுள்ள கொள்கையை ஏன் எல்லோரும் தழுவக் கூடாது? இதற்குப்பெயர் இந்து மதம் என்பதாய் இருந்தாலென்ன? இஸ்லாம் மார்க்கம் என்பதாய் இருந்தாலென்ன? வேறு என்னவாய் இருந்தாலென்ன? சகோதர மார்க்கம், சமத்துவ மார்க்கம், ஒற்றுமை மார்க்கம் என்பதாக உள்ள எதையும் அறிவுள்ள மனிதன் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

இந்த முக்கியத் தத்துவங்களை விட்டு விட்டு மார்க்கம் என்றால் கடவுளை அடைவ தென்றும், வெறும் வேஷம் என்றும் மாத்திரம் நினைத்துக்கொண்டு மக்கள் ஒருவருக்கொ ருவர் விருப்பு, வெறுப்பைக் காட்டுகின்றது அறிவீனமேயாகும். இந்தக்காரணங்களால்தான் நல்ல பயனளிக்கும் மார்க்கங்கள் கூட பெருக்க மடையாமல் போகின்றன. ஒரு மனிதனைப் பார்த்து வேஷ மாத்திரத்தினால் இன்ன மதக்காரன் என்று சொல்லிவிடக் கூடியதாய் இருந்தால் - தன்னை இன்ன மதக்காரன் என்று காட்டிக் கொள்வதற்கு இந்த வேஷமே போதும் என்று நினைப்பதாயிருந்தால் அது ஒரு நாளும் நல்ல பயனளிக்ககூடிய மார்க்கம் என்று சொல்லிவிட முடியாது.

இஸ்லாம் மார்க்கம் மேன்மையான மார்க்கம் என்றால் அது இந்தியாவின் மனித சமூகம் முழுவதையும் தன்னுள் அடக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு முட்டுக்கட்டையாய் இருப்பவைகளை ஒழிக்க முயற்சிக்க வேண்டும். மத சம்பந்தமான பழக்க வழக்கங்கள், வேஷங்கள் என்பவைகள் எல்லாம் ஒழிய வேண்டும். பகுத்தறிவுக்கு ஏற்ற எந்தக் காரி யத்தையும் செய்ய சுதந்திரமிருக்க வேண்டும்.

மக்களிடத்தில் அன்பு வைத்து சகோதரத் தன்மை காட்டி அன்பு உண்மை என்பவை களிடத்தில் நம்பிக்கை வைத்து மனிதர்கள்




எல்லோரையும் சமம் என்று கருதிக் கொண்டு மனித சமூகத்திற்கு சேவை செய்வதே தன் கடமை என்று நினைத்துக் கொண்டிருக்கிற வர்கள் எல்லாம் இஸ்லாம் மார்க்கக்காரர்கள் என்று சொல்வதானால் என்னையும் மற்றும் என் நண்பர்கள் பலரையும் இஸ்லாம் கொள்கைக் காரர்கள் என்று தான் முஸ்லீம்கள் எண்ண வேண்டுமேயொழிய தாடியையும், தலையை யும், உடையையும் பார்த்து இஸ்லாம் என்றும், இஸ்லாம் அல்லாதவன் என்றும் பிரிப்பதாய் இருக்கக் கூடாது. துருக்கியில் வேஷ மாத்திரத் தால் மதம் இல்லை. அதுபோலவே இந்தியா விலும் வேறுபாட்டை பார்வையிலாவது மறையும் படி மக்கள் எல்லோரும் முதலில் ஒரே மாதிரியான நடை, உடை, பாவனையாக வேண்டும். பிறகு எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். பகுத்தறிவுக்குப் பொறுத்த மான கொள்கைகளையே மனித வாழ்க்கைக்கும் மார்க்கங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இஸ்லாம் மார்க்கம் பகுத்தறிவு மார்க்க மென்றும், பகுத்தறிவின் பரீட்சைக்கு விட்டு அதன்படி நடக்கத் தயார் என்றும் முஸ்லீம்கள் இன்று தைரியமாய்ச் சொல்லுகின்றார்கள். அந்தப்படி சொல்ல மற்ற மார்க்கக்காரர்களுக்கு ஏன் தைரிமில்லை? ஏனெனில், திரு. முகமது நபி சமீபகாலத்தில் தோன்றி சமீபகாலத்தில் ஏற்படுத்திய கொள்கைகள் ஆனதினாலும் அநேக விஷயங்களில் அது பகுத்தறிவுக்கு நிற்கத்தக்க யோக்கியதை யுடையதாய் இருக்கின்றது.

ஆகவே முஸ்லீம்கள் பகுத்தறிவுக்கு விரோதமாய் ஏதாவது இருந்தால் அது தங்களது மார்க்கக் கட்டளை அல்ல என்று தள்ளிவிடவும் அவற்றை நீக்கி விடவும் பகுத்தறிவுக்காரரையெல்லாம் தங்கள் சகோதரர்கள் என்றும், இஸ்லாம் என்றும் சொல்லவும் தயாராயிருக்க வேண்டும். அது மாத்திரமல்லாமல் அவர்கள் தங்கள் சமூகம் என்றும், அன்னிய சமூகம் என்றும் வித்தியாசம் பாராட்டக் கூடாது. எல்லோரையும் பகுத்தறிவு மார்க்கமாக ஆக்க முயற்சிக்க வேண்டும். உலகமெல்லாம் ஒரே மார்க்கமாவதற்கு - பகுத்தறிவு மார்க்கமாவதற்கு முஸ்லீம்கள் பாடுபட வேண்டும். அவர்களுக்கே அதிக சௌகரியமிருக்கின்றது. ஆதலால் அதுவே உலகமத போதகர் என்று சொல்லப்படும் திரு. முகமது நபி அவர்களுக்கு நாம் செய்யும் மரியாதையாகும். இதுவே அவரது பிறந்தநாளாகிய இந்த முக்கியமான நாளில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய உண்மையாகும்.

"மதங்கள் ஒழிந்த பிறகு தான் உலக சமாதானமும், ஒற்றுமையும், சாந்தியும் ஏற்பட முடியும்?" என்பது அநேக அறிஞர்களது அபிப்பிராயமானாலும், அதற்கு விரோதமாக ஏதாவது ஒரு மதம் இருக்கும்போது "உலக சமாதானம் ஏற்பட்டுவிட்டது" "சாந்தி ஏற்பட்டுவிட்டது" என்று சொல்லப் படுமானால் அது இஸ்லாம் கொள்கைகளாகத் தானிருக்கக் கூடும் என்று கருதுகின்றேன்.

ஏனெனில் அது சமூக ஒற்றுமை, சமூக சமத்துவம் ஆகிய காரியங்களில் உலகில் மற்றெல்லோரைக் காட்டிலும் அதிகமான கவலை எடுத்து வருகின்றது.


துருக்கியையும், ஆப்கானிஸ்தானத்தையும் பார்க்கும்போது அவை எவ்வித சீர்திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ளத் துணிந்து தயாராயிருக்கின்றதாகவே காணப்படுகின்றது.

ஆகவே இந்திய முஸ்லீம்களும் அதைப் பின்பற்றினால் இஸ்லாம் கொள்கைகள் உலகக் கொள்கைகளாவதில் எவ்வித கஷ்டமும் இருக்காதென்றே கருதுகிறேன்.

(குறிப்பு : கோவை அதார்ஜமாத் மஜீத் கமிட்டியார் நடத்திய முகமது நபி பிறந்த நாள் கூட்டத்தில் ஆற்றிய உரை.

- குடி அரசு - சொற்பொழிவு - 23.08.1931


அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்பாளனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்



பிப்ரவரி 21
இனவெறி, நிறவெறியால் பாதிக்கப்படும் மக்களுக்கு "இஸ்லாமே தீர்வு" என கூறி பல இலட்சம் மக்களை இன அழிவிலிருந்து காத்த

மால்கம் X நினைவு தினம்

இன, நிற, சாதி இழிவுகளை நீக்க உறுதி ஏற்போம்!
மால்கம் X வரலாறு புத்தகம் கிடைக்கும்.

இவண்
தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்
தொடர்புக்கு : 81481 29887

# பெருநாள் தொழுகை - 2022













பீகாரின் புகழ்பெற்ற காந்தி மைதானத்தில் ஈத்வுத் பித்ர் பெருநாள் தொழுகை நடைபெற்றது. அதில் பீகார் முதல்வர் நித்தீஷ்குமார் கலந்துகொண்டு பெருநாள் தொழுகை தொழுதார். "கொரோனாவால் இந்த காந்தி மைதானத்திற்கு இரண்டு வருடங்களாக யாரும் வர முடியவில்லை. இப்போது எல்லோரும் காந்தி மைதானத்திற்கு வர முடிகின்றது. தொழ முடிகின்றது என்பதில் மகிழ்ச்சிதான் என்றார்."

---



ஆந்திர முதல்வர் YRS என்ற கீர்த்திமிக்க Y.S.இராஜசேகர் ரெட்டியின் மகன் Y.S.ஜெகன் மோகன் ரெட்டி அவர்கள் ஆந்திராவில் உள்ள 26 மாவட்டத்திற்கும் நோன்பு திறக்கும் நிகழ்ச்சிக்கு அரசின் சார்பில் ஏற்பாடு செய்திருந்தார். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் 5 லட்சம் வழங்கினார்.

அவர் 27-4-2022 அன்று விஜயவாடாவில் உள்ள இந்திராகாந்தி நகராட்சி விளையாட்டு அரங்கில் இஃப்தார் நிகழ்ச்சியில், நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். தொடர்ந்து நடந்த தொழுகையிலும் கலந்துகொண்டார். அவருடன் பல அமைச்சர்களும் சட்ட மன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



# நீண்ட நாட்கள் வாழ வேண்டுமா? குறைவாகச் சாப்பிடுங்கள்

ஒருவருடைய நீண்ட ஆயுளுக்கு அவருடைய மரபு அணுதான் மிகவும் முக்கியமான காரணமாகும். இதைத் தவிர ஒருவருடைய வாழ்க்கைமுறை மாற்றத்தினாலும் ஆயுட் காலத்தை அதிகரிக்க வாய்ப்புண்டு.

### நீண்ட ஆயுளும் குறைந்த கலோரி சத்துள்ள உணவும்

அமெரிக்காவில் லிடில்ராக் தேசிய ஆய்வுக் கூடத்தில் உணவு முறையும், ஆயுட்காலமும் பற்றி ஓர் ஆராய்ச்சி நடைபெற்றது. இது முதுமையை தள்ளிப்போட வழிகாண முயலும் ஆராய்ச்சியாளர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. இந்த ஆராய்ச்சிக்கு எலிகளைப் பயன்படுத்தினார்கள். எலிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டார்கள். முதல் பிரிவிற்கு வயிறு நிரம்ப உணவு கொடுக்காமல் குறைவான 40 சதவிகிதம் கலோரிச் சத்துள்ள உணவை மட்டுமே கொடுத்தனர். வயிறு முட்ட உணவு கொடுத்த எலிகள் இயல்பாக 30 மாதங்களில் இறந்து விட்டன.

இது என்ன வியப்பு! குறைவான கலோரி உணவை உண்ட எலிகள் 60 மாதங்கள் வரை வாழ்ந்தன. அது மட்டுமல்ல; வலிமையாகவும் விளங்கின. உணர்ச்சிகளும் நோய் எதிர்ப்புத் திறனும் துல்லியமாக வேலை செய்தன. "இச் சோதனை எங்களைத் திகைப்பில் ஆழ்த்தியது" என்கிறார் இச்சோதனைக் கூடத்தின் டைரக்டர் ரனால்ட் ஹர்ட்.

"நெடுநாட்கள் உயிர்வாழ வேண்டுமானால் மூப்புத் தன்மையின் வேகத்தைக் குறைக்க வேண்டும். அதற்கு உடலின் வெப்பத்தை மிகுதியாகக் குறைக்க வேண்டும். குறைந்த கலோரி உணவை உண்டாலே மேற்கூறியவை கைகூடும் எனும் உண்மை தெரிய வந்துள்ளது" என்கிறார் அவர்.

### குறைவான கலோரியை எப்படிக் கண்டறிவது?

ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரு கிலோகிராம் எடைக்கு 25 - 35 கலோரி தேவைப்படும். கீழ்வரும் அட்டவணையில் நாம் தினமும் உபயோகிக்கும் உணவுவகைகளின் கலோரிச்

| உணவு வகைகள் | அளவு | கலோரி |
|---|---|---|
| இட்லி | 1 | 85 |
| தோசை | 1 | 103 |
| சப்பாத்தி | 1 | 103 |
| பூரி | 1 | 130 |
| உப்புமா | 100 கி | 103 |
| தேங்காய் சட்னி | 100 கி | 116 |
| சாம்பார் | 100 மி.கி | 75.5 |
| சாதம் | 100 கி | 85 |
| பருப்பு | 100 மி.கி | 98 |
| வேக வைத்த முட்டை | 1 | 67 |
| மட்டன் பொறியல் | 100 கி | 138 |
| சிக்கன் பொறியல் | 100 கி | 138 |
| மீன் வறுவல் | 1 துண்டு | 135 |
| ஜிலேபி | 1 | 66 |
| லட்டு | 1 | 155 |
| காபி | 100 மி.லி. | 74.75 |
| ராகி | 100 | 82 |
| திணை | 100 | 82.75 |
| கம்பு | 100 | 90.25 |

சத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இன்றிலிருந்தே இதைக் கடைப்பிடித்துப் பாருங்களேன்!

அமெரிக்காவில் லிடில்ராக் தேசிய ஆய்வுக் கூடத்தில் நடைபெற்ற ஆராய்ச்சியை மனத்தில் கொண்டு அதிக கலோரிச் சத்துள்ள உணவுகளைக் குறைத்து உண்டாலே குறைந்த கலோரி சத்து உண்பதற்கு ஈடாகும். இதை நடைமுறையில் செயல்படுத்துவது சற்று சிரமம்தான். ஆனால், இன்னொரு தோசை அல்லது இட்லி சாப்பிட வேண்டும்போலத் தோன்றும்போதே உணவை முடித்துக் கொண்டு கையை கழுவி விடுவது ஓர் எளிமையான வழி. அதாவது பசி சற்று இருக்கும்போதே எழுந்து கையைச் கழுவ சென்று விடுங்கள். இப்பழக்கத்தை தினமும் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் நாளடைவில் குறைந்த கலோரியை எடுத்துக் கொள்வதில் சிரமம் இருக்காது.

அரை வயிறு உணவு, கால் வயிறு நீர், கால் வயிறு காற்று என்ற முறையில் உண்ணுவது அவசியம். இம்முறையை கடைபிடிக்கும்போது உடல் சோர்வு மற்றும் எடை அதிகளவில் குறைந்தால் உடனே மருத்துவரின் ஆலோசனையைப் பெறவும். முடிந்தால் வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை விரதம் இருப்பது நல்லது. இந்த எளிய முறையை தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் நீண்ட நாட்கள் நலமாக வாழலாம்!

இந்த வேலையை நாம் நோற்கும் நோன்பு செய்துவிடுகின்றது. நன்றி - முதுமை எனும் பூங்காற்று.

# எந்த காஷ்மீர் பண்டிட்டும் ஆயுதத்தை எடுக்கவில்லை, வெடிகுண்டு மட்டும்தான் வைத்தார்கள்

## RSS hand seen in Jammu blasts

By DWARIKA PRASAD SHARMA
The Times of India News Service
JAMMU, December 20.

TAKING the cue from the countrywide action against the RSS, the Jammu and Kashmir government has stated that there was an RSS hand in some of the recent bomb blasts in the Jammu region, including the one at a school here in October.

This official disclosure forms the centrepiece of the charges listed in the government notification of December 15 declaring the RSS, the VHP and the Bajrang Dal, an unlawful organisation under the Jammu and Kashmir Criminal Law (Amendment) Act, 1983.

In the notification, it was stated that at a joint-meeting of the three organisations held at Geeta Bhavan here on December 9, workers of the three organisations showed bricks and other material as proof that the Babri mosque had been demolished, thereby giving rise to a feeling of enmity and hatred among different religious groups in the state.

A common feature of the separate orders against the three organisations is the assertion that the authorities have in their possession other facts and material which they consider to be against the public interest to disclose.

The recent spate of bomb blasts in the Jammu region had been variously attributed to Kashmir and Punjab militants and Paksitani agents, till the bomb blast at Shri Ranbir Higher secondary school here on October 26 in which one of the two Kashmiri Pandit students carrying the time bomb was killed when it exploded before it could be planted. Their targets were students from the Valley brought here to take their examinations in secure conditions.

The surviving youth was interrogated while he was convalescing in the police hospital, but the findings were kept secret on the ground that any disclosure would hamper further investigation of the case.

The incident had caused dismay in Jammu. It had provided a new perspective on militancy-related incidents in the region and had even shocked the police who had till then ascribed all blasts to the militants. The Shiv Sena, which does not see eye to eye with the 'Sangh parivar', had even given a call to evict the pandit migrants as they were abusing Jammu's hospitality and went working to cause a communal rift here. As a result, the Pandit community had to spent a few anxious weeks.

The people also recall the bomb blast at Veer Bhavan, the RSS headquarters here, last year in which two Pandit youths were injured. While the RSS blamed it on militants, preliminary investigation indicated that a time bomb might have gone off while being assembled. The case had been mysteriously shelved till it was suggested after the school blast that there was a connection between the two.

Various political parties, like the Congress and the National Conference, had demanded that the investigation into the school blast be taken to its logical conclusion and the public be informed accordingly. But it took the Ayodhya incident and the steps taken by the Centre in its wake and the directive given to the states, which finally forced the state authorities to reveal a part of the story.

The three orders under the notification also charge the organisations with instigating their workers to demolish the Babri mosque to build a Ram tample in its place. The organisations and interested persons have been given a month to make representation against the orders.

On Oct 26, 1992, two Kashmiri pandits tried to place a time bomb in SRML School Jammu to target Muslim students from the valley who were brought there to write exams.

The bomb accidentally exploded killing one & injuring the other

1992 டிசம்பர் 20, Times of India வில் வந்த செய்தி

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002